# உதயன்

சுடர் 31 கதிர் 023 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 03, சனிக்கிழமை 19.12.2015



இன்று ஜாதிக சம்பத சுப்பர் பரிசு

ரூ. 9,388,506.00

NLB அதிர்ஷ்டத்தின் திரு மெயர்
தேசிய லொத்தர் சபை


# புதிய அரசமைப்புக்குள் சகலருக்கும் சமவுரிமை

## இலங்கையிடம் வலியுறுத்துகிறது அமெரிக்கா



கொழும்பு, டிசெம்பர் 19
இலங்கையின் புதிய அரசமைப்பு வரைவில் இனம், மதம் என்பதைப் பொருட்படுத்தாமல் சகலருக்கும் சம உரிமை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென இலங்கையிடம் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளது அமெரிக்கா.

அத்துடன், மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற - அமைதியான - வளமான - சமரசமான ஒன்றுபட்ட இலங்கை என்ற இந்த நாட்டின் பிரஜைகளின் நோக்கை ஆதரிப்பதாகவும் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

நல்லாட்சி அரசினால் விரைவில் முன்வைக்கப்படவுள்ள புதிய அரசமைப்பு தொடர்பாக, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் பக். 22

## நிரபராதியென படைச்சிப்பாய் விடுவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு, இலங்கை இராணுவத்தின் இரகசியங்களை 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்ட பக். 22

முச்சந்தி முரளி



கழுதைக்கு உபதேசம் காதுக்குள் சொல்லியும்...

## இன்று பட்ஜெட் வாக்கெடுப்பு

கொழும்பு, டிசெ. 19
நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் 2016ஆம் நிதி யாண்டுக்கான பக். 22



## இலங்கை வரவுள்ளார் நியூசிலாந்துப் பிரதமர்

கொழும்பு, டிசெ.19
நியூசிலாந்துப் பிரதமர் ஜோன் கீ அடுத்த ஆண்டு இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்தத் தகவலை நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பக். 25

# காரைநகர் மீனவரைப் படகுடன் இழுத்துச் சென்ற இந்திய ட்றோலர்

## ரூ. 2 லட்சம் பெறுமதியான வலைகளையும் அறுத்து நாசம்

காரைநகர், டிசெ.19
வடக்குக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய இந்திய மீனவரின் ட்றோலர் படகுகள் காரைநகர் மீனவரைப் படகுடன் இழுத்துச் சென்றதுடன் அவரின் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளையும் அறுத்து நாசம் செய்துள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு 10 மணிக்கு இடம் பெற்றுள்ளதாக, குறித்த மீனவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள் பக். 22

# வடக்கு மாகாண சபையில் டக்ளஸால் மூண்ட சர்ச்சை

யாழ்ப்பாணம், டிசெ. 19
வடக்கு மாகாண சபையின் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் இறுதி நேரத்தில், ஆளும் கட்சிக்கும் - எதிர்க்கட்சிக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் மூண்டது. சுமார் 20 நிமிடங்கள் வரையில் இந்த மோதல் சூடாக இடம்பெற்றது. ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா குறித்து பல குற்றச் சாட்டுக்களை ஆளும் கட்சியினர் முன்வைத்ததால், கொதிப் பக். 25

# மீள்குடியேற்ற கொள்கை தயாரிப்பு வடக்கில் இரு வாரங்களில் நிறைவு

## அதன் பின்னர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19
வடக்கு மாகாண மீள்குடியேற்றக் கொள்கைத் தயாரிப்பு இரண்டு வாரங்களில் நிறைவுக்கு வரும். இதன் பின்னர், ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெற்று இதன்போது மீள்குடியேற்றக் கொள்கை மற்றும் தேவை தொடர்பில் ஆராயப்படும் என்று வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் பக். 24

# ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம் மோசடி திருநெல்வேலியில் தப்பினான் திருடன்



யாழ்ப்பாணம், டிசெ. 19
திருநெல்வேலியில் இயங்கி வரும் தனியார் வங்கியொன்றின் கிளையில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி பணப்பரிமாற்று இயந்திரத்தில் (ஏ.ரி.எம்) நேற்றுமாலை போலியான பணப்பரிமாற்ற அட்டையைப் பயன்படுத்தி பணம் திருடப்பட்டுள்ளது.

இந்தப் பண மோசடி இடம்பெறுவதனை வங்கியின் தலைமையகத்தின் தொழில்நுட்பப் பிரிவினரால் அவதானிக்கப்பட்டு, பக். 22

# ஒரு கோடி தராவிடின் வடக்கு பட்ஜெட்டை தோற்கடிக்கத் திட்டம்

## ஆயினும் அதற்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19
உறுப்பினர்களுக்கு ஒரு கோடி ரூபா பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடு வழங்கப்படாவிட்டால், வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கும் - தோற்கடிப்பதற்கான கலந்துரையாடல் இரவிரவாக மாகாண சபையில் நடந்தேறியுள்ளது. பக். 22

# அமெரிக்க உதவிச் செயலர் நேற்று கொழும்பு வருகை



கொழும்பு, டிசெ.19
அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கான பிரதி உதவிச் செயலாளர் கலாநிதி அமி சீரைட் கொழும்புக்கு வருகை தந்துள்ளார். பக். 22

மகிந்தவின் அரசியல் இருப்புக்கு விடுதலைப் புலிகளது பெயர் அவசியமே! பக். 13

# முன்னிரவில் முதலமைச்சர் இன்றி நிறைவேறிய முதலாவது பட்ஜெட்

யாழ்ப்பாணம், டிசெ. 19
வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று இரவு, ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதியான 23 ஆயிரத்து 269 மில்லியன் 8 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவுக்கான செலவீட்டுக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்ட விவாதம் கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையிலிருந்து பேரவைச் செயலகத்தில் இடம்பெற்று வந்தது. முதல் நாள் அமர்வில், வரவு - செலவுத் திட்டம் நிதி அமைச்சரும், முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரனால் சமர்ப்பிக்கப்பட்டது. முதல் நாளில், ஆளுநர் செயலகம் - பொதுச் சேவை ஆணைக்குழு - பக். 24

Digitized by Noolaham Foundation.

# சிறுவர் மீதான வன்முறை வடக்கில் குறையவில்லை

## முதலமைச்சர் விக்கி கவலை

யாழ்ப்பாணம்,டிசெ.19

வடக்கு மாகாணத்தில் சிறுவர்கள் மீதான வன்முறை இன்னும் குறைந்ததாகத் தெரியவில்லை. இவற்றைச் சீர் செய்வதற்குத் தனியானதொரு திணைக்களம் அதன் கீழ் எத்தனையோ நிலையங்கள், அதிகாரிகள் எனப் பல மட்டங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் நிலைமைகள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதாகத் தெரியவில்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக சிறுவர் தினம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவா மாநாட்டில் சிறுவர்கள் தொடர்பாகப் பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை, சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், சிறுவர்களைக் கடத்துதல், சிறுவர்களின் கல்வியைத் தடுத்தல் போன்ற சிறுவர் வதைகளில் இருந்து அவர்களை காப்பாற்றுவதற்கான எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டன.

எனினும் இன்று விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்கள்,வாழ்க்கை வசதிகளில் ஏற்பட்ட அபிவிருத்தி, கைத்தொழில் பெருக்கம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி, நகரமயமாக்கல் என பல காரணிகள் சிறுவர்களைப் பாரதூரமான விடயங்களுக்கு இட்டுச் செல்வதை நாங்கள் அவதானிக்கவேண்டும்.

போதைப் பொருள் பாவனையில் சிறுவர்களை ஈடுபடுத்துவதும் அண்மைக் காலத்துச் சமூகப் பிறழ்ச்சியே. சிறுபிள்ளைகள் பல இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

குறைந்த சம்பளத்தில் கடின வேலைகளுக்கு அமர்த்தப்படுதல், நெருப்பினால் சூடுபடல், உணவின்றிப் பட்டினி போடப்படல், வீட்டை விட்டுத் துரத்தப்படல் உட்பட பல இடர்பாடுகளில் எமது சிறுவர்கள் சிக்கித் தவிக்க வேண்டிய



சூழ்நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குழந்தைகளை நாம் பக்குவமாக வளர்த்தெடுத்து வருங்கால சிற்பிகளாக, கலைஞர்களாக, கல்விமான்களாக மிளிர வைக்க வேண்டியது எமது பெரும் பொறுப்பாகும்.

தமிழ்ப் பேசும் மக்கள் என்ற முறையில் எமது மக்கள் தொகையைக் கூட்ட வேண்டிய ஒரு கடப்பாடு எமக்கிருந்தாலும் கவனிக்க முடியாத, கரிசனை காட்ட முடியாத குழந்தைகளைப் பெறுவதிலும் பார்க்கப் பெறாதிருப்பதே மேல்.

ஆசியாவைப் பொறுத்தவரை சிறுவர்கள் பெற்றோர்களின் பாதுகாப்பிலேயே வளர்ந்து வருகின்றபோதிலும் அவர்களின் பாதுகாப்பையும் கட்டுப்பாட்டையும் மீறிப் பல "சிறுவர் துஷ்பிரயோகங்கள்" இடம்பெற்று வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உள்நாட்டுப்போர் காரணமாக நலன்புரி முகாம்களிலும், சிறு கொட்டில்களிலும் வாழக்கூடிய சுமார் ஆயிரத்து 150 இற்கும் மேற்பட்ட சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளதை அவதானிக்கின்றோம்.

இடம்பெயர்ந்த வாழ்க்கையில் அவர்களுக்குக் கிடைக்கும் தினசரிக் கூலி வேலை வருமானமானது அன்றைய உணவுக்கே போதுமானதாக இல்லாத நிலையில் பெற்றோர்கள் குழந்தைகளின் படிப்பில் பெரிய ஆர்வம் காட்டுவதில்லை.

ஆகவே சிறு வயதிலேயே இவர்களைப் பாடசாலைகளை விட்டுவிலகச் செய்து கர்ப்பூரம் விற்றல், கடலை விற்றல், பேப்பர் விற்றல், கடைகளில் விற்பனை உதவியாளர்களாக செயற்படுதல் போன்ற பல தொழில் முயற்சிகளில் பசிக் கொடுமையின் நிமித்தம் ஈடுபட வைக்கின்றனர்.

இதனால் அவர்களின் கல்வி முயற்சிகள் தடைப்படுகின்றன. ஓடாகத் தேய்ந்து உழைத்தும் பிரயோசனம் எதுவும் இன்றி அரை வயிறு கால் வயிறு கஞ்சியுடன் காலத்தை ஓட்ட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குப் பலர் ஆளாக்கப்படுகின்றனர்.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக பல கொள்கைப் பிரகடனங்கள் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள போதிலும் இவை பற்றி நாம் மிகக் குறைந்த அளவிலேயே அறிந்து வைத்திருக்கின்றோம்.

வடமாகாணத்தில் 2014 ஆம் ஆண்டிலிருந்து பெறப்பட்ட புள்ளி விவரங்களின் படி இதுவரையில் 469 சிறுவர் துஷ்பிரயோகங்கள், 45 சிறுவர் தற்கொலைகள், 54 சிறுவர்கள் தொழிலாளர்களாகப் பாவிப்பு, 784 கைவிடப்பட்ட சிறுவர்கள், 153 புறக்கணிக்கப்பட்ட நிலையில் சிறுவர்கள், 8 கடத்தப்பட்ட சிறுவர்கள், 44 அச்சுறுத்தல் நிலைக்கு உட்படுத்தப்பட்டவர்கள், 76 தனிமையாக்கப்பட்ட நிலைச் சிறுவர்கள், 86 சிறுவர் திருமணத்தில் ஈடுபட்டுள்ளோர் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளன-என்றார்.

(த-ஐ-10)

---

## மஞ்சள் கோட்டைக் கடக்க முற்பட்ட மாணவி விபத்து

வவுனியா,டிசெ.19

மஞ்சள் கோட்டைக் கடக்க முற்பட்ட பத்து வயது மாணவி விபத்துக்குள்ளான நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவியான இராசேந்திரகுமார் கார்த்திகாஜினி (வயது 10) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் ஐந்து மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் பாடசாலையில் இடம்பெற்று வருகையில், நேற்று முன்தினம் காலை தனது சகோதரனுடன் சென்று பாடசாலை முன்பாக இருக்கும் மஞ்சள் கோட்டில் கடக்க முற்பட்டபோது எதிரே வந்த ஓட்டோ மோதியதில் மாணவி காயமடைந்தார்.

தலையிலும் காலிலும் காயம் ஏற்பட்ட மாணவி வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(த-ஐ-21)

---

## நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் பொருத்த அரசு நடவடிக்கை

### *சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தத் திட்டம்*

யாழ்ப்பாணம்,டிசெ,19

நாட்டில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்துவதற்குச் சந்தையிலுள்ள போத்தல்களில் அடைக்கப்பட்ட நீர் தீர்வாகாது. ஒரு முறையான ஒழுங்கில் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களைப் பொருத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறுநீர் நோய் ஒழிப்பு, சிறுநீரக நோய் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவு நிகழ்வு கொழும்பு கோல் பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

விவசாய நடவடிக்கையின் போது இரசாயனங்களைப் பயன்படுத்துவதில் விசேட கவனம் செலுத்துவதுடன், இந்த ஆபத்திலிருந்து எமது மக்களைப் பாதுகாப்பதற்கு

> சிறுநீரக நோயாளிகளின் நன்மைக்காக அரசு 10 மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க பணிகளை மேற்கொண்டுள்ளது.

அனைவரும் தமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.

விரிவான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படவேண்டும். சிறுநீரக நோயாளிகளின் நன்மைக்காக அரசு 10 மாத காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க பணிகளை மேற்கொண்டுள்ளது. மேலும் சிறுநீரக நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கும் வைத்தியர் கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்குவதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த முயற்சியில் அரசுடன் இணைந்து கொண்டுள்ள சகலருக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி, இந்தத் தேசியப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு எல்லோரும் அரசுடன் கைகோர்க்கவேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் மெதிரிகரிய, திஸ்ஸபுர பகுதிகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்சுத்திகரிப்பு, மீள் சுழற்சி வசதியை செய்மதி தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார். மேலும் இந்த நிகழ்வோடு இணைந்ததாக மெதிரிகிரிய ஆதார வைத்தியசாலையின் சிறுநீரக நோய் தவிர்ப்புப் பிரிவும் ஜனாதிபதியால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

(ஐ-ரி6)

---

## கரவெட்டியில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பம்

கரணவாய்,டிசெ.19

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய இடங்கள் இனங்காணப்பட்டு அவற்றை அழிக்கும் செயற்பாட்டை சுகாதாரத்துறையினரும் பிரதேச செயலகத்தினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையை அடுத்து சில இடங்களில் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அத்துடன் உடுப்பிட்டி, இமையாணன் மற்றும் நவிண்டில் பகுதியில் சிலர் டெங்குநோய்த் தாக்கத்துக்குள்ளாகிச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதனையடுத்து இந்தப்பகுதியில் டெங்கு நுளம்பை ஒழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கரவெட்டிப் பிராந்திய சுகாதாரப் பிரிவினர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கரவெட்டிப் பிரதேச செயலாளர். சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப சுகாதார நிலையம் வேணாவிலில் வேண்டும்

## குறைகேள் சந்திப்பில் மக்கள் கோரிக்கை

புதுக்குடியிருப்பு,டிசெ.19
வேணாவில் கிராமத்தில் இயங்கிய ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது இயங்காததால் நெடுந்தூரம் சென்றே தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதாக வேணாவில் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரனின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, வேணாவில் கிராமத்தில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அண்மையில் மக்கள் குறைகேள் சந்திப்பொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது கிராமத்தின் அடிப்படை வசதிகள் பலதும் இல்லாது, தாம் பெரும் துன்பத்துக்கு ஆளாகி வருவதாகவும் அந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

வீதிகளின் நிலை, பொதுநோக்கு மண்டபம் இல்லாமை, முன்பு இயங்கிய ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது இல்லாதமை, இதன் தேவைக்காக 5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கைவேலிப் பகுதிக்கு மக்கள் சென்று வருவது, விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படாமை மற்றும் தமது சங்கத்தில் முதலீடு இல்லாமை எனப்பலவற்றையும் அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட மக்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

மக்களால் முன்வைக்கப்பட்ட குறைகளைக் கேட்டுக் கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர், தனது 2016 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின் மூலம் சங்கத்துக்கு வாழ்வாதாரக் கடன் வழங்கலுக்கான உதவியை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

அத்துடன், விளையாட்டுக் கழக மேம்பாட்டு உதவி பாடசாலை மாணவர்களுக்கான சைக்கிள்கள் மற்றும் ஆலயக் கட்டுமானப் பணிக்காகவும் தன்னாலான ஒத்துழைப்புகள் கிடைக்கப்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-ஐ-21)

## இ.போ.ச. பஸ்ஸின் மீது ஓமந்தையில் தாக்குதல்

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று இனந்தெரியாத நபர்களால் கல் வீசித் தாக்கப்பட்டுள்ளது. இதன்போது பஸ்ஸின் சாரதிமயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

வவுனியாவிலிருந்து முல்லைத்தீவுக்குக் கடந்த புதன்கிழமை புறப்பட்ட பஸ் ஓமந்தை பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளது.

இதன்போது பயணிகள் பாதுகாப் பாகத்தரையிறக்கப்பட்டனர். பஸ் அத்துடன் ஓமந்தைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

ஏற்கனவே வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் இலங்கை போக்குவரத்து சேவை பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-402)

ALL OUT
Pest control service

கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்
தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
18.12.2015 | 1917 | சிவப்பு
19 43 52 61
ரூ. 3,243,180/-

நிமத்த ஜய
420
18-12-2015
நீலம்
10 16 60 65 E
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை
ரூ. 18,604,800/-

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்**
**பெயர்ப்பலகை திரை நீக்கமும், கருத்தரங்கமும்**

காலம் : 20.12.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி
இடம் : தலைமைச் செயலகம் குருகுலம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

அனைத்து அந்தண குருமார்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மு.கு : 20.12.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி முதல் 8.00 மணிவரை கல்விச்செயற்பாடுகள் ஆரம்பமாகி நடைபெறும்.

மேற்படி நிகழ்வுகள் யாவும் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்.

தலைமைச் செயலகம்,
குருகுலம் ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (68045)

தங்கள் நல்வரவை நாடும்
நிர்வாக சபையினர்
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
விளம்பர அனுசரணை - நா.பா.குருக்கள்

# CHEMISTRY
## A/L 2017 மாதாந்த பரீட்சை - டிசெம்பர் 2015

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

| Index No | Name | School | Marks | Rank |
|---|---|---|---|---|
| J/3079/M | V.Vipooshan | J/K.H.C | 91 | 1 |
| J/6094/B | J.Sathiyatharanya | | 91 | 2 |
| J/3547/M | P.Yasitharan | J/J.H.C | 86 | 3 |
| J/3024/M | S.Umaiyalan | J/C.V.C | 85 | 4 |
| J/3096/M | R.Sathursan | J/J.H.C | 85 | 4 |
| J/4473/B | M.Kokulan | J/J.H.C | 87 | 6 |
| J/3427/M | S.Ajith Danial | J/S.J.C | 85 | 6 |
| J/3450/M | Y.Vejeeharan | J/J.H.C | 83 | 8 |
| J/4073/B | R.Lokitha | J/C.S.C | 85 | 9 |
| J/3124/M | B.Tharanika | J/C.V.C | 81 | 9 |
| J/3406/M | V.Puviraj | J/S.J.C | 80 | 11 |
| J/3666/M | J.Piranavan | J/J.H.C | 79 | 12 |
| J/5488/M | R.Susmitha | J/K.M.V | 79 | 12 |
| J/3305/M | K.Jathurshan | J/J.H.C | 78 | 14 |
| J/3246/M | S.Sayanthini | J/M.L.C | 77 | 15 |
| J/4162/M | S.Thivya | J/U.G.C | 76 | 16 |
| J/4214/B | V.Priyanka | J/V.G.H.S | 77 | 16 |
| J/3381/M | E.Thujerathan | J/M.H.C | 73 | 18 |
| J/3573/M | A.Subaskaran | J/C.V.C | 73 | 18 |
| J/4113/B | J.Shopini | J/V.G.H.S | 73 | 18 |
| J/5489/M | S.Anushshiya | | 72 | 21 |
| J/3414/M | V.Sivapragash | J/C.V.C | 71 | 22 |
| J/3495/M | K.Aravinthan | J/J.H.C | 70 | 23 |
| J/5490/M | M.Kubirthan | | 70 | 23 |
| K/5455/B | P.Therukan | J/K.M.V | 70 | 23 |
| J/3415/M | M.Nitharsan | J/K.H.C | 68 | 26 |
| J/5495/M | T.Prashanna | J/K.M.V | 68 | 26 |
| J/4225/B | S.Kanimoli | J/V.G.H.S | 68 | 28 |
| J/3110/M | S.Loguparan | J/J.H.C | 66 | 29 |
| J/5795/B | S.Raaghavi | | 66 | 29 |
| J/5799/M | K.Tharmila | | 66 | 29 |
| J/5889/M | B.Sarathkumar | J/K.M.V | 65 | 32 |
| J/6794/M | B.Kasthuri | | 64 | 33 |
| J/3606/M | T.Iyunthini | J/M.L.C | 63 | 34 |
| J/5401/M | K.Sujitha | J/K.M.V | 63 | 34 |
| J/4212/B | S.Vedansan | J/J.H.C | 62 | 36 |
| J/3298/M | S.Vishnukanth | J/J.C.C | 62 | 36 |
| J/4382/B | S.Vithursan | J/J.M.V | 61 | 38 |
| J/3033/M | S.Thayuran | | 61 | 38 |
| J/5555/M | J.Poovallai | J/K.M.V | 61 | 38 |
| Mn/4305/B | V.Yarsika | Mn/S.H.C | 60 | 41 |
| J/3555/M | G.Jegajeeva | J/J.H.C | 60 | 41 |
| J/5673/M | V.Thajan | J/K.M.V | 60 | 41 |
| J/4429/M | P.Nimalraj | J/K.H.C | 58 | 44 |
| J/6423/M | S.Piranavi | | 58 | 44 |
| J/5234/M | T.Darzigan | J/K.M.V | 58 | 44 |
| J/5243/M | V.Sinthujan | J/K.M.V | 57 | 47 |
| J/3515/M | G.Kiribavan | J/J.H.C | 56 | 48 |
| J/3205/M | K.Nagalojan | J/J.H.C | 56 | 48 |
| J/4342/B | F.Ansan | J/K.H.C | 59 | 50 |
| J/4115/B | P.Prathayini | J/C.G.C | 55 | 50 |
| J/5247/M | V.Thanushan | J/K.M.V | 55 | 50 |
| J/5290/M | N.Kishotharan | J/K.M.V | 55 | 50 |
| J/4038/B | E.Praveenraj | J/S.J.C | 54 | 54 |
| J/5252/B | R.Renuja | J/K.M.V | 54 | 54 |
| J/5254/B | S.Piramilan | | 54 | 54 |
| J/5267/M | M.Narmija | J/K.M.V | 54 | 54 |
| J/3574/M | P.Kiritharan | J/S.S.K.C | 53 | 58 |
| J/4015/B | S.Showmini | J/K.H.C | 52 | 59 |
| J/5294/M | S.Livitha | | 52 | 59 |
| J/5322/M | T.Shanujan | J/K.M.V | 52 | 59 |
| J/5329/B | A.Marinine Thulakshana | | 52 | 59 |
| J/5330/M | S.Thavaamutheesan | J/K.H.C | 51 | 63 |
| J/3418/M | S.Kesavarmen | J/K.H.C | 51 | 63 |
| J/5432/M | N.Akalya | J/K.M.V | 51 | 63 |
| J/5542/M | A.Anojan | | 51 | 63 |
| J/5632/M | J.Eishaliny | K/B.V | 51 | 63 |
| J/4235/M | K.Puspakanthan | J/S.J.C | 50 | 66 |
| J/6005/B | S.Mathushan | J/J.H.C | 50 | 66 |
| K/7437/M | B.Subanhi | Kn/K.M.M.V | 50 | 66 |
| K/5737/B | M.Thamimaran | Kn/K.M.M.V | 50 | 66 |
| K/5735/B | P.Ratheepan | Kn/K.M.M.V | 50 | 66 |
| K/5735/B | S.Tharsan | Kn/K.M.M.V | 50 | 66 |
| K/5732/M | S.Anujan | Kn/K.M.M.V | 50 | 66 |
| K/6927/M | S.Liwenija | Kn/K.M.M.V | 50 | 66 |
| K/5017/M | S.Tharaniya | Kn/K.M.M.V | 90 | 66 |
| K/5012/M | M.Mithusika | Kn/K.M.M.V | 50 | 66 |

By: K.T. Shivakumar B.Sc, PGDE

**மரண அறிவித்தல்**

**சின்னத்தம்பர் சிவகலை**



பெருமாக்கடவை, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், டச் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பர் சிவகலை நேற்று (18.12.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பர் மற்றும் தேவகி தம்பதியரின் இளைய மகளும், சிவகுருநாதன், ஈஸ்வரி, விக்கினேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2015) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது டச் வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 0776966232 (68447) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Batch 1 : 23.12.2015
Batch 2 : 26.12.2015
Batch 3 : 28.12.2015
Batch 4 : 30.12.2015
No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel: 021 2224550
Hotlines
0777585913, 0777222422, 071429935
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/இமையாணன் அ.த.க.வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் நிர்வாகத்

காலம் :- 20.12.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி
இடம் :- பாடசாலைப் பொது மண்டபம்
தலைவர் :- திரு.சி.வசந்தகுமார்

**நிகழ்ச்சி நிரல்**

1. தலைவர் உரை.
2. செயலாளர் ஆண்டறிக்கை வாசித்தல்.
3. பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்.
4. புதிய நிர்வாகத் தெரிவு.

அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(82223)(11,15,18) - நிர்வாகத்தினர் -

## விசேட பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

எதிர்வரும் 03.01.2016 ஞாயிற்றுக் கிழமை கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் விசேட பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த விசேட பொதுக்கூட்டத்தில் புதிய யாப்புச் சீர்த்திருத்தம் மற்றும் பொதுச் சபையால் கடந்தகால நிதிசார் விடயங்களை சீர்செய்வதற்காக நியமிக் கப்பட்ட மூவர் குழுவின் அறிக்கை என்பன ஆராயப்பட்டவுள்ளன.

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர்.
(c/ 15840)(12.15.17.18)

## விற்பனைக்கு
தொடர்பு: 077 999 4655

ஊர்கோழிக் குஞ்சுகளும். நாய்க்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு.

## விற்பனைக்கு
தொடர்பு: 075 987 5800

இரண்டு கதவுகள் கொண்ட புத்தம் புதிய குளிரூட்டி மற்றும் பைக்கின் சீலர், கதவு நிலைகள். யன்னல்கள் - 1 இஞ்சி சல்லி விற்பனைக்குண்டு.
(67932)(1.5.17)

## விற்பனைக்கு
தொடர்பு: 021 222 7426. 077 354 4429

முதிரைக் கண்ணாடி அலுமாரி
14அடி நீளம் - இரண்டும்.
10 அடி நீளம் - ஒன்றும்.
அலுமினிய சோக்கேஸ்களும்
விற்பனைக்கு உள்ளன. (68028) (14,15)

## மணமகள் தேவை
தொடர்பு: 077 618 4333

1983 ஆம் ஆண்டில் பிறந்த பூசநட்சத்திரம் உடைய லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு, படித்த இந்து குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. (68051) (14,15)

## மணமகன்கள் தேவை

* 85 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 18¾ பாவமுடைய டென்மார்க் பிரஜா உரிமை பெற்ற MBBS டாக்டர் மணமகளுக்கு டாக்டர், இஞ்சினியர் மணமகன் தேவை.
* 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 24 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற MBBS டாக்டர் மணமகளுக்கு டாக்டர் இஞ்சினியர் மணமகன் தேவை.
* 87 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 26¾ பாவமுடைய அவுஸ்ரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு எக்கவுண்டன் OR B.sc. மணமகன் தேவை.
* 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 15¼ பாவமுடைய அமெரிக்கா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு எக்கவுண்டன், இஞ்சினியர் மணமகன் தேவை.

T.P: 0776070862

# கலைவிழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,டிசெ.19

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் கலைவிழாவும், பரிசளிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. விநாயகர் சனசமூக நிலையத்தின் தலைவர் செ.மயூரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்து கொள்வார். (ஐ-ரி6)

# திறப்பு நிகழ்வும் பாரதி விழாவும்

யாழ்ப்பாணம்,டிசெ.19

தென்மராட்சி இலக்கிய அணியின், தமிழ்க் கோட்டம் - திறப்பு நிகழ்வும் பாரதி விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சங்கத்தானை கம்பன் கல்லூரி வளாகத்தின் தமிழ்க்கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தென்மராட்சி இலக்கிய அணிப் போசகரும் பேராசிரியருமான க.கந்தசாமி மண்டபத்தைத் திறந்து வைக்கவுள்ளதுடன், சிறப்புப் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது. (ஐ-ரி6)

## Storekeeper தேவை
தொடர்பு: 077 712 0945

கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு Storekeeper உடன் தேவை.

## பராமரிப்பாளர் தேவை
தொடர்பு: 075 987 5800

வயோதிபப் பெண்ணை பராமரிக்க உதவியாளர் தேவை.

## தவறிவிட்டது
தொடர்பு: 077 460 8696 0766468536

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த வண்ணியசிங்கம் சதீஸ்குமார் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் மோட்டார் சைக்கிள், வாகனம் என்பவற்றின் வரிப்புத்தகம், காப்புறுதிப்பத்திரம் மற்றும் இரு அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் வேலணை வங்களாவடிச் சந்திக்கும் சத்திரச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

# மூவருக்கு தண்டம்

டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்கள் மூவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 9 ஆயிரம் ரூபா அபராதம் சாவகச்சேரி நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

டெங்கு பரவக் கூடிய வகையில் சூழலை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்கள் மூவருக்குஎதிராக சாவகச்சேரிச் சுற்றுச் சூழல் பொலிஸார் அண்மையில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இதன் குற்றப்பத்திரம் கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் வாசிக்கப்பட்ட போது அபராதம் விதித்த பதில் நீதிவான், சுற்றுச் சூழலை டெங்கு நுளம்புகள் பரவாத வகையில் வைத்திருக்க வேண்டும் என எச்சரித்தார். (ற-ஐ-107)

## மார்கழி மாத விசேட பூசை

டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையரின் அருள் ஒளி தர்சன மாலையும், மார்கழி மாத விசேடபூசையும் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதி இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற-ஐ-ரி6)


## ஜீவக வாத தைலம் Jeewaka Vata Thailaya

முதுகுவலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு, அரிப்பு, எரிவு,நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும், வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம், காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25 ml 150 ரூபா | 50 ml 280 ரூபா | 100 ml 450 ரூபா

Manufactured & Marketed by Jeewaka Herbals
No.17/3, Wedagedara Koskandawala Yakkala
Ayu Lic No. 6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact : 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567


## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, வில்சன்றோட் மகிழங் குளத்தில் 13 ஏக்கர் வயல் காணியும் யாழ்ப்பாணம், K.K.Sறோட்டை முகப்பாக , பாதை கொண்ட 09பரப்புக் காணி மல்லாகத்திலும் விற்பனைக்கு உள்ளன. (68053) (14,15)

தொடர்பு: V.குகதாசன்
பே/பா கு.விஸ்வலிங்கம்
சட்டத்தரணி வீடு. மல்லாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பௌத்க விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெறும்

**திரு.சந்திரகுமார் கஜேந்திரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
தாதிய உத்தியோகத்தர்கள்
விடுதி இல – 10
யாழ்.போதனா வைத்தியசாலை.

## மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்



**க.கை.விக்னேஸ்வரன்**
(வங்கியாளர் - சமூக திலகம், யாழ்./இந்து பழைய மாணவன்)

இன்று (19.12.2015) சனிக்கிழமை யாழ். இந்துவில் நடைபெறும் மணிவிழா பொலிவுற நடைபெற வேண்டும் எனவும். வாடிக்கையாளர்களின் மனதினை வென்றவரும், நேரிய பார்வையும் சிறந்த சமூக சேவையாளருமான இவர் நீடூழி வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.


## UNIVERSITY OF CAMBRIDGE — CAMBRIDGE ENGLISH
GET A CERTIFICATE THAT IS ACCEPTED GLOBALLY

### Cambridge - Prelimnary English Test (PET)

* இது ஓர் Intermediate B1.Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும். Exam date: Saturday 12th March in Colombo.

### Cambridge First Certificate in English (FCE)

FCE is an upper intermediate Level Exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2.

UK இல் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்குப் பதிலாக FCE யினை ஏற்றுக் கொள்கின்றனர்.

It covers all four language skills - Advanced Reading, Advanced Writing, Listening and Speaking Knowledge of grammar and vocabulary.

Exam date:Tuesday 07th June 2016 in Colombo.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 21.12.2015

COURSE SCHEDULE

| | | |
|---|---|---|
| Mon, Tues, Wed, Thur | | |
| Duration | 10 Weeks | Saturday & Sunday |
| Time | 10.00 - 12.00, 03.00 - 05.00 | 03.00 - 05.00 |

BRITISH COLLEGE OF ENGLISH
No.192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel: 021 222 0384, 077 880 3887


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதிக்கு அபராதம்

யாழ்ப்பாணம், டிசெ.19

ஆவணங்கள் எதுவும் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் சாவகச்சேரி நீதி மன்றில் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி போக்குவரத்துப் பொலிஸாரால் கைதான சாரதிக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது. குற்றத்தை அவர் ஏற்றுக்கொண்டதை அடுத்து நீதிவான் இந்த அபராதத்தை விதித்துத் தீர்ப்பளித்தார்.

(ற-ஐ-107)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,டிசெ.19

கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் திருமதி எஸ்.வாகீசன் அறிவித்துள்ளார்.

(து-ஐ-ரி6)

## சொற்பொழிவும் கலந்துரையாடலும்

வவுனியா,டிசெ.19

தமிழ் மாமன்றத்தின் ஏற்பாட்டில் கலையக இணைய இதழின் ஆசிரியரும் இடது சாரி சிந்தனையாளருமான த.கலையரசனின் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-ரி6)

## ஓய்வூதியர் வாழ்க்கை அத்தாட்சி பத்திரங்கள் அனுப்பிவைப்பு

சாவகச்சேரி,டிசெ.19

தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களின் அடுத்த வருடத்துக்கான வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரங்களை ஓய்வூதியப் பிரிவு அனுப் பியுள்ளது.

வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரத்தை 2016 ஜனவரி மாதத்தில் பிரிவு கிராம அலுவலரின் பரிந்துரை பெற்று எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியக் கிளையில் ஒப்படைக்குமாறும் அறிவித்துள்ளனர்.

(ற-ஐ-9)

## வாசிப்பும் அனுபவ பகிர்வும்

தமிழ் மாமன்றம் நடத்தும் இந்த மாதத்துக்கான வாசிப்பும் அனுபவப் பகிர்வும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் அருந்ததிராய் எழுதிய 'த கோட் ஒவ் ஸ்மோல் திங்' என்ற நூலின் மொழிபெயர்ப்பான 'சின்ன விடயங்களின் கடவுள்' எனும் ஜி.குப்புசாமியால் மொழிபெயர்க்கப்பட்ட நாவல் ஜே. சாள்ஸ் சாலும், அருங்கவிஞர் ஆனந்தரவியால் எழுதப்பட்ட, முதியோர் இல்லங்களுக்கு மூடுவிழாவெப்போ? எனும் கவிதைத் தொகுதி தெ.மிதிலை மாறனாலும் பகிரப்படவுள்ளன.

(ற-ஐ-10)

## மணிவிழா நிகழ்வு

இலங்கை வங்கியில் நீண்டகாலம் பணியாற்றி தனது அறுபதாவது வயதில் இளைப்பாறிச் செல்லும் க.கை.விக்கினேஸ்வரனின் மணிவிழா நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் ஈ.இளங்கோவனும், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் என்.சண்முகலிங்கனும், கௌரவ விருந்தினர்களாக பேராசிரியர் எம்.சின்னத்தம்பி, இருதய நோய் சிகிச்சை நிபுணர் மருத்துவர் பூலக்ஷ்மனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ற-ஐ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் பராசக்தி பழனி

எனது ஆருயிர் நண்பன் ப.கண்ணதாஸ்
அவர்களின் தாயார்
பராசக்தி பழனி
அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி
19.12.2015 இன்று நினைவு கூருகிறோம்.

தாயாகி அன்புடன் அமுதூட்டி வளர்த்தனை போற்றி
தந்தையுமாகி தத்துவங்களைப்
படைத்த பராசக்தி நின்பாதம் போற்றி.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய முத்துமாரி அம்மனை
இறைஞ்சுகிறேன்.

வேலணை பெருங்குளம் முத்துமாரி
அம்மன் பஜனைச் சபை சார்பாக
க.சந்திரபாலா

## நினைவலைகள்...

11ஆம் ஆண்டு — 28ஆம் ஆண்டு





| | தோற்றம் | |
|---|---|---|
| 30 | | 12 |
| 04 | | 07 |
| 1934 | | 1959 |
| | மறைவு | |
| 20 | | 19 |
| 12 | | 10 |
| 2004 | | 1987 |

அமரர் சொக்கலிங்கம் துரைஐயா

அமரர் துரைஐயா பாலச்சந்திரன்

(உரிமையாளர்கள் : கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ்)

திதி:- 19.12.2015

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவுருவாய் எமக்கு நல்ல வழிகாட்டியாய் வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் பல சென்றாலும் நாம் இவ்வுலகை விட்டுப் பிரியும்வரை உங்கள் நினைவுகள் எங்களை விட்டகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமலா ஸ்ரோர்ஸ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

(67998)(11,15,18)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 . 09 . 1955

மறைவு
20 . 12 . 2014

அமரர் ஆசீர்வாதம் இம்மானுவேல்

இமைகள் மூடித் திறப்பதற்குள் வருடம் ஒன்றாகி விட்டது
நாம் வாழும் நாள்களில் உம் நினைவுகள் எம்முடன் என்றென்றும்
வாழும்....வாழும்.... வாழும்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி,பிள்ளைகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 7/6. மத்திய கிழக்கு வீதி:
குருநகர்.

## கண்ணீர் துளிகளுடன் 31 ஆம் நாள் நினைவில்



மண்மகிழ
10 . 04 . 1951

கண்நெகிழ
18 . 11 . 2015

### அமரர் சேவியர் அந்தோனிப்பிள்ளை

காலமெல்லாம் கண் கலங்க விட்டு
கணப்பொழுதில் மறைந்த தெய்வமே !
காலமெல்லாம் உம் அன்பை நினைக்கவைத்து
கண்ணீர் விடச் செய்ததேனோ ?
விம்முகின்றோம் பதறுகின்றோம்
ஆறுதல் கூற நீங்கள் இல்லை
புலம்புகிறோம் கதறுகிறோம் உமை எண்ணி
ஓர் வார்த்தை கூறும் அப்பா !
மாறாத வடுவைத் தந்து – பெரியதோர்
வெறுமையைத் தந்ததேனப்பா !
இனியவரே உம் வருகைக்காய் காத்திருக்க
இடியென வந்ததுவோ உம் செய்தி
ஏனப்பா எமக்கு மட்டும் இப்படியென
துடிக்கின்றோம் உமக்கான பதிலுக்காய்
வாழ்ந்தவர்கள் வாழ்பவர்களுக்கு பாடமப்பா – அதை
உம்மிடமிருந்து தான் அறிந்து கொண்டோம்
நீங்கள் எமக்கு அப்பா மட்டுமல்ல
அம்மாவுமாய் வாழ்ந்த தெய்வம் அன்றோ !!
இனித் தேடிக் கிடைப்பதில்லை என உணர்ந்த பின்பும்
எங்கள் மனம் உங்களைத் தேடுகின்றதே
நாம் வாழ்ந்த வாழ்விற்கும் வாழும் வாழ்விற்கும்
பொருள் நீயே அப்பா !!

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
162A .3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி பரமேஸ்வரி சிவஞானம்

தோற்றம்
01.01.1943

மறைவு
29.12.2014

திதி:19.12.2015

யாழ்.சுன்னாகம் கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி மடத்தடியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவஞானம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
அம்மா ஆண்டு ஒன்று கழிந்தாலும் உங்கள் நினைவுகள் நெஞ்சை விட்டு அகலாது. நீங்கள் விட்டுச் சென்ற பாதையில் தொடர்ந்து நாம் பயணிக்கின்றோம். குடும்பத்தில் பெருவிருட்சமாய் இருந்த நீங்கள் விட்டுச்சென்ற விழுதுகளாய் இருக்கின்ற நாங்கள் வாழ்வில் என்றும் உங்கள் நினைவுகளுடன் வாடி வதங்கி நிற்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்
தொடர்பு: மகள் (ஜேர்மனி)
0049 6341 86291

பேரப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி,டிசெ.19
மத்தியமற்றும்மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 13 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டுமண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவராக எஸ்.ஜெய்சங்கர் (கரவெட்டி பிரதேச செயலகம்), உப தலைவராக எஸ். சுரேஸ் சனட் (கோப்பாய் பிரதேச செயலகம்), செயலாளராக க.விஜயலதா (தென்மராட்சி பிரதேச செயலகம்), உதவிச் செயலாளராக ந.ஆதவன் (கரவெட்டி பிரதேச செயலகம்), பொருளாளராக ச.தயாபரன் (தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக பத்துப் பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (த-ஐ-9)

## வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ.19
யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ''முத்தான வியர்வை'' எனும் வர்த்தகக் கண்காட்சி இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக் கிழமையும் இரு நாள் நிகழ்வுகளாக மானிப்பாய் இந்துக் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளன.

வாழ்வின் எழுச்சி மாவட்டப்பணிப்பாளர் க.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும்,சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனனும், கௌரவ விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் மே.இந்திரபாலா ஆகியோரும் கலந்து கொள்வர். (த-ஐ-ரி6)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
27 . 08 . 1950

மறைவு
21 . 12 . 2012

### கணபதிப்பிள்ளை குருநாதபிள்ளை

(ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர் - சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்)

திதி: 19.12.2015

மூன்று ஆண்டுகள் கடந்த போதும்
உங்களை மறக்கமுடியவில்லை
ஒவ்வொரு வேளையிலும் தருணத்திலும்
உங்கள் இழப்பை எண்ணி அநாதையாய் பரிதவிக்கின்றோம்
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் தொடரும்

பேச்சியம்மன் கோயில் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(67999) (14,15)
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சுப்பிரமணியம் நவரத்தினம்

(முன்னாள் சாந்தி லொறி உரிமையாளர்)

தோற்றம்
02.07.1945

மறைவு
21.12.2012

திதி: நவமி (19.12.2015)



எங்கள் குடும்பத்தின் தெய்வமே!
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
எங்கள் குலவிளக்கு அணைந்து
ஆண்டுகள் மூன்றாகியும்
எங்கள் குடும்பம் இருளில் தான்
மூழ்கி இருக்கிறது ஐயா!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்கள் எங்களுடன் இருந்த போது
எங்கள் இல்லத்தின் ஒளி விளக்கு
ஒளி விட்டுப் பிரகாசமாக இருந்தது
அப்படி ஒரு பிரகாசத்தை இனி
எப்போது காண்போம் ஐயா!
அந்த ஒளிப் பிரகாசத்தை
மறக்க முடியுமோ
உங்கள் நினைவில் வாழ்கின்றோம்
மண்ணில் பிறந்த அனைவரும்
இறப்பது நியதி என்ற வகையில்
ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல
நெல்லண்டை பத்திரகாளியை
வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி
பலாலி கிழக்கு,
வசாவிளான்.

தற்கா[illegible]
பத்[illegible],
அச்சுவேலி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் 81/2, சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்துமறைந்த

### அமரர் கனகசபை அரியநாயகம்(சாமி)

(முன்னாள் யாழ் சிறிலங்கா அச்சக, யாழ் ப.நோ.கூ. சங்க அச்சகப் பணியாளரும் இச்சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினரும், 07 ஆம் கிளைக்குழு உறுப்பினரும்.)
அவர்களை ஓராண்டு நிறைவில் நினைவுகூருவோம்

மண்மடியில் மலர்ந்த தினம்: 11.12.1946
இறைவனடியில் இணைந்த தினம்: 30.12.2014
திதி:- 19.12.2015

குடும்பத்தின் குலவிளக்காய் அன்று தோன்றி
கடும் உழைப்பால் காலத்தில் சக்கரம் தனைச்சுழற்றி
நெடுந்தமிழை அச்சேற்றும் தொழிலுமாற்றி
எடுத்ததோர் இல்லறத்தை இனிதே போற்றி
கொடுத்தென்றும் வைத்தவராய் மக்களீன்று
தொடுத்தே நல்லுறவுகளை இணைத்து நின்ற
மிடுக்கான நம்தலைவர் அரியநாயகம் (சாமியார்)
திடுக்கிடவே போன ஆண்டு ஒன்றை நாம் நினைவு கூருவோம்.

தொல்புரம் மேற்கு
சுழிபுரம்.

பாசத்தின் தலைவரை நினைவுகூரும்
மக்கள், மருமக்கள்,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 11ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
21 . 11 . 1991

உதிர்வு
19 . 12 . 2004

### தபேந்திரராசா ஈவிலின் சரோமினி

"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம்
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"
நிஜமாக எம்மை விட்டுப் பிரிந்து சென்று
ஆறுடன் ஐந்தாண்டுகள் சென்றாலும்
முழு நிலவாய் எம்மோடு வாழுகின்றாய்
திரும்பும் திசையெங்கும் உன்வதனம்
வீசும் தென்றலிலும் உன் உருவம் - காண்பதால்
அமைதியுடன் வாழுகின்றோம் - இன்றும்
உமக்காக செபங்களை காணிக்கையாக்குகின்றோம்

பழைய பொலிஸ்நிலைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(6[illegible]) (14,15)

பிரிவால் துயருறும்
(அப்பா, அம்மா, தம்பி, உறவுகள்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
தவழ்ந்தது
07 . 09 . 2014

இறைவன்
அடியில் சேர்ந்தது
19 . 11 . 2015

### பேபி ராம் ரமணன் ஜெலக்ஷி

எம் இல் வாழ்வின் நல்முத்தாய் வந்துதித்த குலக் கொழுந்தே!
புன்னகைக்கும் புதுமலராய் மடி தவழ்ந்து மகிழ்வித்தாய்
சிறு காற்றும் உனைத் தீண்டா சிறகிடுக்கில் காத்து வந்தோம்
மூவுடலும் ஓருயிராய் ஓர் கூட்டில் மகிழ்ந்திருந்தோம்
எங்கே சென்றாய் மரகதமே? துள்ளி ஓடும் புள்ளிமானாய் இருந்த
உன்னை பொறுக்காமல் பள்ளி செல்ல முன் பறித்தானோ கொடுங்காலன்
உன்னைச் சுமந்த என் வயிற்றில் பெரு நெருப்பு எரியுதம்மா
கண்முன்னே விழுந்தாயே கண்மணியே அறிவின் சிகரமாய் நீ உயர
அகமகிழ்ந்தோம் அன்புச் செல்வமே நீயே அனைத்துமாய் என்றிருந்தோம்
எல்லாம் கனவாகி வானுறைந்தாய் தெய்வமாய்
மறு ஜென்மம் ஒன்றிருந்தால் மகளாக வா மகளே
உனக்காகக் காத்திருக்கும் என கருவறை..........

135, செம்மொழி வீதி,
நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் தொடரும் மருத்துவர் பற்றாக்குறை

## 890 பேர் தேவையாக உள்ளபோதும் 388 பேரே தற்போது கடமையில்

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.குடாநாட்டின் மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்ய 104 மருத்துவ நிபுணர்களும் , 890 மருத்துவர்களும் தேவையாக உள்ள போதிலும் 76 நிபுணர்களும், 388 மருத்துவர்களும் மட்டுமே பணியாற்றுவதாக மாவட்ட செயலகப் புள்ளிவிவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

2016 ஆம் ஆண்டுக்கான தேவை மதிப்பீட்டிலேயே இந்த விவரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு 2016 முதல் 2018 வரை மேற்கொள்ள வேண்டிய சுகாதாரத் திட்டங்கள் தொடர்பிலும் முன்மொழியப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டின் மருத்துவமனைகளில் முழுமையான பூரண சேவையை வழங்குவதாக இருப்பின் மருத்துவ நிபுணர்கள் 104 பேரும், மருத்துவர்கள் 890 பேரும் , பல் மருத்துவர்கள் 37 பேரும் தேவை.

அதேவேளையில் தாதிய உத்தியோகத்தர்களாக ஆயிரத்து 817 பேரும் , மருத்துவ உதவியாளர்களாக 180 பேரும் , மருத்துவ மாதுக்களாக 345 பேரும், சிற்றூழியர்களாக ஆயிரத்து 17 பேரும் , நிர்வாகம் சார் உபகரண திருத்துநர்கள் 417 பேரும் தேவைப்படுகின்றனர்.

> “யாழ்.குடாநாட்டின் மருத்துவ மனைகளில் முழுமையான பூரண சேவையை வழங்குவதாக இருப்பின் மருத்துவ நிபுணர்கள் 104 பேரும், மருத்துவர்கள் 890 பேரும், பல் மருத்துவர்கள் 37 பேரும் தேவை.”

ஆனாலும் குடாநாடு முழுவதுமாக தற்போது சேவையில் மருத்துவ நிபுணர்கள் 76 பேர் , மருத்துவர்கள் 388 பேரும் , பல் மருத்துவர்கள் 26 பேரும், தாதியர் 633 பேரும், மருத்துவ உதவியாளர்கள் 95 பேரும், மருத்துவ மாதுக்கள் 222 பேரும் சிற்றூழியர்கள் 631 பேரும், நிர்வாகம் சார் உபகரணத் திருத்துநர்கள் 331 பேரும் உள்ளடங்கலாக மாவட்டம் முழுவதும் பணியாற்றுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் மாவட்டத்தில் 28 மருத்துவ நிபுணர்களும் , 502 மருத்துவர்களும் , 11 பல் மருத்துவர்களும் , ஆயிரத்து 184 தாதியர்களும் பற்றாக்குறையாக உள்ள அதேநேரம், 85 மருத்துவ உதவியாளர்களும் , 123 மருத்துவ மாதுக்களும், 386 சிற்றூழியர்களும், 84 நிர்வாகம் சார் உபகரண திருத்துநர்களும் தேவைப்படுகின்றனர் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டின் முக்கிய வைத்தியசாலையான போதனா வைத்தியசாலையில் 2016-2018 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகளில், புதிய மகப்பேற்று விடுதித் தொகுதி அமைப்பதற்காக 1200 மில்லியன் ரூபாவும் , இதய சத்திர சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்காக 448 மில்லியன் ரூபாவும் , தாதிய உத்தியோகத்தர்கள் விடுதி அமைப்பதற்கு 600 மில்லியன் ரூபாவும் , ஆய்வுகூட விஸ்தரிப்புக்கு 110 மில்லியன் ரூபா நிதியும் சுகாதார அமைச்சிடம் கோரப்பட்டுள்ளன .

(த-ஜ-101)



# கரவெட்டிப் பிரதேச செயலகம் உற்பத்தித்திறனில் 2ஆம் இடம்

கரணவாய்,டிசெ.19

அகில இலங்கை ரீதியாக அரச திணைக்களங்களுக்கிடையில் நடத்தப்பட்ட உற்பத்தித்திறன் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலகம் தேசிய ரீதியில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நாடளாவிய ரீதியிலுள்ள அரச திணைக்களங் களுக்கிடையில் இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

இதற்கான விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் இடம்பெற்றது. இதில் வைத்துத் தேசிய ரீதியில் இரண்டாமிடம் பெற்ற கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கான விருது வழங்கப்பட்டது.

இதேவேளை, கரவெட்டிப் பிரதேச செயலகம் கடந்த வருடம் இந்தப் போட்டியில் விசேட சான்றிதழைப் பெற்றிருந்ததுடன் இந்த வருடமும் தேசிய ரீதியில் இரண்டாமிடம் பெற்றதோடு மேலும் இரண்டு தரவட்டச்சான்றிதழையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(த-ஜ-108)

# ஆலய வீதிகளில் மின்குமிழ் திருட்டு

சாவகச்சேரி,டிசெ.19

ஆலய வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகள் மற்றும் அயலில் உள்ள காணிகளில் காணப்பட்ட இரும்புக் கதவுகள், நீரிறைக்கும் இயந்திரங்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

இந்தச் சமபவம் கடந்த புதன்கிழமை இரவு சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் இடம்பெற்றது.

அதிகாலை நடைபெறவுள்ள திருவெம்பாவை பூசைக்காக ஆலய வீதிகளில் காணப்பட்ட அனைத்து வீதி விளக்குகளும் இரவு முழுவதும் ஒளிர விடப்பட்டிருந்தன.

ஆலய நிர்வாகத்தினர், அதிகாலை ஆலயத்துக்கு வந்தபோது வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த மின்விளக்குகள் திருட்டுப் போயுள்ளதுடன், ஆலயத்தின் காணிக் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த நீரிறைக்கும் இயந்திரம், அயலில் உள்ள காணியில் பொருத்தப்பட்டிருந்த இரண்டு இரும்புக் கதவுகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

திருட்டுக்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-ஜ-9)

# சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு நேரக்கட்டுப்பாடு தற்காலிக நீக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

நத்தார் மற்றும் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்தால் சிகை அலங்கரிப்பு நிலையங்களின் நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன் நாளை ஞாயிற்றுக்கிழமையும், எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் சேவைகளை வழங்குமாறு சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை நத்தார் தினத்தன்று விசேட விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி6)

# கணித பாடச் சித்திப் புள்ளியை 20 ஆக்கக் கோரினார் மாணவன்

யாழ்ப்பாணம்,டிசெ. 19

நடைபெற்று முடிந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் கணித பாடத்தில் சித்தியடைவதற்கான புள்ளியை 20 ஆகக் குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதற்கான கோரிக்கையை மாகாணக் கல்வி அமைச்சர் முன்வைக்க வேண்டும் எனவும் பரீட்சை எழுதிய மாணவன் ஒருவர் தனக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா தெரிவித்தார்.

வடக்கு மாகாண வரவு-செலவுத் திட்டத்தின் கல்வி அமைச்சு மீதான விவாதத்தில், பதிலுரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கும்போது,

நடைபெற்று முடிந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவன் ஒருவர் எனக்குக் கடிதம் அனுப்பியுள்ளான். அதில் கணித பாடத்தில் சித்தியடைவதற்கான புள்ளியை 20 ஆகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். மத்திய கல்வி அமைச்சிடம் அதற்கான கோரிக்கையை முன்வைக்கவேண்டும் எனவும் கோரியுள்ளார்.

பல அலுவலர்களும், தங்களது பிள்ளைகள் கணித பாட வினாத்தாள் கடினமாக அமைந்துள்ளதாகத் தெரிவித்தாக என்னிடம் குறிப்பிட்டனர். சிலவேளைகளில் அவர்கள் அப்படியான வினாத்தாள்களைத் தான் தயாரிப்பார்கள் என்று தெரிவித்த அமைச்சர், கணித - விஞ்ஞானப் பாடங்களில் மாணவர்களின் ஈர்பை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டார்.

(த-ஜ-5-ரி5)

# சிவில் பாதுகாப்புக் குழு பரிந்துரை அரச வேலைவாய்ப்புக்குத் தேவை

## வவுனியா பொலிஸ் பரிசோதகர் தெரிவிப்பு

வவுனியா,டிசெ.19

இனிவரும் காலங்களில் அரச வேலைவாய்ப்பைப் பெறவேண்டுமாயின் கிராமசேவகர், பொலிஸாரின் பரிந்துரை போன்று சிவில் பாதுகாப்புக்குழுக்களின் பரிந்துரையும் அவசியம் தேவை.

- இவ்வாறு வவுனியா நெளுக்குளம் உபபொலிஸ் பரிசோதகர் பள்ளியவடண தெரிவித்தார்.

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்புக்குழு அங்கத்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், நெளுக்குளம் பகுதியில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள், கலாசார சீர்கேட்டு சம்பவங்களைக் குறைக்க சிவில் பாதுகாப்புக் குழு விழிப்புணர்வுடன் செயற்படுகின்றனர்.

சம்பவங்கள், போதைப்பொருள் பாவனை, மதுப்பாவனை என்பன நாடளாவிய ரீதியில் அதிகரித்து வந்தாலும் அவற்றைக் குறைக்கச் சிவில் பாதுகாப்புக் குழுக்களில் உள்ளவர்கள் பெரிதும் உதவி புரிந்தனர்.

தற்போது சிவில் பாதுகாப்புக் குழுக்களில் உள்ளவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டியுள்ளது. இனிவரும் காலங்களில் அரசவேலைவாய்ப்பைப் பெறவேண்டுமாயின் கிராம சேவகர், பொலிஸாரின் பரிந்துரை போன்று சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பரிந்துரையும் அவசியம் தேவை.

ஊரில் கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பும், மதுப்பாவனை, போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் பொறுப்பும், திருட்டைத் தடுக்கும் பொறுப்பும் சிவில்பாதுகாப்புக்குழுவுக்கு உண்டு. இவர்கள் சிறப்புடன் செயற்பட எமது உதவி என்றும் இருக்கும்-என்றார்.

(பா-த-த-ஜ-402)

# முல்லை வீதிகளைப் புனரமைக்க ரூபா 5,578.2 மில்லியன் நிதி தேவை

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட வீதிகளைப் புனரமைப்பதற்கு 5 ஆயிரத்து 578.2 மில்லியன் ரூபா நிதி தேவையாகவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் உள்ளூராட்சி மன் றங்களுக்குட்பட்ட 150 இற்கும் மேற்பட்ட வீதிகள் புனரமைக்கப்படவேண்டிய தேவை இருப்பதாகவும் அந்த புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டள்ளது.

வீதிகள் பல கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாகப் போரின் முன்பும், முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதும் எந்தவித புனரமைப்புப் பணிகளும் இன்றிக் காணப்படுவதுடன் சில வீதிகள் பயணிக்க முடியாத நிலைகளில் கைவிடப்பட்டும் காணப்படுகின்றன.

எனவே மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங் களுக்குட்பட்ட வீதிகளான கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் உள்ள 136.92 கிலோமீற்றர் நீளமான 42 வீதிகளைப் புனரமைக்க 2 ஆயிரத்து 29 மில்லியன் ரூபாவும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள 133.71 கிலோமீற்றர் நீளமான 38 வீதிகளைப் புனரமைக்க 251 மில்லியன் ரூபாவும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள 53.78 கிலோ மீற்றர் நீளமான 38 வீதிகளை புனரமைக்க 496.7 மில்லியன் ரூபாவும், துணுக்காய் பிரதேசத்தில் உள்ள 34.37 கிலோமீற்றர் நீளமான 15 வீதிகளைப் புனரமைக்க 377 மில்லியன் ரூபாவும், மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள 113.9 கிலோமீற்றர் நீளமான 18 வீதிகளைப் புனரமைக்க 1642.5 மில்லியன் ரூபாவும், வெலிஓயா பிரதேசத்தில் உள்ள வீதிகளைப் புனரமைக்க 782 மில்லியன் ரூபாவும் தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-ஜ-21-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான ரயில் கடவைகள் அமைத்துத் தருக

## கிளிநொச்சியில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்



கிளிநொச்சி,டிசெ.19

கிளிநொச்சியில் ஜனநாயகத்துக்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் பாதுகாப்பான ரயில் கடவைகளை அமைத்துத் தரக்கோரி நேற்று கிளிநொச்சி ரயில் நிலையத்துக்கு முன்பாகக் கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முறிகண்டி முதல் முகமாலை வரை கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைக்குள் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் காணப்படுவதால் குறித்த பகுதியில் 19 இற்கும் மேற்பட்ட சாவுகள் இடம் பெற்றுள்ளதாகவும், பலர் காயங்களுக்கு உள்ளாகிய தோடு சொத்தி ழப்புக்களும் ஏற்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு பாதுகாப்பற்ற ரயில் கடவையைப் பாதுகாப்புக் கடவைகளாக மாற்றக்கோரி குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் ரயில்வே திணைக்கள அதிகாரி மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு மனுவும் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள், கிராமிய அமைப்புக்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(கு-ஐ-ரி3)

> பாதுகாப்பற்ற ரயில் கடவையைப் பாதுகாப்புக் கடவைகளாக மாற்றக்கோரி குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## கடையில் தந்திரமாகப் பணத்தை வழித்துத் துடைத்தனர் திருடர்கள்

கரணவாய், டிசெ 19

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்கு வந்த இருவர் விற்பனை நிலையத்தில் பணம் இருந்த மேசை இலாச்சியை வழித்துத் துடைத்துக் கொண்டு தலைமறைவாகினர்.

இத்துணிகர திருட்டுச் சம்பவம் நேற்று முன் தினம் பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அருகிலுள்ள மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் இடம்பெற்றுள்ளது .

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

குறித்த விற்பனை நிலையத்திற்கு வந்த இரண்டு இளைஞர்கள் கடை உரிமையாளரிடம் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகத்தைக் கேட்டுநீண்ட நேரமாக உரையாடியுள்ளனர். அவர்கள் கேட்ட பொருள் இல்லை எனக் கடை உரிமையாளர் கூறியதும் அவ்விடத்தை விட்டுச் சென்ற இருவரும் தாம் வந்த மோட்டார் சைக்கிளை மகாத்மா ஒழுங்கையில் நிறுத்திவிட்டு மீண்டும் கடைக்கு வந்துள்ளனர். வந்தவர்கள் வேறு ஒரு பொருளைக் கேட்கக் கடை உரிமையாளர் பின் பகுதிக்குச் சென்றார். அப்போது வந்தவர்களில் ஒருவர் அவரைப் பின் தொடர்ந்து சென்று கடைக்காரரிடம் பேச்சுக் கொடுத்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் வெளியில் நின்ற மற்றைய நபர் கடைக்குள் சென்று இலாச்சியில் இருந்த சுமார் 60 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தை சுருட்டிக் கொண்டு வெளியில் வந்து நின்றுள்ளார்.இதனை அறியாத கடைக்காரரும் அவர்கள் கேட்ட பொருளைத் தேடிய வண்ணம் இருந்துள்ளார். தாங்கள் வந்த வேலை கச்சிதமாக நிறைவேறியதால் தாங்கள் அருகிலுள்ள கடையில் தேநீர் குடித்துவிட்டு வருகின்றோம் என்று கூறிச் சென்றனர்.

அவர்கள் சென்ற சிறிது நேரத்தில் உரிமையாளர் இலாச்சியில் பணம் சூறையாடப்பட்டதை அறிந்து அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு சென்று விடயத்தைக் கூறியபோது கடையை நோக்கி வந்த இருவரும் உசாரடைந்து தூரத்தில் நின்ற மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்று விட்டனர்.

(த-108)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

### சுகாதாரத் திணைக்களத்தால் மேலதிக கட்டில்கள் அனுப்பி வைப்பு

சாவகச்சேரி,டிசெ.19

சாவகச்சேரி வைத்தியசாலையில் டெங்கினால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெறவருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் மேலதிகமாக 20 கட்டில்களை யாழ்.பிராந்திய சுகாதாரத்திணைக்களத்தினர் அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியாசலையின் விடுதிகளில் டெங்கு நோயாளர்களை அனுமதிக்க முடியாத அளவுக்கு அங்கு இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வைத்தியசாலை நிர்வாகத்தினர் சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து முதற்கட்டமாக 20 கட்டில்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம் குருதி மாதிரிகள் பரிசோதனையின்போது எட்டுப் பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலை விடுதிகளில் பரிசோதனைகளின்போது டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்திய நோயாளர்களை, விடுதிக் கட்டில்களில் இடமில்லாத நிலை ஏற்பட்டதால் நிலத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 17 தினங்களில் டெங்கினால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்துள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதால் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், சாவகச்சேரி கொடிகாமம் பொலிஸார், கிராம அலுவலர் மற்றும் கிராம மட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்களின் பங்களிப்புடன் வாராந்தம் டெங்கு அதிகமாகக் காணப்படும் பகுதிகளான மந்துவில், சாவகச்சேரி நகரம், கைதடி போன்ற பிரதேசங்களில் டெங்குப் பரிசோதனைகளை நடத்தவுள்ளனர். (த-ஐ-9)

## மணல் கடத்திய உழவு இயந்திரம் பொலிஸாரிடம் சிக்கியது

தோட்டத்துக்குப் புதைக்கும் பூவரசம் குழைக்கட்டுகளை மேலே அடுக்கி மணல் கடத்திய உழவு இயந்திரம் வீதிப் போக்குவரத்து பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரால், உழவு இயந்திரச் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-ஐ-9)



## தென்மராட்சியில் டெங்கினால் 37 பேர் பாதிப்பு

சாவகச்சேரி,டிசெ.19

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த பதினைந்து தினங்களில் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 37 ஆக அதிகரித்துள்ளது.

டிசெம்பர் மாத்தின் முதல் வாரத்தில் பதினொரு பேரும், இரண்டாவது வாரத்தில் 13 பேரும், இறுதி இரு தினங்களில் பதின்மூன்று பேருமாக மொத்தம் 33பேர் டெங்கு நோயினால் பீடிக் கப்பட்டுள்ளனரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை 190 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-ஐ-9)

## குடாநாட்டில் 1023 கிலோ மீற்றர் வீதிகள் மட்டுமே புனரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ்.குடாநாடு முழுவதும் உள்ள 4 ஆயிரத்து 212.17 கிலோ மீற்றர் வீதிகளில் கடந்த காலங்களில் ஆயிரத்து 23.75 கிலோ மீற்றர் வீதிகள் மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக புள்ளிவிவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபை , வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களங்களின் ஆளுகையின் கீழ் மொத்தமாக 4 ஆயிரத்து 212.17 கிலோ மீற்றர் வீதிகள் உள்ள போதிலும் கடந்த காலங்களில் ஆயிரத்து 23.75 கிலோ மீற்றர் வீதிகள் மட்டுமே புனரமைக் கப்பட்டுள்ளன .

இதில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 507.16 கிலோ மீற்றர் நீள வீதிகளில் கடந்த காலங்களில் அதாவது போரின் பின்னர் 214.91 கிலோ மீற்றர் வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் 292.25 கிலோ மீற்றர் நீள விதிகள் இன்னும் புனரமைக் கப்பட வேண்டியுள்ளது.

இதேபோல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் 594.24 கிலோ மீற்றர் வீதிகள் யாழ். குடாநாட்டில் உள்ள போதிலும் கடந்த காலங்களில் வெறும் 85 கிலோ மீற்றர் வீதி மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளது. மேலும் 509.24 கிலோ மீற்றர் வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் உள்ளூராட்சித் திணைக்களங்களின் ஆளுகையின் கீழ் மூவாயிரத்து 110.77 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதிகள் உள்ள போதிலும் கடந்த காலங்களில் 723.75 கிலோ மீற்றர் வீதிகள் புனரமைக்கப்பட்ட நிலையில் மேலும் இரண்டாயிரத்து 386.93 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளன.

இவ்வாறு குடாநாட்டில் புனரமைக்கப்படாமல் உள்ள வீதி அதிகார சபையின் கீழ் உள்ள 292.25 கிலோ மீற்றர் வீதிகளில் 197.80 கிலோ மீற்றர் வீதிகள் உடன் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளதால் இவற்றை 2016-2018 காலப்பகுதிகளில் புனரமைக்கத் திட்டமிடப்பட்டு இதற்காக 14 ஆயிரத்து 835 மில்லியன் ரூபா நிதி தேவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.மானிப்பாய்- காரைநகர் வீதி, பொன்னாலை- பருத்தித் துறை, புலோலி - கொடிகாம் கச்சாய் வீதி, வழுக்கையாறு- குறிகட்டுவான் வீதி, புத்தூர் - கந்தரோடை வீதி, அல்வாய் - நெல்லியடி-துன்னாலை வீதி, சாவகச்சேரி-புலோலி வீதி, பருத்தித் துறை-மருதங்கேணிவீதி,வல்லை-உடுப்பிட்டி -வல்வெட்டித்துறை வீதி என மொத்தம் ஒன்பது வீதிகளுக்கும் குறித்த நிதி ஒதுக்கீடு மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளன. (த-ஐ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணைமடுவிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதில் பிரச்சினை, யாழ்ப்பாணத்தில் கடல் நீரை நன்னீராக்கி வழங்குவதில் தடங்கல் இருக்கின்றது.

# முல்லைத்தீவுக் கடல்நீரை நன்னீராக்கி வழங்குங்கள்

## யாழ்.மக்களது பயன்பாட்டுக்கு என்கிறார் மாகாண சபை உறுப்பினர் சிவநேசன்



யாழ்ப்பாணம்,டிசெ. 19
உப்புச் செறிவு குறைந்த முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கடல் நீரை நன்னீராக்கி யாழ்.மாவட்டத்துக்குக்குடிதண்ணீர்வழங்க நடவடிக்கை எடுங்கள்.
இவ்வாறு ஆளுங்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் க.சிவநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
வடக்கு மாகாண சபையின் வரவு–செலவுத் திட்டத்தில் விவசாய அமைச்சு மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவிக்கும்போது,
இரணைமடுவிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதில்பிரச்சினை, யாழ்ப்பாணத்தில் கடல் நீரை நன்னீராக்கி வழங்குவதில் தடங்கல் இருக்கின்றன என்றால், உப்புச் செறிவு குறைந்த முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கடல் நீரை நன்னீராக்கி யாழ். மாவட்டத்துக்கு குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுங்கள் – என்றார்.
இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் தரமறுக்கின்றனர். இரணைமடுவில் நிரம்பிக் கடலுக்குச் செல்லும் தண்ணீரையாவது யாழ்ப்பாணத்துக்குத் தாருங்கள் என்று ஆளுங் கட்சியின் யாழ்.மாவட்ட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கோரியிருந்தார்.
இதேபோன்று இரணைமடு விவகாரம் அரசியலாக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் தடுக்கப்பட்டுள்ளதாக, மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினரான இ.ஆனோல்ட்டும் குற்றம் சாட்டினார்.
ஆளுங்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் பசுபதிப்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில், இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் தரமாட்டோம் என்று யார்சொன்னார்கள். இரணைமடுத் தண்ணீரை நம்பிச் சிறுபோகச் செய்கைக்கு 8 ஆயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன. 35ஆயிரம் ஏக்கர்கள் கால போகம் விதைக்கின்றனர். 16 ஆயிரம்ஏக்கர் சிறுபோகத்துக்கு இரணைமடுக் குளத்து நீரை வழங்கிவிட்டு மேலதிக குடிதண்ணீரைக் கொண்டு செல்லுங்கள் என்றுதானே நாங்கள் சொல்லுகின்றோம் – என்றார்.
(த–ஐ–5–ரி5)

# செயற்கைக் கள் விற்பனை வடக்கில் நிறுத்தப்படவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை

வடபகுதியில் தென்பகுதியிலிருந்து கொண்டு வரப்படும் போத்தலில் அடைத்த – இரசாயனம் கலந்த செயற்கைக் கள் விற்பனையை நிறுத்த வேண்டும் என ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் கோரிக்கை ஒன்றை முன்வைத் தனர்.
விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதம் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.
தென்பகுதியிலிருந்து, போத்தலில் அடைக்கப்பட்ட கள் வடபகுதிக்கு விற்பனைக்குக் கொண்டு வரப்படுகின்றது. இது இரசாயனம் கலந்து செயற்கை முறையில் தயாரிக்கப் படுகிறது.
இதனை வடபகுதியில் பரவலாக விற்பனை செய்கின்றனர். இதன்

தென்பகுதியிலிருந்து, போத்தலில் அடைக்கப்பட்ட கள் வடபகுதிக்கு விற்பனைக் கொண்டு வரப்படுகின்றது. இது இரசாயனம் கலந்து செயற்கை முறையில் தயாரிக்கப்படுகிறது.

காரணமாக, வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் இயற்கைக் கள் மிஞ்சுகின்றது. அது வீணாகக் கொட்டி அழிக்கப்படுகின்றது.
எனவே, தென்பகுதியிலிருந்து கொண்டு வரப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட செயற்கைக் கள் விற்பனையை வட பகுதியில் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாகாண சபையின் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் கோரிக்கையை முன்வைத்தனர்.
இதற்குப் பதிலளித்த விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், தரகுப் பணத்துக்காக ஒரு சிலர் இவ்வாறாக தென்பகுதிக் கள்ளை இங்கு விற்பனை செய்கின்றனர். இவை கூட்டுறவு அமைப்புக்களினூடாக விற்பனை செய்யப்படுவதை, நிறுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (த–ஐ–5–ரி5)

# குடிதண்ணீர்ப் பிரச்சினையில் தப்பிக்கிறது நொதேர்ண் பவர்

## எதிர்க்கட்சித் தலைவர் தவராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.19
சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் நிபுணர் குழு வழங்கிய அறிக்கையைப் பயன்படுத்தி நொதேர்ண் பவர் நிறுவனம் தப்பிக்க நினைப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா குற்றம் சாட்டியுள்ளார்.
வடக்கு மாகாண சபையில் விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே குறித்த விடயம் பேசப்பட்டது.
இதில் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மேலும் தெரிவிக்கையில்,
சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கை உத்தியோகபூர்வமாக எமக்கு இன்னமும் தரப்படவில்லை. குறித்த அறிக்கையை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதற்கு நொதேர்ண் பவர் நிறுவனம் முயற்சிப்பதாகத் தெரியவருகின்றது. அந்த அறிக்கையைப் பயன்படுத்தித் தொடர்ந்து இயங்குவதற்கான அனுமதியை நொதேர்ண் பவர் நிறுவனம் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறது.
இதில் கருத்துத் தெரிவித்த ஆளுங்கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன், நொதேர்ண் பவர் நிறுவனத்தைச் சுன்னாகத்திலிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகள் – போராட்டங்களை நாங்கள் நடத்தியிருந்தோம். இந்த நிலையில், நிபுணர் குழு அறிக்கையைப் பயன்படுத்தி அவர்கள் நீதிமன்றத்தினூடாகத் தொடர்ந்து இயங்குவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டால், அதற்கு வடக்கு மாகாண சபை பொறுப்பேற்கமாட்டாது–என்றார்.
ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான பா.கஜதீபன் தெரிவிக்கையில், மாகாண சபையின் நிபுணர் குழு, தனது அறிக்கையில், நீர் வழங்கல் சபையின் அறிக்கையில் தவறு இருப்பதாகத் தெரிவித்திருந்தது. ஆனால் நீர் வழங்கல் சபையினர் தமது அறிக்கை சரி என்று வாதிடுகின்றனர். மக்கள் கேட்கின்றார்கள், எந்த அறிக்கையை நம்புவது என்று எனவே இரு தரப்பினரையும் அழைத்துப் பேசவேண்டும் என்று குறிப்பிட்டார்.
இதன் பின்னர் கருத்து வெளியிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் கே.சயந்தன், நிபுணர் குழுவின் அறிக்கையை நீதிமன்றத்தில் ஓர் ஆதாரமாகச் சமர்ப்பிக்க முடியாது. அது அதிகாரபூர்வ அறிக்கை அல்ல. மாகாணசபையினால் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவும் அல்ல. அதனால் அதனை நீதிமன்றத்தில் பயன்படுத்த முடியாது – என்றார்.
(த–ஐ–5–ரி5)

# வடக்கு மாகாண பட்ஜெட்டில் கல்வி அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.19
வடக்கு மாகாண அரசின் வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் மூன்றாம்நாளான நேற்று முன்தினம் மாலை கல்வி அமைச்சு மீதான விவாதம் இடம்பெற்றது. அதில் கல்வி அமைச்சு அடுத்த ஆண்டுக்கு பல்வேறு விடயங்களைச் செயற்படுத்தவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.
குறிப்பாக, வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்குத் தண்டனை வழங்கும் முறையை இல்லாதொழித்தல் அடுத்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.
முன்பள்ளி ஆசியர்களுக்கான கொடுப்பனவில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படாத போதிலும், அந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை 400 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.
கூடைப்பந்தாட்ட மைதானம், கரப் பந்தாட்ட மைதானம், விளையாட்டுப் பயிற்சி நிலையங்கள் என்பன அடுத்த ஆண்டு அமைக்கப்படவுள்ளன.

**நிதி ஒதுக்கீடு**
கல்வித் திணைக்களத்தின் 969 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில், யாழ்.மாவட்டத்துக்கு 377.91 மில்லியனும், கிளிநொச்சிக்கு 184.11 மில்லியனும், முல்லைத்தீவுக்கு 116.28 மில்லியனும், வவுனியாவுக்கு 164.73 மில்லியனும், மன்னாருக்கு 125.97 மில்லியனுமாகப் பங்கீடு செய்யப்பட்டுள்ளன.

**பிரதான முன்மொழிவுகள்**
**மனிதவள அபிவிருத்தி**
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவில் விஞ்ஞானப் பிரிவில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை 40 சதவீதமாக உயர்த்துதல்.
மாணவர்களுக்குக் கற்றலுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.
பின்தங்கிய இடங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
விசேட தேவைகளை உடைய மாணவர்களுக்கான உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.
இதேவேளை 42 பாடசாலைகளின் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு 239.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 5 மாவட்டங்களிலும் உள்ள 26 பாடசாலைக் கட்டடங்கள் இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ளன.

**கல்வித்துறையில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள திட்டங்கள்**
வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இரண்டு கிராமப்புறப் பாடசாலைகள் வீதம் தெரிவு செய்து அபிவிருத்தி செய்தல்.
மாணவர் இடைவிலகலைக் குறைப்பதற்கு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
பெற்றோர் – பாடசாலை தொடர்புகளைச் சிறந்த முறையில் பேணல் மற்றும் மாதமொருமுறை பெற்றோர் ஆசிரியர் சந்திப்பை நடத்துதல்.
பாடசாலைகளிடையே ஏற்றத் தாழ்வுகளை இல்லாதொழித்தல்.
பின்தங்கிய பிரதேச பாடசாலைகளுக்கு கணித – விஞ்ஞான மேலதிக நேர வகுப்புக்களைப் புதிய தொழில்நுட்ப முறையில் வழங்கல் உள்ளிட்ட திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படும்.

**முன்பள்ளிக் கல்வி**
வடக்கில் 3 ஆயிரத்து 85 ஆசிரியர்கள் கற்பித்தல் பணியில் ஈடுபடுகின்றனர். அவர்களில் ஆயிரத்து 800 பேருக்கு தற்போது மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுகின்றது. அடுத்த ஆண்டு அதனை 2 ஆயிரத்து 200 ஆசிரியர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**விளையாட்டுத் திணைக்களம்**
5 மாவட்டங்களிலும் 10 பொது விளையாட்டு மைதானங்கள் புனரமைப்பு.
5 மாவட்டங்களிலும் 400 மீற்றர் மைதான புனரமைப்பு.
கொழும்பு அரசினால் முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா மாவட்டங்களில் விளையாட்டுத் தொகுதிக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.
2016 ஆம் ஆண்டு தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளை வடக்கில் நடத்த நடவடிக்கை.

**கலாசாரத் திணைக்களம்**
9 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கலாசாரத் திணைக்களத்தின் வழமையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

**இளைஞர் விவகாரப் பிரிவு**
வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் அற்ற இளைஞர் சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் விழிப்புணர்வுச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
இளைஞர்களுக்கான பயிற்சி முகாம்களை நடத்துதல்.
இளைஞர்களுக்கு தொற்றா நோய்களின் தாக்கம் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
இணையத் தளங்கள் மற்றும் சமூகவலைத் தளங்களை ஆக்கபூர்வமான தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்சிகளை நடத்துதல்.
மாவட்ட ரீதியில் இளைஞர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தக் கூடிய கலை விழாக்களைக் கொண்டாடுதல் உள்ளிட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.
(த–ஐ–5–ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டுப் புள்ளியிடலில் வெளிப்படை வேண்டும்

## மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயற்பாடு குறித்து மாகாண சபை விசனம்

யாழ்ப்பாணம், டிசெ. 19
வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் பரீட்சைகள் நடத்தப்படுகின்றபோதிலும், அதன் வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படுவதில்லை. எனவே மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வெட்டுப் புள்ளியை வெளிப்படையாக வெளியிட வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

வடக்கு மாகாண சபையின் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில், பொதுச் சேவை ஆணைக்குழுவுக்குரிய நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவிக்கும்போது, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, ஓர் ஊழியர் தவறிழைத்தால் அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு காலத்தை இழுத்தடிக்கின்றது என்றும், இதனால் இந்த விசாரணைக்காக இழுபடும் காலத்தில் குறித்த ஊழியர் சம்பளமின்றிப் பாதிக்கப்படுவதாகவும் குற்றம் சுமத்தினார்.

ஆளுங் கட்சியின் வவுனியா மாவட்ட உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவிக்கும்போது, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவை ஏன் கட்டுப்படுத்த முடியாத நிலை உள்ளது? என்று கேள்வி எழுப்பினார். பொதுச் சேவைகள் ஆணைக்குழு பரீட்சைகள் நடத்துகின்றபோதிலும் அதன் வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படுவதில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினரான சர்வேஸ்ரன் தெரிவிக்கும்போது, மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நடத்தப் படுகின்ற பரீட்சைகளின் இரகசியத் தன்மை தொடர்பில்சந்தேகம்எழுப்பினார். இலங்கை அரசினால் பரீட்சைத் திணைக்களம் - அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தில் வைத்து இயக்கப்பட்டு அங்கு இரகசியமாகப் பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. அதேபோன்று, மாகாணத்துக்கும் அவ்வாறு ஒரு பரீட்சைத் திணைக்களம் - அச்சகக் கூட்டுத்தாபனம் தேவை. அதனூடாகவே, இங்கு நடத்தப்படுகின்ற பரீட்சைகளின் இரகசியத் தன்மையைப் பேண முடியும் என்றார்.

> மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு ஒரு பரீட்சை நடத்துகின்றபோது அதற்கு 20 ஆயிரம் பேர் வரை தோற்றுகின்றனர் . ஆனால் அதில் தேர்வாகப் போகின்றவர்கள் மிகச் சொற்பமானவர்களே.

எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் கருத்துத் தெரிவிக்கையில், மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு ஒரு பரீட்சை நடத்துகின்றபோது அதற்கு 20 ஆயிரம் பேர்வரை தோற்றுகின்றனர். ஆனால் அதில் தேர்வாகப் போகின்றவர்கள் மிகச் சொற்பமானவர்களே. இருப்பினும், இவர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா அறவிடப்படுகின்றது. இது மிகவும் அதிகமான தொகையாகும். கிளிநொச்சி - முல்லைத்தீவில் எனக்குத் தெரியக் கூடிய வகையில் பல குடும்பங்களின் மாதவருமானமே 500 ரூபாதான். எனவே பரீட்சைக் கட்டணத்தில் குறைப்பு வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஆளுங்கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவிக்கும்போது, கடந்த காலங்களில் போர்ச் சூழல் காரணமாக - நாட்டில் காணப்பட்ட அச்சமான சூழல் காரணமாகப் பல அரச உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுக்குச் சென்றனர். அவர்கள் தற்போதைய நிலையில் நாட்டுக்குத் திரும்பி வருகின்றனர். அவர்களுக்கு மீளவும் அரச உத்தியோகத்தைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் நிலவுகின்றன இந்த விடயத்தில் அமைச்சரவை கொள்கை ரீதியிலான தீர்மானம் எடுத்து, அவர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

ஆளுங்கட்சி உறுப்பினர் இ. ஆனோல்ட் கருத்துத் தெரிவிக்கையில், பரீட்சைக்கான வெட்டுப் புள்ளி வெளியிடப்படவேண்டும். இல்லாவிடின் இதன் வெளிப்படைத் தன்மை கேள்விக்குறியாகும். பரீட்சைப் புள்ளிகளோடு வீட்டு வாசலில் வந்து நிற்கின்றனர். எனவே, பரீட்சையின் வெட்டுப் புள்ளியை பகிரங்கமாக அறிவித்து விட்டால், தாம் குறித்த வேலைக்குத் தேர்வு செய்யப்படுவோமா இல்லையா என்பதை அவர்களே அறிந்து கொள்வார்கள் - என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கருத்துத் தெரிவிக்கையில், 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, தேசிய பொதுச் சேவைகள் ஆணைக்குழு சுயாதீனமாக்கப் பட்டுள்ளது. ஆனால் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு இன்னமும் ஆளுநரின் கட்டுப்பாட்டில் - அவரின் அதிகாரப் பகிர்வின் கீழ் இயங்குகின்றது. மாகாண பொதுச் சேவை கள் ஆணைக்குழுவும் சுயாதீனமாக இயங்கவழிசெய்யப்படவேண்டும் - என்றார்.

இறுதியாகப் பதிலளித்துக் கருத்துத் தெரிவித்த குழுக்களின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழு பரீட்சைகளை நடத்துகின்றது. அந்தப் பரீட்சைகளின் பெறுபேறுகள், எந்தத் திணைக்களத்தின் - அமைச்சின் ஆட்சேர்ப்புக்காக நடத்தப்படுகின்றதோ, அந்தத் திணைக்களத்துக்கு- அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. முழுமையான பெறுபேறும் அங்குதான் அனுப்பி வைக்கப்படுகின்றன.

எனவே, வெட்டுப் புள்ளி வெளியிடுதல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை முழுமையாக வெளியிடுதல் என்பவற்றை, எந்தத் திணைக்களம் - அமைச்சுக்கான ஆட்சேர்ப்பு பரீட்சை நடத்தப்பட்டதோ, அந்த திணைக்களம் - அமைச்சுத்தான் அதனை வெளியிடவேண்டும். அதற்கு குறித்த திணைக்களம் - அமைச்சுக்களுக்கு விரைவில் அறிவுறுத்தல் வழங்கப்படும் - என்றார்.

(த-ஐ-5-ரி5)

## மதத் தலைவர்கள், கட்சிகளுக்கு தமிழ் அரசியல் கைதிகள் கடிதம்

கொழும்பு, டிசெ.19
தமிழ் அரசியல் கைதிகள் தமது நிலை குறித்து அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் மதத் தலைவர்களுக்கு அவசர கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளனர்.

நீண்டகாலமாகச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தாம் அரசால் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டமை தொடர்பிலும், தமது விடுதலை தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியே இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, அரசு தமிழ் அரசியல் கைதிகளை மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் ஏமாற்றி வருவதாகத் தெரிவிக்கும் கைதிகள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கென அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தில் ஏனைய நீதிமன்றங்கள் போன்றே வழக்கு விசாரணைக்கான திகதி மட்டும் கொடுக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இவ்வாறு அரசு விசேட நீதிமன்றத்தின் மூலமும் எமது வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தாது காலத்தை கடத்துவதாகவும், இதனால் தாம் விசனம் அடைவதாகவும் தமிழ் அரசியல் கைதிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (த-சி)

## பசிலுக்கு அழைப்பாணை

கொழும்பு, டிசெ.19
திவிநெகும திணைக்களத்தின் நிதியை மோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறே நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது. (த)

## இலங்கை-துருக்கி நட்புறவுச் சங்கத்தின் தலைவராக தெரிவானார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு,டிசெ.19
இலங்கை - துருக்கி நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் நடைபெற்ற இலங்கை - துருக்கி நாடாளுமன்ற நட்புறவுச் சங்கக் கூட்டத்திலேயே அமைச்சர் ஹக்கீம் அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, பிரதித்தலைவர்களாக இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற [illegible] ஆகியோரும் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் [illegible] நாடாளுமன்ற உறுப்பினர் லக்கி ஜயவர்தன ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-ஐ-10)

## குரோதப் பேச்சுக்கு எதிரான சட்டம் கட்டாயம் வேண்டும்

### அமைச்சர் டிலான் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19
குரோதத்தைத் தூண்டும் வகையில் கருத்து வெளியிடுவதைத் தடைசெய்யும் சட்டவரைவு நிறைவேற்றப் படவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுகள்மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இனவாதிகள் அல்லர். அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்களே இனவாதிகளாக இருக்கின்றனர். அரசியல் அதிகாரத்துக்காகக் குரோதத்தைப் பரப்புகின்றனர்.

இதனால்தான் பிரபாகரன்கூட உருவாகினார். மீண்டுமொரு பிரபாகரன் உருவாவதற்கு இடமளிக்கக்கூடாது.

தேசிய இனப்பிரச்சினையை வைத்துத்தான் முன்னர் பிரதான இரு கட்சிகளும் அரசியல் நடத்தின. ஆனால், இன்று இரு கட்சிகளும் இணைந்துள்ளன. ஆகவே, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். சகல மக்களுக்கும் சம உரிமை வழங்கும் வகையில் புதியதொரு அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும். புதியதொரு தேர்தல் முறைமை உருவாக்கப்படவேண்டும்-என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவேன்

## ஜனாதிபதி மைத்திரிபால உறுதி

கொழும்பு, டிசெ.19
2015 ஜனாதிபதித் தேர்தலின் போது மக்களுக்கு வழங்கிய வாய்மொழிமூல மற்றும் எழுத்துமூல வாக்குறுதிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
அரசின் தேர்தல் வாக்குறுதிகள் காற்றில் போய்விட்டன எனக் குறிப்பிட்டு அரசியல் மேடைகள், நாடாளுமன்றம் மற்றும் ஊடகங்களில் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டு அரசு விழுகின்றவரை நாட்களை எண்ணிக் கொண்டு இருப்பவர்ககள் குறித்து தாம் அரசியல் ரீதியாக அனுதாபப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.



மின்சார சபை ஊழியர்கள் 2,344 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் பத்தரமுல்லையில் உள்ள பி.எச்.புத்ததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
2014ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி மின்சார சபை ஊழியர்களால் தங்களது தொழில் களை நிரந்தரமாக்குமாறு கேட்டு ஒரு பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அன்றைய தினம் பொது வேட்பாளர் என்ற வகையில் அந்த இடத்துக்குச் சென்று அவர்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இந்த நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.
அரசுகள் ஆட்சிக்கு வருவதும் தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதற்குமிடையே பல பிரச்சினைகள் அன்றிலிருந்து இருந்து வந்தபோதிலும், தமது அரசு தேர்தல் பிரகடனத்தினூடாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாட்டின் எதிர் காலத்திற்காக மிகத் தெளிவாக நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்போடு உள்ளது என்றும் ஜனாதிபதிஇந்தநிகழ்வில்உரையாற்றும் போது குறிப்பிட்டார்.
மக்களுக்குத் தனிப்பட்ட திருப்தியை ஏற்படுத்துவதும், வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையைத் தீர்ப்பதும் தொழில் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு ஆரம்பத்திலேயே தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதும் ஆரம்ப சில மாதங்களிலேயே எந்தவொரு அரசுக்கும் முடியாத காரியம் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, எதிர்வரும் வருடங்களில் அந்தப் பொறுப்புகளை முறையாக நிறைவேற்றவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.
அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத நிலையில், அரச யாப்பின் 19ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடிந்தமை, உலகின் ஜனநாயக அரசு ஒன்றின் வரலாற்றுச் சாதனை யாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நூறுநாள்வேலைத்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கும் 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கும் தேசிய அரச எண்ணக்கருவின் ஊடாக புதிய அரசுக்கு முடிந்துள்ளது என்றும் குறிப்பிட்டார். (த-சி)

### சான்றிதழ்கள் இன்னமும் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.19
யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த பட்டதாரிகள், தமக்குரிய சான்றிதழ்கள் இன்னமும் வழங்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர். அதனை விரைவில் வழங்க நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.
2012 மற்றும் 2013 ஆம் வருடங்களில் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்து பட்டமளிப்பை நிறைவு செய்த நிலையில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள்உள்ளனர்.தாம்நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளும்போது அவர்கள் சான்றிதழ் குறித்த பரிசீலனையில் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்துவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் யாழ்.வெளிவாரி பட்டப்படிப்புக்கள் பீடப் பொறுப்பாளர் பிரபாகரனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, குறித்த பட்டதாரிகளுக்கான சான்றிதழ் மும்மொழிகளிலும் இடம்பெறவேண்டும். தவறு இல்லாது பெயர்கள் எழுதப்பட வேண்டும். அந்தப் பணி இடம் பெற்று வருகிறது. அதனால் தான் தாமதம் நிலவுகிறது. அந்தப் பணி நிறைவடைந்ததும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு விடும். நேர்முகத் தேர்வின் போது அதனைக் கேட்பார்களாயின்அந்தநேரங்களில்சமர்ப்பிக்கஅதுபற்றியதரவுஆவணம் ஒன்றை வழங்கியுள்ளோம். என்று தெரிவித்தார். (த-ஐ-4)

# மகேஸ்வரி நிதியம் குறித்து தொடர்ந்தும் விசாரணைகள்

## சட்டம், ஒழுங்கு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19
யாழ்ப்பாணத்தில் லொறி உரிமையாளர்களிடமிருந்து மகேஸ்வரி நிதியம் கப்பம் பெற்றுக்கொண்டமை தொடர்பாக நிதிசார் குற்றப்புலனாய்வுப் பிரிவில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை நடத்தப்படுகின்றது என்றும், விசாரணைகள் மூலம் வெளிவருகின்ற விடயங்களுக் கேற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சு தெரிவித்தது.
நாடாளுமன்றம் நேற்று முன் தினம் முற்பகல் 9.30 மணிக்கு பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. பொதுமனுத்தாக்கல் இடம்பெற்ற பின்னர், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆரம்பமானது. இதன்போது ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி எழுப்பியிருந்த கேள்விகளுக்கு, சட்டம், ஒழுங்குமற்றும்தென்அபிவிருத்தி அமைச்சு சபையில் ஆற்றுப்படுத்திய பதிலிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளது.
*கேள்வி:* சட்டவிரோதமாகச் சேகரிக்கப்பட்ட பணத்தை சம்பந்தப்பட்ட லொறி உரிமையாளர்களுக்கு மீளப்பெற்றுக்கொடுக்க (அமைச்சர்) இடையீடு செய்வாரா?
*பதில்:* விசாரணைகள் மூலம் வெளிவருகின்ற விடயங்களுக் கேற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
2011ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டின் பிற்பகுதி வரையான காலப் பகுதியில் யாழ்ப்பாண லொறி உரிமையாளர் களிடமிருந்து அரசியல் அழுத் தத்தின்பேரில் மகேஸ்வரி நிதியம் எனப்படும் அமைப்பால் நாளாந்தம் பணம் சேகரிக்கப்பட்டுள்ளதை அவர் ( அமைச்சர்) அறிவாரா?, போக்குவரத்து தடவை ஒன்றுக்காக 300 ரூபா தொகை பெறப்பட்டுள்ளதா?, லொறி உரிமையாளர்கள் சங்கத்தின் கடுமையான அதிருப்திக்கு மத்தியிலும், நாளாந்தம் பணம் சேகரித்த மகேஸ்வரி நிதியம் எந்த அரசியல்வாதியின் அதிகாரத்துடன் செயற்பட்டது?, 2010 -2014 காலப்பகுதியில் பற்றுச்சீட்டு வழங்கி லொறி உரிமையாளர்களிடமிருந்து நாளாந்தம் சேகரித்த பணத் தொகை எவ்வளவு?, மகேஸ்வரி நிதியம் ஏதேனும் அரச நிறுவனத்தால் மேற்பார்வை செய்யப்பட்டதா? அதன் ஊடாக லொறி உரிமையாளர்களுக்குக் கிடைத்த சலுகை என்ன? என்றும் சுனில் ஹந் துன்நெத்தி வினாக்களை எழுப்பியிருந்தார். இந்த வினாக்கள் ஏற்புடையவையல்ல என்று சட்டம், ஒழுங்கு அமைச்சு பதிலளித்துள்ளது. (த-சி)

# அரசமைப்பு மறுசீரமைப்புக்கு பொதுமக்களின் அபிப்பிராயம்

## 24 பேர் கொண்ட குழுவை நியமிக்க முடிவு

கொழும்பு, டிசெ.19
அரசமைப்பு மறுசீரமைப்புக்காக மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிவதற்காக 24 பேர் கொண்ட நிபுணர் குழுவொன்றை நியமிக்க அரசு உத்தேசித்துள்ளது.
இதேவேளை, அரசமைப்பு மறுசீரமைப்புக்கான இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றுவதற்கான பிரேரணை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் எதிர்வரும் ஜனவரி 9ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.
நாடாளுமன்றக்கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டாக்டர் ராஜித சேனாரத்னவால் மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டது.
இந்த விடயம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்துவதற்காக 2015.11.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அரசமைப்பு மறுசீரமைப்புக்கான அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பு மறுசீரமைப்புக்காக மக்களின் அபிப்பிராயங்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடாக பெற்றுக்கொள்ளும் நோக்கில் குழுவொன்றை நியமிக்க அந்த அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



“மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 24 நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப் படவுள்ளது.”

மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 24 நிபுணர்கள் அடங்கிய குழு வொன்று நியமிக்கப்படவுள்ளது.
இந்தக் குழுவானது மும்மூன்று பேர் கொண்ட அணியாகப் பிரிந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கூட்டங்களை நடத்தி மக்கள் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களைப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பது என்பதை அமைச்சரவை பரிசீலனை செய்துள்ளது.
இதேவேளை, அரசமைப்பு மறுசீரமைப்புக்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்காக அரசமைப்புச் சபையாக நாடாளுமன்றத்தை மாற்றுவதற்கான பிரேரணையை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 9ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்க பிரதமர்ரணில்விக்கிரமசிங்கநடவடிக்கை எடுக்கவுள்ளார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பேரினவாதப் போக்கை உடைக்கும் வல்லமை நல்லாட்சிக்கு உண்டா...?

நாட்டில் வாழும் இனங்களுக்கு இடையே, நல்லிணக்கத்தை உருவாக்கு வதற்கான, கொண்டு வருவதற்கான உரிய பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அது குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. அதற்கென விசேட செயலகம் ஒன்று அமைக்கப்படும் என்பதும் தகவல்.

மேற்போந்த செயலகத்தின் ஊடாக, நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தீர்மானங்களை முன்னெடுத்து, மீண்டும் இனமோதல்கள் ஏற்படாவண்ணம், தடுக்கும் நல்லிணக்கப் பொறிமுறையை உருவாக்க அரசு தீர் மானித்து உள்ளது.

நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்பான பணிகளை, அரச நிறுவனங்கள் ஊடாக விரைந்து செயலாக் கவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதேவேளை, மக்களின் கருத்துக்களையும் அறிவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னர், நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தை அடைவதற்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்தும்--

பல்வேறு காரணங்களால் அது கைநழுவிப் போனமை குறித்து அமைச்சரவைத் தீர் மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் ஆட்சியில் இருந்த தென்னிலங்கைத் தலைவர்கள் நல்லிணக்கத்தை உருவாக்கு வதற்கு, மனப்பூர்வமாக முயற்சி செய்ய வில்லை.

இப்போது ஐக்கிய நாடுகள் சபை உட் பட்ட வெளியாரின் "நெருக்குதல்களை" மனதில் இருத்தியே, நல்லிணக்கம் குறித்துப் பேசப்படுகிறது என்ற சந்தேகம் மேலெழுகிறது அல்லவா?

ஆனால் முழுக்க முழுக்க, அரசால், ஆட் சித் தலைவர்களால் உள்ளார்ந்த உணர் வுடன் நல்லிணக்க முயற்சி முன்னெடுக் கப்பட்டால்--

அதுவே பேரியக்கமாக வளர்ந்து, நாட்டில் வாழும் சகல இனமக்களுக்கும் நன்மை பயக்கும் என்பதை, தென்னிலங்கையின் அரசியல் தலைவர்கள் உய்த்து உணர வேண்டும். அத்தகைய நிலை எப்போது முளைவிட்டு, உயர்ந்து வளரப்போகிறது?


சின்னம் சிறிய இந்தத் தீவில், வாழும் மூவின மக்களும் நிலையான சமாதான சக வாழ்வு காண்பதற்குத் தடையாக இருக்கும் பேரின வாதப் போக்கு உடைத்து எறியப் பட வேண்டிய ஒன்று. இதனை உணர்ந்து, உள்ளார்ந்து நல்மனதுடன் பேரினவாதப் போக்கை உடைத்தெறியத்தக்க விதத்தில் நல்லாட்சி அரசு விரைந்து செயற்பட வேண்டும்.

பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை என்ற ஒவ்வாத நிலை களைந்து எறியப்படுவது எப்போது? அதனையே தமிழ் மக்கள் எதிர் பார்க்கிறார்கள். வெறும் வாய் வேதாந்தங்கள் கவ்வைக்கும் உதவாதவை என்பதை ஆட்சி யாளர்கள் ஊன்றி உணர்வது எப்போது..?

# மாற்றமடைந்து வரும் சமூக விடுதலைப் போராட்டங்களும்

## மாற்றத்துக்குள்ளாகும் சமூக மூலதனங்களும்

சிவா செல்லையா



கடந்த ஐந்து நூற்றாண்டுகால உலக வரலாற்றை உற்று நோக்குவோமாயின், சமூகத்தின் வளர்ச்சியில் கைத்தொழிற் புரட்சி, பசுமைப் புரட்சி, தொழில்நுட்பப் புரட்சி, மருத்துவப் புரட்சி, கணினித் தொழில்நுட்பப் புரட்சி எனப்பல சமூக மூலதன மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்தச் சமூக மூலதனங்களைக் கையாள்பவர்களே அந்தச் சமூகத்தைக் கட்டுப்படுத்துபவர்களாகவும், ஏனைய சமூகங்களை அடக்கி ஆள்பவர்களாகவும் அமைகின்றனர். ஒடுக்கப்பட்ட சமூகம் அதன் விடுதலையை வேண்டிப் போராடும்போது, அடக்குமுறையாளர்கள் அதனைத் தடுக்க சமூக வளங்களை அழிப்பர். மேலும் சமூக வளங்களை விற்பனை செய்வர். அடுத்து சமூக வளங்களை அபகரிப்பர். இவற்றுடன் நில்லாது அடக்கு முறைக்கு உட்பட்ட சமூகத்தின் சமூக வளங்கள் மேலும் விருத்தியடையாது தடுப்பர். ஓர் இனத்தின் இருப்புக்கு, அந்த இனத்தின் பொருளாதாரத்தைத் தக்க வைத்தல் மிகவும் இன்றியமையாததாகும். எனவே ஒவ்வொரு இனமும் தனது சமூக மூலதனம் காவு கொள்ளப்படுவதைத் தடுத்துக் காத்தல் வேண்டும். இது ஈழத்தமிழர்களுக்குச் சாலவும் பொருந்தும்.

கைத்தொழிற் புரட்சியின்போது தொழிற்சாலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்களால் பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டது. பின்னர் ஐரோப்பாவை இவர்களால் கட்டுப்படுத்த முடிந்தது. அடுத்து ஐரோப்பிய உலக மயமாதல் ஏற்பட்டது. அவ்வாறே பசுமைப் புரட்சியின்போது ரஷ்யாவிலும் பண்ணைகளை அமைத்து, சோசலிசப் புரட்சி மூலம் லெனின் ஆட்சியைக் கைப்பற்றித் தக்க வைத்தார். சோசலிசப் புரட்சிகள் கியூபா மற்றும் தென் அமெரிக்க நாடுகளிலும் பரவியது. சீனா, கம்யூனிசப் புரட்சியை மேற்கொண்டது. இவையாவற்றுக்கும் அடிப்படை சமூக மூலதனத்தைக் கைப்பற்றுதல் ஆகும்.

### இலங்கையின் நிலைமையும் தமிழ் மக்களும்

ஐரோப்பிய உல்க மயமாதலாலேயே இலங்கையில் தமிழர்களின் இராசதானிகள் அழிக்கப்பட்டு, குடியேற்ற நாடாக்கப்பட்டது. தமிழகத்திலுள்ள தமிழர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டு உலக நாடுகள் பலவற்றுக்கு கப்பல்களில் ஏற்றி அனுப்பப்பட்டனர். இதனால் தமிழர்களின் தொன்மை வரலாறு மறைக்கப்பட்டது. இலங்கை சுதந்திரமடைந்தபோது தமிழர்களின் தாயகப் பூமியையும், சிங்களவரிடம் பிரித்தானிய அரசு ஒப்படைத்து விட்டது. சிங்கள அரசு தமிழர் மீது [illegible] தமிழர் தாயகத்தையும், அதன் வளங்களையும் அபகரிக்கத் தொடங்கினர். நிலங்களை அபகரிக்க பசுமைப்புரட்சி முறையில் பண்ணைகளை அமைத்து விவசாயக் குடியேற்றங்களை அமைத்தனர். கல்லோயா முதல் வவுனியாவரை இத்தகைய குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. இதற்கு உரிய பண்ணைச் சமூக அமைப்பாக சர்வோதய அமைப்புச் செயற்பட்டது. தமிழின அடக்குமுறைகள் பசுமைப் புரட்சியின்போது பண்ணை அமைப்புக்களாக நிகழ்த்தப்பட்டன. எனவே தமிழீழ விடுதலைப் போராட்டங்களும், வயல்வெளிகளில் பண்ணைகளை அமைத்து கிராமிய பொருளாதாரத்தைத் தக்கவைத்து, எல்லைக் கிராமங்களில் நிகழ்ந்த இனநகர்ப்பை ஓரளவு தடுத்தது. சிலிக்கன் வெளியில் சமூக மூலதனம் என்பது கணினித் தொழில்நுட்ப உற்பத்தியின் முதலீடு ஆகும். கணினி மென் பொருள்களை உருவாக்கல், கணினி வலையமைப்பை உருவாக்கல், கணினிகளைச் செயற்படுத்தல் போன்ற துறைகளில் நிபுணத்துவம் உடையவர்களும் அதனை இயக்குபவர்களுமே புதிய சமூக மூலதனமாகும். எனவே சிலிக்கன் வெளியில் நுழைவதற்கான கல்வியைப் பெற்றவர்களை உருவாக்குவதே இதன் அடிப்படைத் தேவையாகும். இதற்குரிய முதலீட்டை சிறிய நுண் பொருளாதார விருத்தி (Nano finance development) என்று கூறலாம்.

> நவீன பயங்கரவாதத் தொடர் பாடல்கள், பரப்புரைகள், ஆள் சேகரிப்புத் தாக்குதல்கள் யாவும் கணினித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துபவையாகவே உள்ளன.

### ஆயுதங்களால் கட்டுப்படுத்தப்பட்ட தொழிலாளர்கள்

கைத்தொழிற் புரட்சிக் காலத்தில் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்த ஆயுதங்கள் தேவைப்பட்டன. அதேபோல் பசுமைப் புரட்சிக் காலத்தில் நிலத்தைத் தக்கவைக்க ஆயுதங்கள் தேவைப்பட்டன. ஆனால் கணினி தொழில்நுட்பப் புரட்சியில் ஆயுதங்கள் தேவையில்லை. கணினி மென்பொருள் கையாளல் திறன் நுட்பமே தேவையாகும்.

இஸ்லாமியத் தீவிரவாதிகளின் வெற்றிக்கு, கணினி மென் பொருள் கையாளுகையே அடிப்படைக் காரணமாகும். அதாவது நவீனவிடுதலைப்போராட்டங்கள் நிலத்தைத் தக்கவைப்பதை அடிப்படையாகக் கொள்ளாது, சிலிக்கன் வெளியில் பல முகாம்களை அமைத்து விடுகின்றன. நவீன பயங்கரவாதத் தொடர் பாடல்கள், பரப்புரைகள், ஆள் சேகரிப்புத் தாக்குதல்கள் யாவும் கணினித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துபவையாகவே உள்ளன. மத்திய கிழக்கில் இவற்றை அவதானிக்கலாம். கடந்த 60 வருடங்களுக்கு மேலாக மத்திய கிழக்கு நாடுகளில் நிலவிய சனநாயகமற்ற சர்வாதிகார ஆட்சிகளின் விளைவாக ஏற்பட்ட சமூக மாற்றமே இஸ்லாமியத் தீவிரவாதமாகும்.

தொடர்ந்து ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சமூகம் அதில் இருந்து விடுதலை அடையத் தன்னால் இயலுமான அனைத்து வழிமுறைகளையும் கைக் கொள்ளும். இதற்கு தமிழரும் விதிவிலக்கல்ல என்பதை இலங்கை அரசும், இந்திய அரசும், சர்வதேசமும் புரிந்து கொள்ள வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் – வீ.எஸ்.ரீ.

# மகிந்தவின் அரசியல் இருப்புக்கு விடுதலைப் புலிகளது பெயர் அவசியமே!

மகிந்தவும் அவரது சகோதரர் கோத்தபாயவும் இந்த நாள்களில் இரவில் தூக்கம் வராத அளவுக்கு அச்சத்தின் வசப்பட்டுள்ளனர். இன்றைய அரசு சிறையில் இருக்கும் விடுதலைப் புலிகளை விடுவிப்பதன் மூலம் தமக்கு உயிராபத்து நேரும் அபாயம் உள்ளதாக மகிந்த கூக்குரல் இட்டு வருகிறார்.

**புலிகள் விடுவிக்கப்பட்டதை மறந்தவர்கள்**

தமது ஆட்சிக்காலத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களைத் தாம் விடுவித்ததை வசதி கருதி மறந்துவிட்டது போன்று மௌனம் சாதித்த இவர்கள், அவர்களால் பத்தாயிரம் பேர்வரை விடுவிக்கப்பட்டமையைச் சுட்டிக்காட்டியதை அடுத்து அவ்விதம் தம்மால் விடுவிக்கப்பட்டவர்கள் தீவிர விடுதலைப் புலிகள் அல்லர் எனச் சப்பைக்கட்டுக் கட்டி வருகின்றனர்.

ஆயினும், விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னிலைத் தலைவர்களாகச் செயற்பட்ட சென்னன், சந்திரலிங்கம், தேவதாசன், காமினி ஆகியோர் அமைப்பில் பல்வேறு உயர்நிலைப் பதவிகளை வகித்தவர்கள். போரின் இறுதி வேளையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்களை மகிந்த அரசு விடுவித்தமை மட்டுமன்றி, இவர்களில் சிலர் பொதுத் தேர்தலில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சுயேச்சைக் குழுவொன்றின் வேட்பாளர்களாகவும் போட்டியிட்டிருந்தனர்.

**தேர்தல் தந்திரம்**

உண்மையில் மகிந்தவும் – கோத்தபாயவும் அன்று அவர்களை விடுவித்தது, அவர்களை அரசியலரங்குக்குள் கொண்டுவந்து, 2005ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் விடுதலைப்புலிகள் மூலமாக தமிழ் மக்கள் வாக்களிப்பதைப் புறக்கணிக்க வைப்பித்தமை போன்று இம்முறையும் செயற்பட்டு எதிரணியின் பொது வேட்பாளரைத் தோற்கடித்து தாம் தேர்தலில் வெற்றியீட்டும் திட்டத்திலாகும். ரணிலே பொது வேட்பாளராகப் போட்டியிடு வாரெனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக ரணில் தமிழ் மக்களது பெரும்பாலான வாக்குகளை ஈட்டிக்கொள் ளக்கூடுமெனவும் கணக்கிட்டு அவ்விரு வரும் அஞ்சினர். எனவே தமிழ் மக்களது ஆதரவைப் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக் கள் மத்தியில் நலிவுபடுத்தி, விடுதலைப்புலிகள் மீதான தமிழ் மக்களது அனுதாபத்தை ஈட் டத்தக்க அந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களைத் தேர்தல் களத்தில் இறக்கி அவர்களூடாக தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பைப் புறக்கணிக்கச்செய்யும் திட்டத்துடனேயே அண்ணனும் தம்பியும் அரசியல் காய்நகர்த்தலை மேற்கொண்டனர்.



மகிந்தவும் – கோத்தபாயவும் மேற்கொண்ட இந்த அரசியல் காய்நகர்த்தல், 1994 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்காக முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க மேற் கொண்ட காய்நகர்த் தலை ஒத்ததொன் றாகும். பொ.ஐ.முன்னணியின் வெற்றியைத் தடுப்பதற்காக, தடைசெய் யப்பட்டிருந்த ஜே.வி. பியின் தடையை நீக்கி அவர்களுக்கு அரசியலில் ஈடுபட வாய்ப்பளித்தார் டி.பி. விஜயதுங்க. அதேபோன்று விடுதலைப் புலிகளது ஆதரவு வாக்குகளே 2013 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரு வெற்றிக்குக் காரணம் என்பதைத் தெரிந்து கொண்டு அதனை உடைக்க விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளை விடுவித்துத் தேர்தலில் களமிறக்கத் திட்டமிட்ட மகிந்தவினதும் கோத்தபாய வினதும் திட்டம் தவறானதொன்றல்ல.

**மைத்திரி-சந்திரிகா-ரணில் கூட்டு**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி – சந்திரிகா – ரணில் கூட்டை நம்பவேண்டாமெனவும், தேர்தலில் வாக்களிப்பதைப் புறக்கணிக்குமாறும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் விடுதலைப்புலிகளது ஆதரவாளரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும் அதற்கு ஆதரவு வழங்கின. மகிந்த அரசால் விடுவிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களும் அதற்காகப் பாடுபட்டனர்.

ஆனால் இந்தத் தரப்பினரது கருத்து நிலைப்பாட்டை மறுதலித்த தமிழ் மக்கள், தேர்தல் வாக்களிப்பைப் புறக்கணிக்காது தேர்தலில் மைத்திரிபாலவுக்குப் பெருமளவில் வாக்களித்ததன் மூலம் அவரை வெற்றியீட்டச் செய்தனர்.

அதன் பின்னர் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும், மேற்குறித்த தரப்பினர் மகிந்தவின் ஆசீர்வாதத்துடன் சுயேச்சைக் குழுக்களாக தேர்தலில் போட்டியிட்டனர். தாம் அரசமைக்க போதிய பெரும்பான்மை கிட்டாதவிடத்து குறிப்பிட்ட இந்தச் சுயேச்சைக் குழுக்கள் சார்பில் தெரிவாகும் உறுப்பினர்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டு அரசொன்றை நிறுவுவதற்கான பேச்சுக்களையும் மகிந்த – கோத்தபாய தரப்பினர் மேற்கொண்டு முடித்திருந்ததாகவும் கூறப்பட்டது.

**தோல்வி கண்டது மகிந்தவின் வியூகம்**

இதனாலேயே விடுதலைப் புலிகளது ஆதரவுத் தரப்புக்களைப் பயன்படுத்தி, தமிழ் மக்களை வாக்களிப்பைப் புறக்கணிக்க வைப்பித்துத் தேர்தலில் வெற்றி பெற மகிந்த வியூகம் வகுத்துச் செயற்பட்ட போதிலும், தமிழ் மக்கள் அந்தத் தரப்பினரது வார்த்தைகளைக் கணக்கில் எடுக்காது மகிந்தவைத் தோற்கடித்தனர். அந்த வகையில் இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் மாவீரர் தினம் என்பவற்றை நோக்கும்போது தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளது நிலைப்பாட்டை மெல்லக் மெல்லக் கைவிட்டு வருவதாகத் தோன்றுகிறது. ஆனால் அதே வேளை, இன்று மகிந்தவுக்கும் கோத்தபாயவுக்கும் மற்றும் அவர்களுக்குப் பந்தம் பிடிக்கும் நாட்டுப்பற் றாளர் தரப்புக்குமே தமது அரசியல் இருப்பைத்தக்க வைத்துக் கொள்வதற்காக விடுதலைப் புலிகளது பெயரைப் பயன்படுத்தும் தேவை அவசியமா கிறது எனக்கொள்ள வேண்டியுள்ளது.

> “தேர்தல் களத்தில் இறக்கி அவர்களூடாக தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பைப் புறக்கணிக்கச்செய்யும் திட்டத்துடனேயே அண்ணனும் தம்பியும் அரசியல் காய்நகர்த்தலை மேற்கொண்டனர்.”

நன்றி மவ்பிம

## வீதியைப் புனரமைத்து வழங்கவும்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சில்லாலை தெற்கு கிறிஸ்துராசா சனசமூக நிலையப் பகுதியில் வசிக்கும் சுமார் 100க்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதை சீர் இல்லாமல் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக செட்டியடைப்பு உந்துசாந்தை இணைப்பு போக்குவரத்து வீதியை இவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த வீதி பயன்பாட்டுக்கு ஏதுவானதாக இல்லை. மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. சில்லாலை கதிரை மாதா ஆலயம் செல்பவர்கள், பாடசாலை செல்லும் மாண வர்கள், தொழில் புரிவோர் எனப்பலரும் சிரமப்படுகின்றனர். இந்த விடயத்தை ஏற்கனவே அரசியல்வாதிகளிடம் கூறியபோது, இதனை நிறைவேற்றுவோம் என உறுதியளித்து பின்னர் எந்தவொரு புனரமைப்பையும் செய்யவில்லை. மிகவும் அவசிய, அவசர தேவையாக உள்ள இந்த வீதியைப் புனரமைத்துத் தர இதற்குரிய தரப்புக்கள் முன்வர வேண்டுமென எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகம் வேண்டுகோள் விடுக்கின்றது.

வ.இ.செல்வகுமார்
சமூக சேவையாளர்.

## எப்போது விமோசனம் கிடைக்கும்?

தமிழர்களின் பண்பாடுகளைச் சித்திரிக்கும் சிவபூமியாக இருக்கும் கீரிமலைப் பகுதிக்குச் செல்லும் வீதியாக அம்பனையில் இருந்து கீரிமலை ஆலடிக்கும் இடையில் உள்ள வீதி போர்க்காலத்தில் இருந்தவாறே இன்றும் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியால் 768 இலக்கப் பேருந்துகள், கீரிமலைக்கு செல்லும் யாத்திரிகள், பாடசாலை செல்லும் மாணவர்கள், விவசாயிகள் எனப் பலரும் பயணிக்கும் நிலையில், இந்த வீதியைப் போர் முடிவுற்றும் பிரதேச சபையோ பெருந்தெருக்கள் திணைக்களமோ கணக்கில் எடுக்காமை கவலைக்கிடமாகவுள்ளது. இந்த வீதியால் பயணிப்பவர்கள் உயிரைக் கையில் பிடித்தவாறே செல்வதை அவதானிக்க முடிகிறது. எனவே இந்த வீதிக்கு எப்போது விமோசனம் கிடைக்கும்?

மா.தவலிங்கம், அளவெட்டி

## குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வுதான் என்ன?

சுன்னாகம் வடக்கில் வாழ்கின்ற மக்கள் பெரும் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுவருகின்றனர். நிலத்தடி நீரில் ஒயில், எண்ணெய்க் கழிவுகள் கலந்துள்ளதாகத் தெரிய வந்ததை அடுத்து இந்தப் பகுதி மக்கள் தமது கிணறுகளிலிருந்து குடிதண்ணீரை எடுப்பதைத் தவிர்த்து விட்டார்கள். இதையடுத்து பல்வேறு இடங்களிலும் நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் பிரதேச சபையால் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம் எவ்வித அறிவித்தலுமின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே இந்தப்பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது இவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று குடிதண்ணீரைப் பெற்று வருகிறார்கள். ஆனால் அந்த இடங்களிலும் சில வேளைகளில் நீரைப் பெறுவதற்கு முடிவதில்லை. அதிகமானவர்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு அங்கு வருவதே இதற்கான காரணமாகும்.

தற்போது உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்ட நிலையில் அதிகாரிகளே சபைகளின் நிர்வாகத்தைக் கவனித்து வருகின்றனர். அவர்களும் இந்த விடயத்தில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. ஆனால் மாகாண சபை, மக்களின் பிரதிநிதிகளுடன் முழுமையாக இயங்கி வருகின்றது. ஊர்கள் தோறும் மாகாண சபை உறுப்பினர்களும் உள்ளனர். ஆனால் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை அவர்கள் கவனிப்பதாகவே தெரியவில்லை. மக்கள் தமக்குச் சேவை செய்வதற்கென்றே இவர்களைத் தெரிவு செய்து அனுப்பி வைத்தனர். ஆனால் மக்களின் குறித்த குறை தெரிந்தும்கூட இவர்கள் அசமந்தமாக இருப்பது எந்த வகையிலும் நியாயமானதல்ல.

மாகாண சபையில் உப்புச்சப்பற்ற, மக்களுக்குப் பயன் தராத விவாதங்கள் நடத்துவதை விடுத்து மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் முன்வர வேண்டும். மக்களின் தலையாய தேவையான குடிதண்ணீரைக் குறைவின்றி வழங்குவதற்கு மாகாண சபை நிர்வாகம் நடவடிக்கை எடுத்தால் அதுவே பெரும் உதவியாக இருக்கும்.

சி.மகேந்திரன், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புடினின் பாராட்டு

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான வேட்பாளராக ஆகக் கூடும் எனக் கருதப்படும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டொனால்டு டிரம்ப்பின் அறிவுக்கூர்மை தம்மை வியக்க வைப்பதாக ரஷ்ய அதிபர் புடின் கூறியுள்ளார்.

தலைநகர் மொஸ்கோவில் நடந்த வருடாந்த பத்திரிகையாளர் சந்திப்பில் ரஷ்ய அதிபர் விளாடிமர் புடின் பேசினார். சுமார் 2 மணி நேரம் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் வரவிருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தல் குறித்தும் அவர் பேசினார்.

அப்போது அதிபர் வேட்பாளர் டிரம்ப் குறித்துக் கேட்ட போது, "அறிவுக்கூர்மை கொண்டவர். அவரது திறமையை எவராலும் எடைபோட முடியாது. அதற்கான உரிமை அமெரிக்க வாக்காளர்களுக்கு மட்டுமே உள்ளது. ஆனால் அவர் அமெரிக்கத் தேர்தலில் நிற்கத் தகுதி வாய்ந்தவர். அவர் பேசும் விதம் குறித்தும், மக்கள் மத்தியில் நீடித்து நிற்க அவர் கையாளும் முறை குறித்தும் ரஷ்ய தரப்பிலிருந்துகூற எதுவும் இல்லை. அது எமது வேலையும் இல்லை. ஆனால் அவரது கொள்கையை நான் வரவேற்கிறேன்" என்றார்.

அமெரிக்காவில் முஸ்லிம் குடியேற்றத்துக்கு முழுமையாகத் தடை விதிக்க வேண்டும் என்று டொனால்டு டிரம்ப் அதிரடியாகக் கூறிவருகிறார். இதற்குச் சர்வதேச அளவில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்த நிலையில் தான் அவரை ரஷ்ய அதிபர் பாராட்டியுள்ளார். (உ)

## மெக்ஸிக்கோவில் நிலநடுக்கம்

வட அமெரிக்காவில் உள்ள மெக்ஸிக்கோ நாட்டில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் தெற்கு மெக்சிகோவின் பல பகுகளில் உணரப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சியாப்பாஸ் மாநிலத்தில் உள்ள கடற்கரை நகரமான டிரெஸ் பிக்கோஸ் அருகே பூமியின் அடியில் 117 கிலோ மீற்றர் ஆழத்தில் உரு வான இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.6 ஆக பதிவாகியுள்ளது. (ஐ-ரி4)



பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவிற்குத் தெற்கே உள்ள சொர்சோகன் மாநிலத்தின் மகல்லானே நகரம் அண்மையில் ஏற்பட்ட சூறாவளியால் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. மெலார் எனப் பெயரிடப்பட்ட சூறாவளி மணிக்கு 185 கிலோ மீற்றர் வேகத்தில் கரையைக் கடந்தது. இதில் குறைந்தது 20 பேர் உயிரிழந்தனர். மரங்கள் மின் கம்பங்கள் என்பவற்றையும் முறித்துப் போட்டது இந்தச் சூறாவளி. ஆயிரக்கணக்கானோர் தமது வீடுகளை முழுமையாக அல்லது பகுதியளவில் இழந்துள்ளனர். வீடிழந்த சிறுமி ஒருத்தி எதிர்காலம் குறித்த ஏக்கத்துடன் அமர்ந்திருக்கிறாள்.

# உலகில் 6 கோடி அகதிகள்

## சிரியப் போருக்கு முன்னரே இந்த எண்ணிக்கை என்கிறது ஐ.நா.

உள்நாட்டுப் போர், தீவிரவாதம் ஆகியவற்றால் தங்கள் நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளாக்கப்பட்டோர் எண்ணிக்கை 6 கோடியைத் தாண்டியுள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் அறிக்கை இதனைத் தெரிவித்துள்ளது. இதில் 2.2 கோடிக்கும் அதிகமானோர் போர் மற்றும் அடக்குமுறை காரணமாக அகதிகளாக்கப் பட்டவர்கள்.

இவர்களில் சுமார் 20 லட்சத்துக்கும் அதிகமானோர் ஜேர்மனி, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தஞ்சமடைய விரும்பி விண்ணப்பித்த நிலையில் அவர்களின் கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன.

முதல் முறையாக வலுக்கட்டாய உலக அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 6 கோடியைத் தாண்டியுள்ளது. 122 பேர்களில் ஒருவர் என்ற விகிதத்தில் தங்கள் வீடு, உடமை, நாடுகளை இழந்து வெளியேறியுள்ளனர்.

சுமார் 3.4 கோடி மக்கள் உள்நாட்டு அகதிகளாகியுள்ளனர். இது 2014ஆம் ஆண்டின் எண்ணிக்கையைக் காட்டிலும் 20 லட்சம் அதிகமாகியுள்ளது.

மார்ச் மாதம் உள்நாட்டுப் போர் மூண்ட ஏமன் நாடு இதில் முதலிடம் வகிக்கிறது. இந்த நாட்டிலிருந்து மட்டும் 9 லட்சத்து 33 ஆயிரத்து 500 பேர் அகதிகளாகியுள்ளனர்.

அனைத்தையும் இழந்து தவிப்போர் மீது முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு சகிப்புத் தன்மை, தயவு காட்டும் குணம், ஒற்றுமையைக் கோருகிறது இந்தத் தகவல்கள்.

வளரும் நாடுகளின் சண்டைப் பகுதிகள் அகதிகள் உருவாக்கத்தில் கணிசமான பங்களிப்புச் செய்து வருகின்றன. ஒக்ரோபரில் சிரியா, மியான்மர், ஈராக், ஆபிரிக்க நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்தோர் வரத்து அதிகரித்த காலகட்டத்துக்கு முந்தைய கணக்கெடுப்பு இது என்பதும் கவனத்துக்குரியது.

சிரிய உள்நாட்டுப் போர் பெரிய அளவில் புலம்பெயர்வைத் தூண்டியுள்ளது. இந்த ஆண்டின் முதல் பாதி வரை 42 லட்சம் சிரிய அகதிகள் வெளி நாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ளனர், சுமார் 76 லட்சம் பேர் அந்த நாட்டிலேயே உள்நாட்டு இடம்பெயரிகளாகி உள்ளனர்.

ஆப்கான், சோமாலியா, தெற்கு சூடான் வன்முறையும் அகதிகள் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்து வருகிறது. இதில் பாதுகாப்பாக மீண்டும் நாடு திரும்புவோர் எண்ணிக்கை இந்த ஆண்டின் முதல் பாதி வரை 84,000 பேர் மட்டுமே. வரும் ஆண்டுகளிலும் பல அகதிகள் தங்கள் நாடுகளை விட்டு வெளியில் வாழும் நிலையே தொடரும். சுருக்கமாகக் கூறவேண்டுமெனில் இன்று நாம் அகதிகளாகிவிட்டால் மீண்டும் தாயகம் திரும்புவதற்கு 30 ஆண்டுகள் பிடிக்கும் என்று இந்த அறிக்கை கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிரியாவில் இருந்து வரும் அகதிகளுக்கு அடைக்கலம் வழங்க மேற்குலக நாடுகள் தற்போது பின்னடித்துவரும் நிலையிலும் ஜேர்மனி தொடர்ந்தும் அகதிகளுக்கு ஆதரவளித்து வருகின்றது. இந்தப் போக்கால் அது நட்பு நாடுகளிடம் இருந்து கடும் அழுத்தங்களையும் எதிர்கொண்டு வருகின்றது. ஜேர்மனிக்குள் நுழைந்துள்ள அகதிகள் தலைநகர் பேர்லினின் பழைய வானூர்தி நிலையத்தில் தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



## விமானியின் தவறால் ஊழியர் பரிதாபச் சாவு

மும்பை, டிசெ.19

எயார் இந்தியாவின் விமானப் பணியாளர் ஒருவர் விமான இயந்திரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மும்பை விமான நிலையத்தில் ஹைதராபாத்துக்குப் புறப்பட தயாராக இருந்த விமானத்தில் இடம்பெற்றது.

விமானிசமிக்ஞையைத்தவறாகப்புரிந்துகொண்டு விமானத்தை இயக்கியுள்ளார். விமான இயந்திரத்தின் அருகே நின்றிருந்த பணியாளரை இயந்திரம் சடுதியாக உள்ளே இழுத்துள்ளது. இயந்திரத்தை நிறுத்துவதற்குள் இயந்திரத்தின் காற்றுத் தகடுகளுக்குள் சிக்கி படுகாயமடைந்த பணியாளர் உயிரிழந்தார். பல மணி நேரப் போராட்டத்தின் பின்பே சடலத்தை மீட்க முடிந்துள்ளது. (ஐ-ரி4)

இந்திய
இரகசி
அணு
உற்பத்

வொஷிங்டன்
உலகில் எவருக்
மல் இந்தியா
தங்களைத்
தேவையான
உருவாகி வரு
அமெரிக்க வெ
கொள்கைப்
தெரிவித்துள்
அணு ஆயுதங்
ரிக்கத் தேவைய
யம் தாதுவை
டும் வல்லமை
வாக்கப்பட்டு
மையம், 2017
டில் இருந்து
தொடங்கும்.
னர், வீரியம்மி
குண்டுகள் ம
வெப்பத்தை
தெர்மோ அ
இந்தியா திட்ட
தாக அந்த பத்தி
பிட்டுள்ளது.
இந்தியா இது
தக்கருத்தையு
யில் தெரிவிக்
இந்தியா தனது
குண்டுச் சோ
நடத்தும் வ
அதை அறிந்திரு



ஷெய்ப
செய்வத
மாகான
ஈடுபட்
கண்ணீ
பத்திரி
ஒருவன

## சீனாவி


சீனத் தலைநக
பீஜிங்கில் வளி
தாங்க முடியாத
நிலையை எட்
ளதாக ஒரு வா
குள் இரண்டா
தடவையாக சி
எச்சரிக்கை வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா
ரிய
ஆயுத
ந்தி

, டிசெ.19
க்கும்தெரியா
அணு ஆயு
தயாரிக்கத்
நிலையத்தை
நகிறது என
வளி யுறவுக்
பத்திரிகை
ளது.
களைத்தயா
பானயுரேனி
ச் செறிவூட்
மயுடன் உரு
வரும் இந்த
7ஆம் ஆண்
செயல்படத்
அதன் பின்
க்க ஐதரசன்
ற்றும் அதிக
மிழக்கூடிய
ணு குண்டு
தி செய்ய
மிட்டுள்ள
ரிகை குறிப்
. எனினும்
குறித்து எந்
ம் இதுவரை
க்கவில்லை.
முதல் அணு
தனையை
ரை உலகம்
க்கவில்லை.
(ஐ-ரி4)

# 7,000 பேர் கொலை
# சிரிய சிறையில் கொடூரம்
## உறுதிப்படுத்தும் ஒளிப்படங்கள் வெளியீடு




டமாஸ்கஸ்,டிசெ. 19
சிரியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்ததில் இருந்து சிரியச் சிறைச்சாலையில் குறைந்தது 7,000 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர் என மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.
சிறையில் இருந்து 2 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியேறிய நபர் ஒருவர் கடத்தி வந்த ஒளிப்படங்களின் மூலம் இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.
பாதிக்கப்பட்ட பலரும் துன்புறுத்தல்கள் மற்றும் சித்திரவதைகளை எதிர்கொண்டனர். பட்டினி போடப்பட்டனர். அடித்து உதைக்கப்பட்டனர்.
சீசர் என்று அடையாளப்படுத்தப்பட்ட நபர் கொண்டு வந்துள்ள 52 ஆயிரம் ஒளிப்படங்களை ஆராய்ந்த வல்லுநர்கள் அவை சிரிய சிறையினுள் எடுக்கப்பட்டவை என்றே நம்புகின்றனர். அந்தப்படங்கள் 2013ஆம் ஆண்டு ஓகஸ் மாதம் சிறையில் இருந்து வெளியேறிய சீசரால் கடத்திவரப்பட்டவை. சீசரின் உண்மையான பெயர் விவரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.
இந்தச் சிறைச்சாலை சிரிய அதிபர் அசாத்தின் நிர்வாகத்தினால் நடத்தப்படுகிறது. எதிர்ப்பாளர்கள் எவ்வளவு மோசமாகத் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்படுகிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் இவை என்கின்றன மனித உரிமைகள் அமைப்புகள்.
இது தொடர்பில் புதிதாக வெளியிடப்பட்டுள்ள 86 பக்க அறிக்கையில் ஒளிப்படங்களின் நம்பகத்தன்மை மற்றும் சீசர் கூறும் சம்பவங்களின் நம்பகத்தன்மை குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.
அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் அசாத்துக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதை நியாயப்படுத்தும் வகையில் இந்த ஆதாரங்கள் வெளியாகி உள்ளன.
(உ-ஐ-ரி4)



டியில் நடந்து முடிந்த மாகாணத் தேர்தல் முடிவுகளை மீள்பரிசீலனை
தற்கு சுயாதீனமான ஆணைக்குழுவை நியமிக்குமாறு வலியுறுத்தி
ண தேர்தல் சபையின் முன்பாக மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில்
டனர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் நடத்திய
ர் புகைக்குண்டுத் தாக்குதலில், நிகழ்வைப் பதிவு செய்வதற்குச் சென்ற
கையாளர்களும் பாதிக் கப்பட்டனர். பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்
ரை ஏனையோர் பாதுகாப்பாக அழைத்துச் செல்கின்றனர்.

# அமெரிக்காவிடம் ஆயுதம் வாங்குகின்றது தாய்வான்
## சீனா கடும் எதிர்ப்பு

பீஜிங், டிசெ.19
தாய்வானுக்கு அமெரிக்கா 1.83 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களை விற்பனை செய்துள்ளது.
நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் தாய்வான் துறைமுகத்தில் ஆயுதக் கப்பல் காணப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது என்று சீனா தெரிவித்துள்ளது. இதனை அடுத்து குறித்த வர்த்தகம் தொடர்பில் சீனா தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.
தாய்வான் சீனாவில் இருந்து பிரிந்து சென்று சுதந்திர நாடு என்று அறிவித்துள்ளபோதும், அது சீனாவின் ஒரு பகுதியே என்று பீஜிங் தொடர்ந்து கூறிவருகின்றது.
2 அமெரிக்கப் போர்க் கப்பல்கள், ஏவுகணைகள், நீரிலும் நிலத்திலும் தாக்கக்கூடிய வாகனங்கள், விமானஎதிர்ப்பு, கப்பல்எதிர்ப்புக்கருவிகள் என்பவற்றைத் தாம் தாய்வானுக்கு விற்பனை செய்ததாக அமெரிக்க மாநிலப் பணியகத்தின் அரசியல் இராணுவ ஊடகப் பேச்சாளர் டேவிட் மெக்கீபை அறிவித்துள்ளார்.
தாய்வானின் அமெரிக்க ஆயுதக் கொள்வனவு இரு நாடுகளுக்குமான உறவின் அடிப்படையிலும், தாய்வானின் ஆயுதத் தேவைகளின் அடிப்படையிலும் இடம்பெற்றுள்ளன என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.
"நீண்டகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. தாய்வானில் பாதுகாப்பைப் பேணுவதே இந்த ஆயுதக் கொள்வனவின் நோக்கமாகும்" என்று தெரிவித்தார் டேவிட் மெக்கீபை,
அமெரிக்காவின் இந்த அறிக்கையை தாய்வான் வரவேற்றுள்ளது.
இதற்கிடையில் தாய்வானின் ஆயதக் கொள்வனவுக்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.
"நாம் இந்த ஆயுதக் கொள்வனவுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம்" என சீனாவின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.
"இது சர்வதேச சட்டங்களை மீறிய செயற்பாடு. சீன எல்லையின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது. மேலும் சீனாவைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். சீனாவில் ஆயுத விற்பனையில் ஈடுபடும் நிறுவனங்கள் தொடர்பான விவரங்களைத் திரட்ட வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார் சீனாவின் துணை வெளிவிவகார அமைச்சர் சங் - சுகு வாங்.
"இந்த வர்த்தகம் சீனா அமெரிக்க உறவைப் பாதிக்காது" எனத் தெரிவித்தது அமெரிக்கா.

> "தாய்வான் சீனாவிலிருந்து பிரிந்து தனிநாடு என்று அறிவித்து விட்டபோதும் அது தனது ஒரு பகுதியே என்று பீஜிங் தொடர்ந்தும் விடாப்பிடியாக நின்று வருகிறது. இதனால் தாய்வான் ஏனைய நாடுகளிடம் இருந்து ஆயுதங்கள் வாங்குவதை அது விரும்புவதில்லை. சீனாவுக்கு எதிரான கொள்கைப் போக்கைக் கொண்டிருப்பதால் தாய்வான் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இதுவே பிரச்சினைக்குக் காரணம்."

## ...ல் மீண்டும் வளி மாசு அபாய எச்சரிக்கை

கர்
மாசு
த
டியுள்
ரத்திற்
வது
வப்பு
டுக்கப்பட்டுள்ளது. மத்திய சீனா விஜ சியான் மாகாணத்தில் இருந்து வடகிழக்கு ஹர்பின் பிரதேசம் வரை பரந்த அளவில் இந்தப் பாதிப்பு இருக்கும் என்கிறது எச்சரிக்கை.
தொழிற்சாலைகள், கட்டடங்கள் மற்றும் வாகனங்களின் பாவனைக்கு அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.
தற்போது நடைமுறையில் உள்ள அபாயத்தை அறிவிக்கும் திட்டம் இரு ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. முறையாக இப்போதே இயங்குகின்றது. (ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவிபுரத்து பொது மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

இரா.தனம்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேவிபுரம் கிராம மக்கள், மீள்குடியேறி 5 வருடங்களைத் தாண்டியும் இன்றும் அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவில்லை. வீதி, குடியேற்றம், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் போன்றவற்றில் உரிய வசதிகள் கிட்டாததால் சவால்களை எதிர் கொள்கின்றனர்.

தேவிபுரம் கிராமமானது, 1960 ஆம் ஆண்டளவில் குடியேற்றத் திட்டமொன்றாக ஏற்படுத்தப்பட்டது. குடியேறியோருக்கு காணி வழங்கப்பட்டு அவர்களுக்கான

> இரணைப் பாலை – பரந் தன் வீதியும், தேவிபுரத்திலிருந்து பரந் தன் வீதியைச் சென்றடையும் 5 கிலோ மீற்றர் தூரம் வரையிலான பாதையும், நெடுங்காலமாக புனரமைக்கப்படாமையால் மழை காலங்களில் மக்கள் பெரும் இடர்களை எதிர் கொண்டு வந்தனர்.

விவசாய உபகரணங்களும் நிவாரணங்களும் அன்றைய அரசால் வழங்கப்பட்டது. காணிகளை வெட்டித் துப்பரவு செய்து தென்னைப்பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர்.



**மோசமான வீதிகள்**

குடியேறிய மக்களுக்கான வீதிகள் சரியாகப் போடப்படாததால் அங்கு செல்வதில் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தக் கிராமத்துக்கு இரண்டு வீதிகள். ஒன்று, இரணைப்பாலை வீதியிலிருந்து திம்பிலி ஊடாக உடையார்கட்டு குடியேற்றத் திட்டம், சுதந்திரபுரம் குடி யேற்றத் திட்டம், நெத்தலியாறு குடியேற்றத் திட்டம் ஆகிய குடியேற்றத் திட்டங்கள் ஊடாகப் பரந்தன் வீதியைச் சென்றடைகிறது. இன்னொன்று, தேவிபுரத்திலிருந்து பரந்தன் வீதியை சென்றடையும் 5 கிலோமீற்றர் தூரம் வரையிலான பாதையாகும்.

இந்த வீதிகள் நெடுங்காலமாக புனரமைக்கப்படாமையால் மழை காலங்களில் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வந்தனர். மீள்குடியேறிய பின்னர் இரணைப்பாலையிலிருந்து தேவிபுரம் வரும் வீதி இராணுவ முகாம் வரையிலும் காப்பெற் வீதியாகச் செப்பனிடப்பட்டது. ஆனால் ஏனைய வீதிகள் குண்டும் குழியுமாக, வெள்ளம் நிறைந்தவையாக தற்போதும் உள்ளன. இதனால் மக்களின் போக்குவரத்து இடர்கள் நிறைந்துள்ளதாக அமைந்திருந்தது. அதுமட்டுமல்லாமல், இந்த வீதிகள் ஊடாக போக்குவரத்துச் சேவைகளை ஏற்படுத்தாமை மிகவும் பரிதாபத்துக் குரியது. உயர்தரவகுப்பு மாணவ மாணவிகள் புதுக்குடியிருப்பு செல்வதானால் சைக்கிள்களில் சென்று பின்னர் பஸ்ஸில் செல்ல வேண்டும்.

**ஓட்டோ வாடகைக்கு பெரும் பணச்செலவு**

அவசர நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கும் 300, 350 ரூபா கொடுத்து ஓட்டோ பிடிக்க வேண்டும். வெளியிடங்களுக்கு சென்று வந்திறங்கி தமது இடங்களுக்குச் செல்ல அதே கூலி கொடுத்து ஓட்டோ பிடிக்க வேண்டும். இப்படியான இடர்களால் அங்கு காணிகளைப் பெற்றவர்கள் போக்குவரத்து சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமையால் தமது காணிகளை விட்டு வெளியேறியுள்ளனர். அந்தக் காணிகள் பராதீனப்படுத்தப்படாது காடுகளாக இருப்பதால் அங்கு குடியேறியுள்ள ஏனைய மக்களுக்கு பல இடை யூறுகள் ஏற்படுகின்றன. பாம்புகள் மற்றும் வனவிலங்குகளால் பெரிதும் அச்சமடைவதுடன் சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் வரையிலான காணிகள் துப்புரவு செய்யப்படாது காடுகளாக இருப்பதால், பெண்கள் தனியாகப் பிரயாணம் செய்ய அச்சமடைகின்றனர். அத்தோடு பாடசாலை மாணவிகள் அச்சத்துடனேயே செல்ல வேண்டி ஏற்படுகிறது. இவர்கள் விவசாயத்தை மேற்கொள்வதற்கு அங்கு குளங்கள் எதுவும் கிடையாது. அவர்கள் மானா வாரிப் பயிர்ச் செய்கையையும் நிலக் கடலைச் செய்கையையும் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் காணிகளுக்கான குளங்கள் அமைக்கப்படுமாக இருந்தால், அனேகமான காணிகளில் விவசாயத்தை மேற்கொள்ள முடியும். இந்தக் குடியேற்றத் திட்டத்துக்கு முக்கியமாக வீதி மற்றும் போக்குவரத்துச் சேவை என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டால் இங்குள்ள மக்கள் விவசாய முயற்சிகளால் சிறந்த பயனைப் பெறுவதுடன், அவர்களது வாழ்வாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்ள முடியும் என்பதில் சந்தேகமில்லை. இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற தேங்காய் களைக் கொண்டு சென்று விற்பனை செய்ய முடியாத நிலையில் மிகவும் குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்றனர். அதனால் இவர்களுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டியது அவசியம்.

# சூழ்கலி நீங்கத் தமிழர்தம் வாழ்வில் மார்கழிக் கோலம்

கே.எஸ். சிவஞானராஜா (கருடன்)

தமிழர்தம் பாரம்பரிய பண்பாட்டு கலை அம்சங்களில் கோலம்போடுதல் பிரதான ஒரு இடத்தை வகிக்கின்றது. எவருக்குமே தொந்தரவு செய்யாமல், சிறு சிறு ஊர்வனவற்றுக்கும் உணவளித்து மகிழ்கின்றதோடு மட்டும் நின்றுவிடாது கோலம் போடுகின்றவர்களையும் கோலத்தைப் பார்க்கின்றவர்களையும் வரங்களோடு வாழ்விக்கின்ற பெரும் பேறு கோலங்களுக்கு உண்டு.

**வகைகள்**

கோலங்கள் பல வகைப்படும். அவையாவன,
மாக்கோலம், மனோதர்மக் கோலம், புள்ளிக்கோலம், பூவிதழ்க்கோலம், எண்ணக்கோலம், எழுத்துக்கோலம், வண்ணக்கோலம், வாழ்த்துக்கோலம், சுண்ணக்கோலம், சுவர்க்கக்கோலம், பொங்கற்கோலம், போட்டிக்கோலம், அன்புக்கோலம், அரிசிக்கோலம், தண்டுக்கோலம், தானியக்கோலம், பாம்புக்கோலம், பாராட்டுக்கோலம், திருமணக்கோலம், தீர்க்காயுள் கோலம், மங்கலக் கோலம், மாதவக் கோலம், தங்குமாக் கோலம், தமிழ் மணக் கோலம், நேர்த்திக்கோலம், நிலாக்கோலம், நிவார ணக் கோலம் என பற்பல வகையாக இது போட்டுக் காண் பிக்கப்படும். பொதுவாக மங்கலகரமான அனைத்துக் காரியங்களிலும் வாசலில் கோலம் போடப்படுவதனால் எல்லோரை யும் வரவேற்பதாகவும் வாழ்த்துவதாகவும் இது அமையும்.

**சிறப்பு**

கோலத்தின் தாற்பரியத்தை மார்கழியிலேயே காணலாம். தமிழ் மாதப் பிறப்பன்று ஆரம்பிக்கும் கோலத்தைப் பார்ப்பதற்காக இறைவனும், தேவர்களும் பூமிக்கு இறங்கி வருகின்றார்கள். மற்றும் பூமியில் உள்ள மானிடர்களும், ஜீவராசிகளும் கோலத்தை உண்டும், பார்த்தும், அனுபவித்தும், ஆனந்தித்தும் தத்தம் வாழ்வை நிறைத்துக் கொள்கின்றன. மேலுமொரு சிறப்பு யாதெனில் சூரியபகவானும், நவக்கிரக நாயகர்களும், அட்டதிக்குப் பாலகர்களும் இதனைக் கண்டுகளிக்க வருவார்கள். எப்படி? வீட்டு வாசலிலே கோலங்கள் வானம் பார்த்த பூமியாக இருப்பதனால் எறும்புகள், பூச்சிகள், வண்டுகள், குருவிகள், காகங்கள், அணில்கள், கோழிகள் இன்னும் பல ஜந்துக்கள் இந்தக் கோலங்களுக்குப் பயன்படுத்தப்படும் பொருள்களை உண்ணப் படையெடுக்கின்றன. இத்தகு கோலங்களை இயற்கை கண்டு இரசிப்பதற்காக இரவானது தன்னை சீக்கிரமாக விடியவைக்கிறது என்பதிலும் பார்க்க, சேவல்கள் கூவியே விடியவைக்கின்றன. கன்னிப்பெண்கள் விடிவதற்கு முன்னதாகவே துயிலெழுந்து சிவபெருமானை நினைந்து கோலம் போடும்போது அவர்களுக்கு நிஜமாகவே நல்லதோர் வாழ்க்கை அமைந்து விடும். கேட்டவரம், போட்டகோலத்தால் ஈட்டப் படும் என்பது உண்மையே. கன்னிப் பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் கோலம் போடலாம் என்பது பலருக்குத் தெரிவதில்லை. பெண்கள் ஆலயத்தில் தலைவராக இருக்கும் பட்சத்தில் இந்தக் கலை ஊக்குவிக்கப்படும். ஆண்கள் தலைவராக இருப்பதனாலோ என்னவோ இந்தக் கலை ஊக்குவிக்கப்படுவதில்லை. வளர்த்தெடுக்கப்படுவதும் இல்லை. ஆலயங்களின் தலைவராக இருப்பவர்கள் குறிப்பாக திருமுறை, புராணபடனம், கோலம், [illegible] [illegible] சாத்திரம், பஞ்சாங்கம் மற்றும் பண்பாடு, பழக்க வழக்கம் யாவற்றிலும் முதிர்ந்த ஞானமுள்ளவராகத் திகழ்ந்தால்தான் சமயத்தைக் காப்பாற்றவும் சாதிக்கவும் முடியும். வெறும் இந்தக் கெட்டித்தனம் இல்லாவிட்டால் தலைவர்கள் வெறும் நிர்வாகிகளாக மாற்றம் பெறுவது சாத்தியமே. சகல இந்து ஆலயங்களிலும் கோலங்கள் இடம்பெற ஊக்குவிக்கப்படாவிட்டால் சமயம் காட்டும் சின்னச் சின்ன விடயங்களிலெல்லாம் நாம் தோற்றுவிடுகின்ற பின்னடைவையே சந்திக்க நேரிடும். நாங்கள், பெரிய பெரிய விடயங்களில் பெரிய பெரிய இடங்களோடு தொடர்பு பேணி சமயத்தை வளர்க்கலாம் என்று எண்ணுவதாலேயே சமயம் தொடர்பான சின்னச் சின்னவிடயங்களில் தூரநிற்கின்றோம். இந்தநிலை மாற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கண நூல்களில் ஐந்திலக்கண மரபு.....

தெ.துர்க்காஜினி

கருத்தைச் செம்மையாகவும் தெளிவாகவும் புலப்படுத்துவதற்கு மொழிகள் இன்றியமையாதவை. காலத்தால் தொன்மையானதாகவும், கருத்துச் செழுமையினால் செம்மையானதாகவும் விளங்குவது தமிழ் மொழி. காலந்தோறும் பழைமைக்குப் பழைமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கிவருவது எமது தமிழ்மொழி.

தமிழ் மொழியில் இலக்கணம் என்பது வெறுமனவே மொழி மாத்திரமன்றி, அந்த மொழியிலான இலக்கியம், அவற்றின் பொருள், வடிவம் ஆகியவற்றை ஆராய்கின்ற ஒரு நெறியாகவே தான் இருந்து வந்துள்ளது.

**ஐந்திலக்கணம் என்றால் என்ன?**

ஐந்திலக்கணம் என்றால் என்ன? தமிழ் மொழியில் இலக்கணத்தைப் பற்றிக் கூறும் நூல்கள் ஐந்திலக்கணம் பற்றி முழுமையாகக் கூறுகின்றனவா? எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கண மரபுகளைப் பற்றிக் கூறும் இலக்கணமே ஐந்திலக்கணம் எனப்படும்.



தமிழ் மொழியிலே தோன்றிக் கிடைத்த முதலாவது இலக்கண நூலாகிய தொல்காப்பியம், ஐந்திலக்கணம் கூறும் நூலாகக் கொள்ளப்பட்ட போதும், அதற்கு முன்னரும் ஐந்திலக்கணம் கூறும் நூல்கள் தோற்றம் பெற்றிருக்கலாம் என்பது மொழியியலாளர்களுடைய கருத்தாக இருக்கிறது.

வீரசோழியம், நேமிநாதம், தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம் என்பனவும் ஐந்திலக்கணம் கூறும் நூல்களாகும். இந்த இலக்கண நூல்கள் எல்லாம் ஐந்து இலக்கணத்தையும் தனித்தனியே கூறியிருக்கின்றனவா என ஆராய்ந்துபார்த்தால்தொல்காப்பியரின் பொருள் அதிகாரத்தில் உவமையியல், செய்யுளியல் இடம் பெற்றமையால் தொல்காப்பியம் ஐந்திலக்கண நூலாகக் கொள்ளப்படுவது மரபாயிற்று.

நன்னூலை எடுத்துக் கொண்டால் நன்னூல் பாயிரத்திலே, ஆகும் பொருள் அனைத்தையும் யாவரும் உணர... என குறிப்பிடப்பட்டுள்ளதால் நன்னூலும் ஐந்திலக்கணம் கூறும் நூல் என்பர். ஆனால் இந்தக் கருத்துக்கு நன்னூலில் எந்தவித ஆதாரமும் இல்லை. சில

> **தமிழ் மொழியிலே தோன்றிக் கிடைத்த முதலாவது இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஐந்திலக்கணம் கூறும் நூலாகக் கொள்ளப்பட்ட போதும், அதற்கு முன்னரும் ஐந்திலக்கணம் கூறும் நூல்கள் தோற்றம் பெற்றிருக்கலாம்**


வேளை பிற்காலத்தில் ஐந்திலக்கண மரபினுள் நன்னூலையும் அடக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக இது இருக்கலாம் என்பது மொழியியலாளர்களின் கருத்தாக உள்ளது.

வீரசோழியம் ஐந்திலக்கணத்தையும் முறையாகக் கூறும் பழைமையான நூல் என்று கூறப்படுகிறது. ஒரு முழுமையான இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்தையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். இந்த வகையில் அமைந்த நூலாக வீரசோழியம் கொள்ளப்படுகிறது. அதேபோல் நேமிநாதமும் ஐந்திலக்கணம் கூறும் நூலாக கொள்ளப்பட்டபோதும் அந்தநூல் முழுமையாக வெளிவரவில்லை.

**பேச்சுமொழி உயிர்நாடி**

ஒரு மொழியின் தோற்றத்துக்கு பேச்சு மொழிதான் உயிர்நாடி. தமிழ் இலக்கண நூல்கள் எழுத்துக்களின் பிறப்பு, அளவு, முதல் எழுத்துக்கள், சுட்டெழுத்துக்கள், வினா எழுத்துக்கள், முதனிலை எழுத்துக்கள், இறுதிநிலை எழுத்துக்கள், இடைநிலை மெய்மயக்கம் ஆகியவற்றைப் பற்றியே எடுத்துக் கூறுகின்றன.

பேச்சு மொழிக்குரிய ஒலியெண்கள், உருபெண்கள் பற்றித் தெளிவாக எதுவும் கூறப்படவில்லை. கூறப்பட்ட ஒருசில இலக்கண நூல்களுள்ளும் இலக்கண ஆசிரியர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதாவது சார்பெழுத்துக்கள் மூன்று என்றும், பத்து என்றும் கூறப்படும். அதேவேளை, முதனிலைஎழுத்துக்களிலும் இடைநிலைஎழுத்துக்களிலும் கருத்துவேறுபாடுகாணப்படுவது குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழி, வாழும், வளரும் மொழி. எனவே காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்பவும், ஐந்திலக்கணம் பற்றி தெளிவாக அறியவும் காலந்தோறும் அதன் வரலாற்றை ஆராய்ந்து நோக்க வேண்டும்.



அந்த வகையில் ஒரு எழுத்தாலாயினும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களாலாயினும், ஆக்கப்பட்டு பொருள் தருவதே சொல் எனப்படும். சொல் இலக்கணத்தை விளக்கியிருக்கும் இலக்கண நூல்களாக வீரசோழியம், நன்னூல், நேமிநாதம் முதலியவற்றைக் குறிப்பிடமுடியும். ஆனால், ஆரம்பகாலம் தொடங்கி தற்காலம் வரை பார்க்கும்போது பேச்சு வழக்கிலும்சரி, எழுத்து வழக்கிலும்சரி சொற்பிரயோகம் வேறுபடுவதை அவதானிக்க முடிகிறது. எனவே் தமிழ் இலக்கணமரபில் சொல்லிலக்கணம்மீறப்படுவதைஅவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

**பொருள் இலக்கணம்**

பொருள் இலக்கணம் பற்றி நோக்குகையில், இறையனார் அகப்பொருளுரை மற்றும்17 ஆம்நூற்றாண்டில்தோற்றம்பெற்ற நம்பியகப்பொருள் ஆகிய நூல்கள் பொருள் இலக்கணம் கூறும் நூல்களாகக் கொள்ளப்படுகின்றன.

தொல்காப்பியம் பொருள் இலக்கணம் பற்றிக் கூறினாலும், இலக்கண விளக்கம், வீரசோழியம், தொன்னூல் விளக்கம் என்பன அகப் பொருள் இலக்கணத்தையும், புறப்பொருள் வெண்பாமாலை புறப்பொருள் இலக்கணத்தையும் விளக்குவதாக அமைந்துள்ளது. எனவேபொருள்என்பது அகம், புறம் பற்றி கூறுவதாக அமைந்துள்ளது எனலாம்.


யாப்பை எடுத்துக்கொண்டால் ஆரம்ப காலத்தில் யாப்பு என்ற மரபு வழக்கில் இருந்திருக்கவில்லை. காலப்போக்கில் இலக்கியங்களை வரையறைக்குள் இட்டுச் செல்வதற்கு யாப்பிலக்கணமே முக்கியமாக அமைந்திருந்தது. தொல்காப்பியர் செய்யுளியலில் விரிவாக ஆராய்ந்து விளக்கியிருப்பதால் அவர் காலத்தில் யாப்புப் பற்றித் தனியாக ஆராய்ந்திருக்கலாம். தொல்காப்பியர் காலத்தவரான காக்கைப் பாடினியார் யாப்பிலக்கணம் செய்தவராக கருதப்படுகிறார். 10 ஆம் நூற்றாண்டில் எழுந்த யாப்பருங்கலம், யாப்பருங்கல காரிகை ஆகியவை யாப்பிலக்கணம் பற்றிக் கூறும் நூல்கள் ஆகும். செய்யுள்களுக்கு யாப்பே முன்னோடியாகத் திகழ்கிறது. யாப்பு என்பது செய்யுளா சிரியரும், உரையாசிரியரும்கையாளும் பொது வழக்காகும்.

ஐந்திலக்கணத்துக்குள் அடுத்ததாக அணியைப் பற்றி நோக் கின் அணி என்பது அலங்காரம் என்று கூறப்படும். இதனை சொல்லணி, பொருளணி என இரு வகையில் நோக்கமுடியும். செய்யுளுக்கு அழகையும், ஓசைச் சிறப்பையும் ஏற்படுத்தி அதன்மூலம் இலக்கியத்தை நயப்பதற்கு அணிகள் பயன்பட்டன. தண்டியலங்காரம் அணி இலக்கணத்தைச் சிறப்பாகக் கூறும் நூலாகும். மாறன் அலங்காரம், தொல்காப்பியம், வீரசோழியம் முதலான நூல்களும் அணி இலக்கணத்தை விளக்கி நிற்பனவாகும்.

ஐந்திலக்கண மரபு என்பது தமிழிலே மிகநீண்ட வரலாற்றை உடையது. பிற்காலத்தில் மேலைத் தேய சார்பு ஏற்பட, ஐந்திலக்கணங்களையும் சேர்த்துச் சொல்வதே சிறப்பு எனப்பட்டது. தமிழ் மொழியில் ஐந்திலக்கணமரபு கையாளப்பட்டபோதும், அவற்றின் முக்கியத்துவம் குறைவாகவே காணப்படுகின்றது. காலத்தின் தேவையை ஒட்டி தற்காலத்தில் எழுத்து, சொல் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பொருள், யாப்பு, அணி பற்றியஆய்வுகள்குறைவாகவே உள்ளன எனலாம். எனவே மிகநீண்ட வரலாற்றை உடைய ஐந்திலக்கண மரபு பற்றிய முழுமையான ஆய்வுகள் தமிழ் மொழிக்கு மேலும் வலுவூட்டும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## வரலாற்றில் இன்றைய தினம்

1907 - பென்சில்வேனியாவில் 239 சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்க வெடி விபத்தில் சாவு.

1924 - 'றோல் றோய்ஸ் சில்வர் கோஸ்ட்' உற்பத்திக் கடைசிக் கார் லண்டனில் விற்பனை.

1927 - ராம் பிரசாத் பிஸ்மில், றொஷான் சிங்,அஷ் பகுல்லாகான் ஆகிய மூன்று இந்தியப் புரட்சியாளர்கள் பிரித்தானிய ஆட்சியாளர்களால் தூக்கிலிடப்பட்டனர்.

1932 - 'பிபிஸி எம்பயர்' சேவையென்ற பெயரில் பிபிஸி உலக சேவை ஒலிபரப்பு தொடங்கப்பட்டது.

1941 - அடொல்ப் கிட்லர் ஜேர்மன் படைகளது தளபதி யாகினார்.

1946 - முதலாவது இந்தோசீனப் போர் ஆரம்பம்

1967 - ஆஸ்திரேலிய பிரதமர் ஹரால் ஹோல்ற் இறந்து விட்டதாக அதிகார பூர்வமாக அறிவிப்பு.

1972 - அப்பலோ-17 புவிக்குப் பத்திரமாகத் திரும்பியது.

1983 - உதைபந்தாட்டச் சங்கத்தில் இருந்து, பீபா உதைபந்தாட்ட உண்மையான வெற்றிக் கிண்ணம் திருடப்பட்டது.

1984 - 1997 ஜூலை 1ஆம் திகதி முதல் செயற்படும் படியாக உரிமையை சீனாவிடம் கையளிக்கும் 'சைனோ பிரிட்டிஷ்' உடன்படிக்கையில் சீனாவின் டென் ஷியாவோ பிங் மற்றும் பிரிட்டிஷ் மாக்கிரட் தட்சர் பீஜிங்கில் வைத்துக் கையொப்பம்.

1997 - சில்க் எயர் பிளைற் 185 விமானம் இந்தோனேஷியா மியூசி ஆற்றில் விழுந்து விபத்துக்கு உள்ளானதில் சிக்கி 104 பேர் சாவு.

1998 - அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் மீது மக்கள் பிரதி நிதிகள் சபையில் குற்றச் சாட்டு

2001 - ஆர்ஜென்ரினாவில் பொருளாதார நெருக்கடி. டிசெம்பர் கலவரம் ஆர்ஜென்ரினாவின் புவனைஸ் அயர்ஸ் பகுதி யில் தொடங்கியது.

2005 -யாழ்.பல்கலைக்கழகத்துள் புகுந்து மாணவர்கள் மீது தாக்குதல் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு. கண்டபடி தீர்க்கப்பட்டன வேட்டுக்கள்.

2005 - புங்குடுதீவு யுவதி படுகொலை; வல்லுறவின் பின் கழுத்து நெரித்துக் கொலை எனத் தெரிவிப்பு

2010 - ஐ.நா. நிபுணர் குழு-நல்லிணக்க ஆணைக்குழு சந்திப்பு. பகிரங்கமாக நடக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து.
- புலிப் பிரமுகர் கரிகாலன் கொல்லப்பட்டுவிட்டதாகப் பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு.
- 10 ஆயிரம் அரசியல் கைதிகள் தடுத்து வைப்பு என ஐ.நா. தெரிவிப்பு.

2012 - தென் கொரியாவின் முதலாவது ஜனாதிபதியாக பார்க் ஜுன் ஹை தேர்வு

## தெரிந்து கொள்வோமா?

1. எல்லா வெப்ப நிலைகளிலும் நடைபெறுவது - ஆவியாதல்
2. பொருட்களின் நிலை மாறுவது - இயக்கம்
3. கடல் நீர் ஆவியாதல் - வெப்பம் கொள்வினை
4. நொதித்தல் நிகழ்வின் போது வெளிப்படும் வாயு - கார்பன் -டை-ஒக்ஸைட்
5. கடல் நீரிலிருந்து உப்பைப் பிரித்தெடுக்கப் பயன்படும் முறை - ஆவியாதல்
6. மயில் துத்தம் என்பதன் வேதிப்பெயர் - செப்பு சல்பேற்
7. ஓர் இயற்பியல் மாற்றத்தின்போது - பொருள்களின் மூலக்கூறுகள் மாற்றமடைவதில்லை
8. பால், தயிராக மாறும் மாற்றம் - மித வேகமாற்றம்
9. மண்ணெண்ணெயில் நனைக்கப்பட்ட துணி எரிதல் நிகழ்வு - அதிவேக மாற்றம்
10. ரவையில் கலந்துள்ள இரும்புத்தூளைப் பிரித்தெடுக்கும் முறை - காந்தப்பிரிப்பு முறை
11. துரு என்பதன் வேதிப் பெயர் - இரும்பு ஒக்ஸைட்
12. எரிமலை வெடிப்பு என்பது - கால ஒழுங்கற்ற மாற்றம்
13. உணவு கெடுதல் எவ்வகை மாற்றம் - விரும்பத்தகாத மாற்றம்
14. மின்கூடேற்றி இயங்குதல் எவ்வகை மாற்றம் - இயற்பியல் மாற்றம்
15. ஊஞ்சல் விளையாட்டில் சுழலும் வீரரின் இயக்கம் - வட்ட இயக்கம்
16. இரு நிலைகளுக்கு இடைப்பட்ட குறுகிய தொலைவு - இடப்பெயர்ச்சி
17. துப்பாக்கியில் அழுத்தப்பட்ட சுருள் வில் பெற்றிருப்பது - நிலை ஆற்றல்
18. இரசமட்டத்தில் நிரப்பப்பட்டுள்ள திரவம் - அல்ககோல்
19. அழுத்தத்தை அளக்க உதவும் கருவி - போர்டன் அளவி
20. டோர்ச் மின்கலத்தில் இருக்கும் ஆற்றல் - வேதி ஆற்றல்
21. வேலையை அளக்க உதவும் வாய்ப்பாடு - விசை நகர்ந்த தொலைவு
22. ஆதாரப்புள்ளிக்கும் திறனுக்கும் இடையில் பளு இருப்பது - இரண்டாம் வகை நெம்புகோல்
23. நெம்புகோலைத் தாங்கும் புள்ளி - ஆதாரப்புள்ளி
24. எந்திரங்களில் மிகவும் எளிமையானது - நெம்புகோல்
25. ஒரு பொருள் மீது செயற்படும் விசையால் அந்தப் பொருள் நகர்தல் வேலை எனப்படும்.
26. இரட்டைச் சாய்தள அமைப்பைக் கொண்டது - ஆப்பு
27. ஈர்ப்பியல் விசையைக் கண்டறிந்தவர் - சேர்.ஐசாக்.நியூட்டன்

## சின்ன மாமா



சின்னச் சின்ன அன்பால்
சிறுவர்போல் எம்மோடு பழகி

தம் ஆதரவான கரத்தால்
அன்போடு எம்மை அரவணைத்து

இன்ப துன்பம் அனைத்திலும்
இதமாக எம்மோடு பழகி

நல்ல இன்மனத்துடனே
நற்பழக்கத்தை எமக்கூட்டி

அனைவருக்கும் உதவும் மனதுடன்
எமையெல்லாம் நேசிப்பவரே எம்
சின்னமாமா

ஆ.நிலோஜன்.

## துணிச்சலான சிறுவன்

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பது பழமொழி. சின்ன வயதிலேயே அந்தச் சிறுவன் மிகவும் துருதுருவென்று இருந்தான். ஒருநாள் அவனும் அவனது நண்பர்களும் சேர்ந்து ஒரு மரத்திலே ஏறி, மரக்கிளையில் இருந்து தலை கீழாகத் தொங்கி விளையாடிக் கொண் டிருந்தார்கள்.

விபரீதமான இந்த விளையாட்டைப் பார்த்த அந்தப் பையனுடைய தாத்தா, பையன்கள் கீழே விழுந்தால் உயிருக்கு ஆபத்து என்று நினைத்து உடனே அனைவரும் கீழிறங்கி வாருங்கள் என்று சத்தம் போட்டார்.

அவர்கள் வந்ததும், இந்த மரத்திலே ஒரு பேய் இருக்கிறது. இப்படி மரத்தில் ஏறி விளையாடினால் அது உங்களை அடித்துக் கொன்றுவிடும். அதனால் மரத்தில் ஏறாமல் கீழேயே விளையாடுங்கள் என்று பயமுறுத்தினார்.

இதைக் கேட்டு எல்லாச் சிறுவர்களும் பயந்துவிட்டார்கள். சுட்டிப் பையனும் சரி சரி என்று தலையை ஆட்டினான். ஆனால், அவர் மறு பக்கம் போன தும், மறுபடியும் மரத்திலே ஏற ஆரம்பித்தான்.

அவனது நண்பர்கள், ஐயையோ.. ஏறாதே...பேய் உன்னை அடித்துவிடும் என்று கத்தினார்கள். இந்த மரத்திலே பேய் இருக்கிறதாக தாத்தா சொன்னார்.. சரிதான்.

ஆனால், அப்படிப் பேய் இருந்திருந்தால் இவ்வளவுக்குள் அது எம்மை அடித்துக் கொன்றிருக்கும். தாத்தா சும்மா எம்மைப் பயமுறுத்தியுள்ளார். என்று சிறுவர்களுக்குப் பதில் கூறினான்.

அதற்கு மற்றச் சிறுவர்கள், அது சரி..உன் தாத்தா சொன்னபோது..சரி என்று தலையை ஆட்டி னாயே..அது ஏன்? என்று கேட்டதற்கு, எதிர்த்துப் பேசினால் அவரது மனம் வேதனைப்படுமே. அதனால் தான் அவரைச் சமாதானப்படுத்துவதற்காகச் சரி என்றேன் என்றான்.

இன்றும் தமது கருத்துக்களால் எண்ணற்ற இளைஞர்களுக்கு வழி காட்டியாக விளங்கும் சுவாமி விவேகானந்தர் தான், அன்று சிறுவனாக மரத்தில் துணிவுடன் ஏறியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்தும் ஏமாற்றப்படும் மலையகத் தொழிலாளர்கள்

தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகி எட்டு மாதங்கள் கடந்துவிட்டன. சம்பள உயர்வுப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இழுபறிநிலையில் இருந்துவருகிறது. இரண்டு வருடகால கூட்டு ஒப்பந்தம் மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது. முதலாளிமார் சம்மேளனமும், தொழிற்சங்கங்களும் பேசி ஒரு மாதத்துக்குள்ளேயே உடன்பாடு கண்டிருக்கவேண்டும். ஏற்கனவே ஒன்பது தடவைகள் பேச்சு நடத்தியும் தீர்வு கிடைக்கவில்லை. இன்று பத்தாவது தடவையாக தொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இரு தரப்பினரும் சந்திக்கின்றனர்.

இன்று நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அது நிறைவேற்றப்படுவதற்கு முன் தீர்வு ஒன்றைக் காண்பதில் மலையக அரசியல் தலைவர்கள் ஆர்வம் கொண்டிருப்பதை அவர்களின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. எனினும், சம்பள உயர்வு குறித்து தொழிற்சங்கங்கள் மத்தியில் ஒருமித்த கருத்து இல்லாமை காரணமாக, உலக சந்தையில் தேயிலை விலை வீழ்ச்சியைக் காரணம் காட்டி முதலாளிமார் சம்மேளனம் சம்பள உயர்வில் பிடிவாதமாக இருந்து வருகிறது. தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்க மறுக்கிறது. இன்றைய பேச்சும் தோல்வி அடையுமானால் தோட்டத் தொழிலாளர்கள் பொறுமை இழக்க நேரிடும்.

சம்பள உயர்வுப் பிரச்சினையில் சில தொழிற்சங்கங்கள் அரசியல் இலாபம் கருதிச் செயற்படுகின்றன. அதனால் தற்போதைய 620 ரூபா நாள்சம்பளத்தை 720 ரூபாவாக உயர்த்தக் கூட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இது கவலை தரும் விடயமாகும். நாட்டில்




வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிட்டது. நாளாந்தம் வாழ்க்கையை நடத்தமுடியாது தோட்டத் தொழிலாளர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் பிரதமர் தெரிவித்தும், நாட்டின் அதி உயர் சபையான நாடாளுமன்றத்துக்கு சவால் விடும் விதத்தில் முதலாளிமார் சம்மேளனம் செயற்படுவது வேதனை அளிக்கிறது.

மார்ச்சில் கூட்டு ஒப்பந்தம் காலாவதியானபோது தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாள் சம்பளம் வழங்கப்படவேண்டும் என்று இ.தொ.கா. கோரிக்கை முன்வைத்தது. பொதுத் தேர்தலிலும் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு குறித்து தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களுக்கு வாக்குறுதி அளித்தனர். இன்று தனது வாக்குறுதியில் இருந்து இறங்கிவர முடியாத நிலையில் இ.தொ.கா. இருக்கிறது. அதனால் இதனைவிடக் குறைவான சம்பள உயர்வை ஏற்றுக்கொள்ள ஏனைய தொழிற்சங்கங்கள் தயங்குகின்றன.

தேயிலை உற்பத்தி வீழ்ச்சி, தோட்டங்களை நிர்வகிப்பதில் நெருக்கடி என்று கூறி முதலாளிமார் சம்மேளனம் நாள்சம்பளத்தை நியாயமான அளவு அதிகரிக்க மறுக்கிறது. இதில் அரசு தலையிட்டு ஒரு தீர்வை ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும்.

1994இல் 22 பெருந்தோட்டங்கள் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு தோட்டங்கள் நன்கு பராமரிக்கப்படுவதில்லை. பல தோட்டங்கள், சிறுத்தை போன்ற மிருகங்கள் உலாவும் அளவுக்கு காடு பற்றிக் கிடக்கின்றன. இவற்றைப் பராமரித்து தரமான தேயிலையை உற்பத்திசெய்யாது, உலக சந்தையில் தேயிலை விலை வீழ்ச்சி என்று காரணம் கூறுவது நொண்டிச்சாட்டாகும். இன்றைய வாழ்க்கைச் செலவை கவனத்திற் கொண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை வழங்க முதலாளிமார் சம்மேளனம் முன்வர வேண்டும்.



# வாழவிடு பெண்ணை...

உடுவிலூர் கலா

பெண் விடுதலை, பெண் சமஉரிமை என்கிறோம். பெண்ணுக்கு விடுதலை கிட்டியுள்ளதா? பெண் எங்கே சம உரிமையோடு வாழ்கிறாள்? இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி பெண் வன்முறைகளுக்குட்பட்டு கண்ணீரோடும் வேதனையோடும் தான் வாழ்கின்றாள். மேலை நாடுகளில் பெண்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர். அங்கு வன்முறைகளுக்கு எதிராக வழங்கப்படும் தண்டனையும் அதியுச்ச தண்டனையாகும். இன்று இலங்கையில் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் பெண்கள் பெரும் அச்சத்தோடு உயிராபத்தை எதிர்நோக்கியவர்களாகவே வாழ்கின்றனர்.

அடிமையாக வாழ்ந்தது போதும் எழுந்து வா என விடுதலைக்குரல் எழுப்பியபோதும், இன்னமும் வெளியே வராத பல பெண்கள் உள்ளனர். அடிமை விலங் குடைத்து தடைவேலிகளைத் தாண்டி வெளியே வந்த பெண்களே இன்று சாதனையில் சரித்திரம் படைத்துள்ளனர்.

என்னதான் வளர்ச்சியடைந்தாலும், வன்முறைகளையும், வன்கொடுமைகளையும், வன்புணர்வுகளையும் எதிர்கொள்கின்ற, சந்திக்கின்ற நிலைக்காளாகி விட்டனர். நட்ட நடு நிசியில் ஒரு பெண் என்று தனியே வெளியில் சென்று வரமுடிகிறதோ, அன்றுதான் பெண்களுக்குச் சம உரிமை என்றார் காந்தி. இன்று பட்டப் பகலில்கூட, வீடுகளிலேயே தனித்து பெண்களால் இருக்க முடியவில்லை. கல்வியில் முன்னேறி பணம் தேடிய பெண்கள் வயதான காலத்தில் தனியே வாழ்ந்து விட முடிவதில்லை. அவர்களது பணத்தைச் சூறையாடும் திருடர்கள், அவர்களைப் பல வன் கொடுமைகளுக்கு ஆளாக்கி, வன்புணர்வு செய்து, படுகொலை செய்யும் துர்ப்பாக்கிய நிலையே இன்று பரவலாக உள்ளது. பள்ளி செல்லும் மாணவி சீருடையுடன் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்படுகிறாள். பால்மணம் மாறாத பச்சிளம் சிறுமி காமுகர்களால் முகர்ந்து ருசிக்கப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்டு வீசப்படுகிறாள். வயோதிபப் பெண்கள் பணத்துக்காக வன்புணர்வு செய்யப்பட்டுக் கொலை செய்யப்படுகிறார்கள். இளம் பெண்கள் பணியிடங்களில் பணி நிலை அதிகாரிகளால் வன்சொற்களுக்கு ஆளாகி மனவுடைவுக்குள்ளாகின்றனர். இளம் விதவைகள் சமுதாயக் கண்களின் எச்சில் பார்வைகளுக்கு உள்ளாகி பலவீனமடைகின்றனர்.

> “பள்ளி செல்லும் மாணவி சீருடையுடன் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்படுகிறாள். பால்மணம் மாறாத பச்சிளம்சிறுமி காமுகர்களால் முகர்ந்து ருசிக்கப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்டு வீசப்படுகிறாள்.”

இன்று எமது சமுதாயத்தில் எல்லையில்லாத போதைப் பொருள்களின் புழக்கம் குறிவைத்துப் பெண்களைத் தாக்குகிறது. உழைக்க வலுவில்லாத திருட்டு ஊதாரிகள், வீடுகளுக்குள் புகுந்து திருடிவிட்டு அங்கிருக்கும் பெண்களை வன்புணர்வு செய்து படுகொலை செய்து விட்டுத் தப்பித்துக் கொள்வதை அவதானிக்க முடிகிறது. இவற்றுக்கெல்லாம் காரணம் போதைப் பொருள்களே. போதைப் பொருள்கள் சமு தாயத்தில் உள்ளவரை வன்புணர்வுகளும், பெண் படுகொலைகளும் அரங்கேறிக் கொண்டேயிருக்கும். தப்புச் செய்தவர்கள் பலரும் சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொள்வதில்லை. குற்றவாளிகளுக்கான தண்டனை கைது ஒன்றே. இதனால், துணிந்து செய்கிறார்கள். பிணையில் வெளிவருகிறார் கள். யார் நல்லவர்கள்? யார் கெட்டவர்கள்? எனத் தெரியாத அளவுக்கு ஆண்களைப் பார்த்துப் பயப்படும் நிலை உருவாகியுள்ளது.

பெண்களுக்கு சுயமாக வாழவும், விரும்பிய மதத்தைப் பின்பற்றவும், விரும்பிய தொழிலைச் செய்யவும், விரும்பிய உணவை உண்ணவும் உரிமை உண்டு. பெண்களின் உரிமைகளைத் தட்டிப் பறிக்கவோ, அவர்களை அடக்கி ஆளவோ எவருக்கும் உரிமையில்லை. இங்கு நடப்பதென்ன? பெண்களது உரிமைகள் தட்டிப் பறிக்கப்படுகின்றன. அவர்களது சந்தோசத்தைக் குழிதோண்டிப் புதைக்கிறார்கள். பார்வைகளால் பரிகசிக்கின்றார்கள். இச்சையுணர்வால் இம்சிக்கிறார்கள். படுகொலையே செய்கிறார்கள். இது நியாயமா? மானுட தர்மமா? இதுவா ஆண்மை? காறி உமிழ வேண்டிய காடைத்தனமல்லவா? அன்று அடிமைகளாகப் பெண்கள் வீட்டுக் குள்ளேயே பூட்டி வைக்கப்பட்டார்கள். பிரசவ காலங்களில் வீட்டின் உள்ளே பெண்களை விட்டு, கொடிய பிராணிகளிடமிருந்து அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க கைகளில் நெருப்பைக் கொடுத்தார்கள். அந்த நெருப்பைக் கொண்டே அன்றுமுதல் இன்று வரை ஆண்களுக்கு பசி தீர்க்கும் உணவைச் சமைத்துப் போடுகிறார்கள். இந்தச் சமுதாயத்தில் பெண்வதைதொடருமானால், அதே தீயைக் கொண்டு அழிக்கவும் புறப்படுவாள் பெண்.

ஆக, பெண்களுக்குப் பாதுகாப்புத் தேவை. ஆண்களைப் போலவே, பெண்களும் பத்துமாதம் தாயின் கருவறையில் குடியிருந்தவர்கள். பெண்களுக்குக் கொடுமை செய்கின்ற, வதை செய்து உயிர் எடுக்கின்ற, வன்புணர்வு செய்து வலி கொடுக்கின்ற ஆண்கள் ஒவ்வொருவரையும் இந்த உலகத்தில் அறிமுகம் செய்து வைத்தவள் தாய் என்னும் பெண்ணே. பெண்ணிய ஆண் சிந்தனாவாதிகளே கைகட்டிப் பார்வையாளராகாமல் இன்று பெண்களுக்கு ஏற்பட்டுள்ள உயிராபத்துக்களை தடுக்க குரல்கொடுத்து பங்காளராகுங்கள். உங்களைப் பெற்றவளும், உங்கள் சுக துக்கத்தில் பங்கு கொள்பவளும் பெண்ணே என்பதைக் காடையர்க்கு உணர்த்துங்கள். பெண்களை நிந்திப்போரை, வன்முறை செய்வோரை, வன்புணர்வாளர்களை தீவிரமாக கண்டுபிடியுங்கள். சட்டத்தின் முன்நிறுத்தி உரிய தண்டனையை உடன் வழங்குங்கள். பூவிலும் மெல்லிய பெண்மையை, ஆண்மையை வாழவைக்கும் பெண்மையை, ஆண்களுக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் பெண்மையை, அகிலத்தின் சக்தியான தெய்வ சக்திகளை வாழ விடுங்கள். பெண்மையின் புலம்பல் ஓயும்வரை விடிவு என்பது கிடைக்கப்போவதில்லை. இதை ஒவ்வொரு ஆண்மகனும் உணர்ந்து கொள்வார்களா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## பேஸ் புக்கில் பிடித்தவை...

**மழைச்சாரல்** @jeemeh1831 · Nov 29

சந்தோஷம்னா இறைவனுக்கு நன்றி சொல்லிட்டு ஓடிடுது மனசு. கஸ்டம் வந்தாதான் இறைவனை தீவிரமா தேடுது மனம். அதனால் தான் துன்பங்களைத் தருகிறாரோ கடவுள்...!!

**Manjula** @S1Manjula · Nov 28

நாம் கேட்கும் வரத்தை நிறைவேற்றினால், நாளை வேறு ஒன்றை கேட்போம். இதனாலேயே கடவுள் கேட்பதை கடைசிவரை கொடுப்பதே இல்லை...!

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 2 | | 5 | | 6 | 7 |
| 7 | | | 1 | | | 5 | | |
| 8 | | | | | | 4 | | |
| | | 3 | 7 | | | | 2 | |
| 1 | | | | | | | | 5 |
| | 7 | | | | 2 | 3 | | |
| | | 9 | | | | | | 6 |
| | | 7 | | | | | | |
| 2 | 8 | | 5 | | 1 | | | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 9 | 7 | 3 | 1 | 6 | 8 | 2 |
| 8 | 7 | 3 | 2 | 6 | 4 | 5 | 9 | 1 |
| 1 | 6 | 2 | 8 | 5 | 9 | 7 | 4 | 3 |
| 3 | 2 | 7 | 5 | 9 | 6 | 4 | 1 | 8 |
| 4 | 1 | 8 | 3 | 2 | 7 | 9 | 6 | 5 |
| 9 | 5 | 6 | 4 | 1 | 8 | 2 | 3 | 7 |
| 7 | 9 | 5 | 6 | 8 | 3 | 1 | 2 | 4 |
| 6 | 8 | 4 | 1 | 7 | 2 | 3 | 5 | 9 |
| 2 | 3 | 1 | 9 | 4 | 5 | 8 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய உத்தி மூலம் இலாபம் காண்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**இடபம்:** திட்டமிட்டுச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். சேமிப்பு உயரும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**மிதுனம்:** எதிரியை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**கடகம்:** எவரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப இலாபம் கிடைக்கும். மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

**சிங்கம்:** உழைப்பின் பயனால் உயர்வு அடைவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் கூடும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும். பெண்களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

**கன்னி:** பணிகளைத் தாமதமின்றி நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் உதவியுண்டு. அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**துலாம்:** புதிய பொறுப்பால் சிரமப்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**விருச்சிகம்:** விடாமுயற்சியுடன் செயற்படுவீர்கள். தொழிலில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தைப் பின்பற்றுவர். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் ஏற்படும்.

**தனுசு:** நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் உயரும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும். வாகனப் பயணம் இனிமை தரும்.

**மகரம்:** செயல் இனிதே நிறைவேற தகுந்த முயற்சி தேவை. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உணவு விடயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** நல்லவர்களின் ஆலோசனையும், உதவியும் கிடைக்கும். நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** நம்பகத்தன்மை இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.




## அலைபேசிகளின் சண்டை

SAMSUNG : நான் மட்டும் தான் எல்லோருடைய கையிலும் இருக்கிறேன்.
IdPHONE : இல்லை...நான் தான் ரொம்ப ஃபேமஸ்.
SONY : டேய் சும்மா கத்தாதீங்கடா.என்னைத் தாண்டா எல்லாருக்கும் பிடிக்கும்.
NOKIA: தம்பிகளா, நீங்க எல்லாம் இன்னைக்கி வந்தவங்கள். நான் தான் பழைய ஆளு. நான் இல்லாத இடமே இல்லை.
MOTOROLA: எங்க அம்மா சத்தியமா நானும் பேமஸ் தாண்டா.
HTC: நான் ரெம்ப பெறுமதியான ஆளு...வி.ஐ.பி கிட்ட மட்டும் தான் இருப்பேன்.
CHAINA SET: ஹாஹாஹாஹா போடா... அந்த ஆண்டவனே(ஏழை) என் பக்கம் இருக்கான்டா.



## கன்னடத்துக்குத் தாவினார் அர்ஜுன் மகள் ஐஸ்வர்யா

நடிகர் அர்ஜுன் மகள் ஐஸ்வர்யா, "பட்டத்து யானை" படத்தில் விஷால் ஜோடியாக நடித்தார். எதிர்பார்த்தளவுக்கு ஐஸ்வர்யாவுக்கு படம் வராததால் ஏமாற்றம் அடைந்தார். தந்தை அர்ஜுன் இயக்கத்தில் நடிக்க வேண்டும் என்று அவர் அவ்வப்போது தனது ஆசையை வெளிப்படுத்தி வந்தார். இந்த நிலையில் கன்னட மொழிப் படங்களில் ஹீரோயின்களுக்கு இடையே போட்டி குறைவு. விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கே அங்கு ஹீரோயின்கள் உள்ளனர். அதில் தனது அதிர்ஷ்டத்தைப் பரிசோதிக்க முடிவு செய்திருக்கிறார் ஐஸ்வர்யா. அர்ஜுனிடம் இதுபற்றி சொன்னதுடன் படத்தை நீங்களே இயக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதற்குச் சம்மதம் கிடைத்தது. ஐஸ்வர்யா நடிகையாக மட்டுமல்லாமல் இந்தப் படத்தின் தயாரிப்பாளராகவும் பொறுப்பு ஏற்கிறார்.

ஏற்கனவே தமிழ், கன்னடம், தெலுங்கில் அர்ஜுன் நடிப்பு மற்றும் இயக்கத்தில் உருவான ஜெய் ஹிந்த் 2 ஆம் பாகம் படத்தை ஐஸ்வர்யா தயாரித்திருப்பதுடன் அதில் நடித்தும் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 120 | 140 | 120 | 120 |
| கத்தரி | 150 | 160 | 150 | 180 | 160 | 120 | 120 |
| கரட் | 180 | 200 | 250 | 180 | 240 | 400 | 260 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 260 | 240 | 250 | 280 | 260 | 320 | 250 |
| பாகல் | 300 | 320 | 400 | 350 | 280 | 400 | 350 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 100 | 90 | 80 | 100 | 70–80 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 100 | 140 | 130 | 160 | 130 |
| பூசணி | 50 | 60 | 60 | 50 | 40 | 80 | 40 |
| தக்காளி | 200 | 200 | 180 | 220 | 220 | 160 | 170 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 60 | 60 | 45 |
| கீரை | 60 | – | 40 | 30 | 40 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 30 | 40 | 30 | 40 | 15 |
| பச்சை மிளகாய் | 800 | 650 | 700 | 700 | 800 | 1000 | 900 |
| புடோல் | 120 | 120 | 100 | 120 | 100 | 160 | 120 |
| கோவா | 140 | 100 | 160 | 160 | 160 | 200 | 170 |
| வெண்டி | 120 | 160 | 160 | 120 | 120 | 160 | 120 |
| போஞ்சி | 300 | 280 | 300 | 280 | 260 | 320 | 250 |
| லீக்ஸ் | 200 | 160 | 160 | 180 | 160 | 200 | 260 |
| தேங்காய் | 50 | 38 | 50 | 50–60 | 40 | 55–60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 90 | 80 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 150 | 180 | 120 | 70 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 400 | – | 300 | 360 | 400 | 300 | 300–350 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 200 | 160 | 160 | 200 |

# சமையலறைச் சுத்தம்

(நேற்றைய தொடர்ச்சி)

அடுப்பிலும், சமையல் மேடையிலும் திரவ சோப்பையே ஊற்றி நன்கு தேய்த்து ஊற விட வேண்டும்.

அதன் பின்னர் தண்ணீர் ஊற்றிச் சுத்தமாகத் துடைத்தால், அடுப்பு, மேடை இரண்டுமே பளிச், பளிச்.

இரண்டு லீற்றர் அளவுத் தண்ணீரில் அரைக் கப் வினிகர், கால் கப் பேக்கிங் சோடாவைக் கலந்து சமையல் அறைத் தரையைத் துடைக்கலாம்.

போத்தலில் இருந்து வீசும் துர்நாற்றம் போக, போத்தலில் பாதி அளவு தண்ணீர் எடுத்துக்கொள்ளுங்கள். அதில் ஒரு சிட்டிகை அளவு கடுகு அல்லது அப்பச் சோடாவைப் போட்டுக் குலுக்கி ஊற வைத்துக் கழுவினால் வாடை அகன்றுவிடும். போத்தலும் பளீரிடும்.



முட்டை கீழே விழுந்து உடைந்துவிட்டால், அதன் மீது சிறிதளவு உப்பைத் தூவி, பிறகு துடைத்து எடுத்தால் சுத்தம் செய்வதும் எளிது. வாடையும் இருக்காது.

இறைச்சி வகைகளை மிக்ஸியில் அரைத்து எடுத்ததும் உடனடியாக மிக்ஸியைச் சுத்தம் செய்ய வேண்டும். ஜாரினுள் இரண்டு பாண் துண்டுகளைப் போட்டு அரைத்தெடுத்தால், பிசுக்கும் வாடையும் பறந்துவிடும்.

சமைக்கும் பொருளின் அமிலத்தன்மை, பயன்படுத்தும் தண்ணீர், தரம் குறைந்த அலுமினிய உள்பாத்திரம் போன்றவற்றால் குக்கரின் உட்புறம் எளிதில் நிறம் மாறிவிடும். எனவே சமைக்கும்போது குக்கரில் ஊற்றும் தண்ணீரில் சிறிதளவு புளி அல்லது நறுக்கிய எலுமிச்சைத் துண்டு ஒன்றைப் போட்டுவிட்டால் குக்கர் மீண்டும் பழைய பளபளப்பை அடையும்.

சமையலின்போது பாத்திரங்கள் அடிப்பிடித்தால், அதில் சோப் நீரை நிரப்பி சில நிமிடங்கள் கொதிக்கவைத்து பின் கழுவுங்கள். கறை இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும்.

கண்ணாடிப் பாத்திரங்களை உப்பும் வினிகரும் கலந்த கலவையைக் கொண்டு சுத்தம் செய்யலாம்.

உப்புச் சாடியில் சிறிதளவு சோள மாவைப் போட்டுவைத்தால், உப்பு நீர்த்துப் போகாமல் இருக்கும்.

## நாளை

மார்கழி -04
ஞாயிற்றுக்கிழமை 20.12.2015
திதி: தசமி பி.இ.02.12
நட்சத்திரம்: ரேவதி மு.இ.06.55
ராகுகாலம்: 04.54-06.24 வரை
சுபநேரம்: 09.24- 10.54 வரை






## ஆண்களுக்கும் ஷோல்

ஆண்களுக்கான ஆடை அழகை மேலும் மெருகூட்ட வர்ண வர்ண தாவணிகளின் (ஷோல்) வரவு ஆரம்பித்துள்ளது. எல்லாவிதமான ஆடைகளுக்கும் ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அலங்காரமான தாவணிகள் 500 ரூபா முதல் 650 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன. ஆண்களின் கலாசார ஆடைகளுக்கு மட்டுமல்ல நாகரிக ஆடைகளுக்கும் பொருந்தும் வண்ணம் இது வடிவமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 500 |
| நண்டு | 250 | 400 | 300 | 300 | 200 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 600 | - |
| பாரை | 450 | 500 | - | 450 | 350 | 400 |
| சுறா | 500 | 400 | - | 550 | - | 350 |
| சீலா | 250 | 500 | 400 | 350 | 300 | 350 |
| விளை | 650 | 500 | 400 | 400 | 300 | 400 |
| முரல் | 250 | 350 | 300 | 350 | 300 | - |
| கும்பிளா | 300 | 350 | 300 | 300 | 250 | 250 |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | - | - | - |
| ஒரா | 300 | 400 | 300 | - | - | - |
| திரளி | 200 | 250 | 100 | 100 | 100 | 300 |
| நகரை | 150 | 250 | 100 | 150 | - | 300 |
| ஆடை | 150 | 150 | 100 | 100 | 150 | - |
| ஒட்டி | 200 | 250 | 200 | - | - | 250 |
| திருக்கை | 150 | 300 | - | 200 | 200 | - |
| பாலை | 350 | 200 | - | 250 | 250 | - |
| வாளை | 100 | 150 | 200 | 400 | 200 | 150 |
| [illegible] | 100 | 150 | 80 | 400 | 100 | - |
| மதலம் | 150 | 250 | 300 | 250 | 300 | 250 |

# போண்டா

சமைப்போம் வாங்க

**தேவையான பொருள்கள்:**

உளுத்தம் பருப்பு – 1 கப்
மிளகு – 1 கரண்டி
உப்பு – சுவைக்கு
எண்ணெய் – பொரிக்க
தேங்காய்ப் பால் – அரைக்கப்

**செய்முறை:**

உளுந்தை அரை மணிநேரம் ஊற வைத்துப் பொங்க அரைக்கவும்.
அதில் உப்பு, மிளகு, தேங்காய்ப்பால் சேர்த்து நன்கு கல[illegible]வும்.
தாச்சியில் எண்ணெ[illegible]
உருண்டைகளாகப் போட்டு பொன்னிறமாகப் பொரிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## காரைநகர்

ளது.

இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த புதன்கிழமை இரவு 25க்கும் மேற்பட்ட ட்றோலர் படகுகளில் வடக்குக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய இந்திய மீனவர்கள் அங்கு மீன் பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த பகுதியில் கடற் கண்காணிப்பில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்களைப் பிடிப்பதற்கு விரட்டியுள்ளனர்.

இதனால் கடற்படையிடமிருந்து தப்பிக்க, விரைந்து சென்ற இந்திய மீனவர் ட்றோலர், அந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த காரைநகர் மீனவர் ஒருவரின் வலையில் சிக்கியுள்ளது.

இதனால் காரைநகர் மீனவரையும் அவரின் படகையும் அவர்கள் இழுத்துச் சென்றனர்.

இதன்போது, அச்சமடைந்த காரைநகர் மீனவர் சத்தமிட்டுள்ளார். இதனால் அவரையும் அவரின் படகையும் கடலில் மூழ்கடிக்க முற்பட்ட இந்திய மீனவர்கள், பின்னர் இலங்கைக் கடற்படையினர் நெருங்கியதையடுத்து காரைநகர் மீனவரின் வலைகளை அறுத்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

இந்த நிலையில் குறித்த ட்றோலரில் ஒன்றைப் பிடித்த இலங்கைக் கடற்படையினர், 4 மீனவர்களைக் கைது செய்து, யாழ். கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

காரைநகர் கடற்பரப்பினுள் ட்றோலர்களுடன் நுழைந்த இந்திய மீனவர்கள், தனது இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை அறுத்து நாசம் செய்ததோடு தன்னையும் படகுடன் மூழ்கடிக்கச் செய்யும் வகையில் நடந்து கொண்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

குறித்த நான்கு இந்திய மீனவர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர் எனக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த பாதிக்கப்பட்ட காரைநகர் மீனவர்,

காரைநகர் கடற்பரப்பினுள் ட்றோலர்களுடன் நுழைந்த இந்திய மீனவர்கள் எனது இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை அறுத்து நாசம் செய்ததோடு, என்னையும் படகு டன் மூழ்கடிக்கச் செய்யும் வகை யில் நடந்து கொண்டனர்.

அத்துடன், நான் தொழிலுக்காக அறக்கொட்டி வகை 30 வலைகளை எடுத்துச் சென்றிருந்தேன். அவற்றைக் கடலில் போட்டிருந்த நிலையிலேயே இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர்.

கடற்படையினரைக் கண்டவுடன் அவர்கள் தப்பியோட முற்பட்டனர். இதன்போதே எனது வலைகளைக் கவனத்தில் கொள்ளாது அறுத்து என்னையும் படகுடன் இழுத்துச் சென்றனர்.

சில நிமிடங்கள் தாமதமாகியிருந்தாலும் உயிர் பிழைப்பது சந்தேகம். அந்தளவுக்கு நான் படகுடன் இழுத்துச் செல்லப்பட்டேன்.

இதனால் எனது இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான 27 வலைகள் நாசமாகிப் போனது. 3 வலைகள் மாத்திரம் சேதமின்றிக் கிடைக்க, அவற்றுடன் உயிர் தப்பித்துக் கரை திரும்பினேன்.

மேலும் குறித்த சம்பவத்தால் எனக்குப் பாதிப்பும் நஷ்டமும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யவுள்ளேன். -என்றார். (து-வ-4)

## நிரபராதி

படைச் சிப்பாய், விசாரணைகளின் பின்னர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று நிரபராதி என விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்குத் தீர்ப்புக்காக நேற்று எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் படை முகாமொன்றில் கடமையாற்றிய இந்திக்க சஞ்சீவ என்ற படைச்சிப்பாய், கடந்த 2005 ஆம் ஆண்டு செப்ரம்பர் 5 ஆம் திகதி விடுப்பில் கொழும்புக்குத் திரும்பிய வேளை, இலங்கை இராணுவத்தின் இரகசியங்களை கிளிநொச்சியில் வைத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விற்பனை செய்துள்ளார் என குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதனால் அவர் தன்மீதான குறித்த நம்பிக்கையீனத்தால் கடமைக்குச் செல்வதனை நிறுத்திவிட்டார். பின்னர் மலேசியாவுக்குச் சென்றுள்ளார். ஆனால் பயங் கரவாத தடுப்பு பிரிவுப் பொலிஸார் கடந்த வருடம் மலேசியாவுக்குச் சென்று குறித்த படைச்சிப்பாயை கைது செய்து அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் ஒப்படைக் கப்பட்டுப் பின்னர் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த படைச் சிப்பாய்க்கு எதிராக கடந்த ஏப்ரலில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன் றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் படைச்சிப்பாய்க்கு எதிராக பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் சமர்ப்பிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது அந்த வாக்குமூலம் தன்னால் வழங்கப்பட்டிருக்கவில்லை என்று எதிரியால் மன்றில் சாட்சியமளிக்கப்பட்டது. அத்துடன் தன்னை மலேசியாவின் கோலாலம்பூரில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பரிவினர் கைது செய்திருந்தனர் என்றும் மன்றில் குறித்த படைச்சிப்பாய் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குறித்த படைச்சிப்பாயை கைதுசெய்யப்பட்ட இம்தொடர்பில் அவருக்கு எதிரான குற்றப்பத்திரத்தில் வழக்குத் தொடுநரால் குறிப்பிடப்படவில்லை.

இந்த நிலையில் குறித்த வழக்கு தொடர்பில் நீதிமன்று சில கேள்விக்ளை எழுப்பியது. சட்டத்துக்கு முரணாகக் கைது நடைபெற்றிருந்தால், சட்ட ரீதியாகக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறமுடியாது என்பது உள்ளிட்ட பல விடயங்களை நீதிமன்று சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன், வழக்குத் தொடுநர், சந்தேக நபரான படைச்சிப்பாய்க்கு எதிராக சில விடயங்களை நிரூபிக்கவில்லை என்று குறிப்பிட்டு குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்தது.

இந்த நிலையில் குறித்த படைச் சிப்பாய்க்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், குறித்த வழக்கிலிருந்து அவரை நிரபராதி என விடுவித்து தீர்ப்பளித்தார். (து-வ-4)

## இன்று பட்ஜெட்

வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது.

இதன்போது, பட்ஜெட்டுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் வாக்களிக்கவுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பட்ஜெட்டுக்கு சார்பாக வாக்களிக்கவுள்ளது. ஜே.வி.பி. பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களிக்கவுள்ளது. அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள பொது எதிரணி உறுப்பினர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்களும் எதிராக வாக்களிக்கவுள்ளனர். குறிப்பாக, மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் சிலர் மைத்திரி பக்கம் சாயும் நோக்கில் பட்ஜெட்டை ஆதரிக்கக்கூடும் என்று அறியமுடிகின்றது.

நாடாளுமன்றம் இன்று காலை 9.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல் வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிந்த பின்னர், 10 மணியளவில் தேசிய, கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுமீதான குழுநிலை விவாதம் ஆரம்பமாகும்.

12.30 மணியளவில் அது முடிவடைந்த பின்னர், நிதி அமைச்சு மீதான குழுநிலை விவாதம் மாலை 5 மணிவரை இடம்பெறும். இவ் விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, வரவு-செலவுத் திட்டத்தில் எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், அதனால் ஏற்பட்டுள்ள மேலதிக செலவீனங்கள் எவ்வாறு ஈடுசெய்யப்படும் என்றும் விவரிக்கவுள்ளார்.

அவரின் உரையின் பின்னர் பட்ஜெட்டின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு பெயர்கூவி நடத்தப்படும். பட்ஜெட் நிறைவேறிய பின்னர் கட்சித் தலைவர்களுக்கு உரையாற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

பட்ஜெட்டின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 2ஆம் திகதி நடைபெற்றது. இதற்கு ஆதரவாக 159 வாக்குகளும், எதிராக 52 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அந்தவகையில் இரண்டாம் வாசிப்பு 107 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. எனவே, மூன்றாம் வாசிப்பும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் இன்று நிறைவேறும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. (து-சி)

## ஏ.ரி.எம்.

குறித்த கிளையின் முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து முகாமையாளர் ஏ.ரி.எம் இயந்திரத்துக்கு சென்ற போது, திருடன் தப்பித்துள்ளான். இந்த நிலையில் குறித்த இடத்தில் நின்ற இளைஞர்கள் திருடனைப் பிடிப்பதற்கு முற்பட்டவேளை, அவன் தனது மோட்டார் சைக்கிள் மற்றும் கைப்பை என்பவற்றை கைவிட்டு தப்பித்துள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருநெல்வேலியில் இயங்கி வரும் தனியார் வங்கியொன்றின் கிளையில் அமைக்கப்பட்டுள்ள ஏ.ரி.எம். இயந்திரத்தில் நேற்று மாலை 4 மணியளவில் இளைஞன் ஒருவர் போலி பணப்பரிமாற்று அட்டையினைப் பயன்படுத்தி குறிப்பிட்ட தொகை பணத்தை திரு [illegible] பொருத்தப்பட்டுள்ள கமராவின் காணொலியில் அவதானித்த வங்கியின் தலைமையகத்தின் தொழிநுட்பப்பிரிவினர், அதனை உடனடியாகவே, குறித்த கிளையின் முகாமையாளருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து ஏ.ரி.எம். இயந்திரத்துக்கு சென்ற முகாமையாளரை அவதானித்த குறித்த திருடன், அவரைத் தள்ளிவிட்டுத் தப்பித்துள்ளான்.

இதனால் வங்கி பாதுகாப்பு ஊழியர்களிடம் முகாமையாளர், சம்பவத்தை தெரிவிக்க, அவர்கள் திருடனை துரத்திச் சென்றனர். அத்துடன் அந்தப் பகுதி இளைஞர்களும் திருடனைப் பிடிக்க முயற்சி செய்த போதும் அவன் தனது கைப்பை மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை கை விட்டு ஓடித் தப்பித்துள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், திருடனால் கைவிட்டு சென்ற கைப்பை மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை மீட்டுச் சென்றனர்.

மேலும், திருடனால் கைவிட்டு சென்ற கைப்பையினுள் போலியான தானியக்க பணப்பரிமாற்று அட்டைகள் பல காணப் பட்டதாக பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அண்மைக்காலமாக, குடாநாட்டில் ஏ.ரி.எம் அட்டைகள் மூலமான பண மோசடி சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-வ-4, 10)

## ஒரு கோடி

இருப்பினும், அதற்கு ஆளுங்கட்சியில் பல்வேறு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்டத்தின் பேரவைச் செயலகத்தின் மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவித்த உறுப்பினர்கள், தமக்கான பிரமாண அடிப்படையிலான நிதியை 60 லட்சத்திலிருந்து ஒரு கோடியாக அதிகரிக்கவேண்டும் என்று கேட்டிருந்தனர். இதற்குச் சபையில் பதில் வழங்கிய முதலமைச்சர், நிதி அதிகரிப்பை வழங்க முடியாது என்று பதிலளித்திருந்தார்.

இந்த நிலையில், வடக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அமர்வு, இரவு 8.20 மணிக்கு முடிவடைந்தது. அதன் பின்னர், மாகாண சபையில் ஆளும்கட்சி உறுப்பினர்கள் மாத்திரம் கூடி ஆராய்ந்துள்ளனர். இதன்போது, தமக்கான ஒதுக்கீட்டை ஒரு கோடியாக அதிகரிக்க வேண்டும். இதற்கு மறுதலிக்கும் பட்சத்தில், வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி அங்கீகாரத்தை எதிர்ப்பது என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. இதற்குக் கூட்டத்தில் கலந்து கொண்ட பல உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, நேற்றைய தினம் தேநீர் இடைவேளையின்போது முதலமைச்சர் - பிரதம செயலாளர் மற்றும் ஆளும் கட்சியின் உறுப்பினர்களின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது தமது ஒதுக்கீட்டை 60 லட்சத்திலிருந்து ஒரு கோடியாக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

இதன்போது பிரதம செயலாளர், நிதி ஆணைக்குழு 25 லட்சத்துக்கே அனுமதி வழங்கியுள்ளது. ஏனைய மாகாணங்களில் இந்த நிதியே வழங்கப்பட்டுள்ளது. இதனால் 60 லட்சத்தை விட அதிகரிப்பது கடினமானது என்று தெரிவித்துள்ளார். இதனையடுத்து, ஆகக் குறைந்தது 80 லட்சமாகவாவது அதிகரிக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இதனையடுத்து பிரதம செயலாளர், நிதி ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல் நடத்துவதாகத் தெரிவித்துள்ளார். இதற்காக எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பிற்குச் செல்லவுள்ளார். அதன் பின்னரே, இந்த விடயம் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-5-ரி5)

## அமெரிக்க

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்புடன், நேற்றுமுன்தினம் வெளிவிவகார அமைச்சுக்குச் சென்ற கலாநிதி அமி சீரைட், அங்கு இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சித்திராங்கனி வகீஸ்வராவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பாதுகாப்புத் துறை மறுசீரமைப்புகள், அமைதிப்படை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புகள் தொடர்பாக இதன்போது பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

மேலும், சிவில் சமூக பிரதிநிதிகளையும் கலாநிதி அமி சீரைட் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இதன்போது, மனித உரிமைகள் தொடர்பாக சிவில் சமூகத்தினர் தமது கருத்துக்களைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தில் ஆசிய, பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் அலுவலகத்தின் கீழ், தென்கிழக்காசிய நாடுகளுக்கான பிரதி உதவிச் செயலராக கலாநிதி அமி சீரைட் பணியாற்றுகிறார்.

இதேவேளை, அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகளுக்கு, பிராந்தியத்தின் பாதுகாப்பு மூலோபாயங்கள் மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப் படுத்தல் தொடர்பாக, ஆலோசனை வழங்கும் முதன்மை அதிகாரியாக கலாநிதி அமி சீரைட் விளங்குகிறார்.

தெற்காசியாவில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் தவிர்ந்த, இலங்கை, இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகள் மற்றும் தென்கிழக்காசிய நாடுகள், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பசுபிக் தீவுகள், திமோர் உள்ளிட்ட நாடுகளுடனான இருதரப்பு பாதுகாப்பு உறவுகளுக்குப் பொறுப்பான அதிகாரியாகவும் இவர் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-வ)

## புதிய

தென் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த குறித்த சந்திப்புத் தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கையின் எதிர்காலச் சுபீட்சம், சக்தி உற்பத்தி, சுற்றாடல் பாதுகாப்புக்கு அவசியமான திட்டங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, இனம், மதம் என்பதைப் பொருட்படுத்தாமல், எல்லோருக்கும் சம வாய்ப்பு, மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற - அமைதியான - வளமான - சமரசமான, ஒன்றுபட்ட இலங்கை என்ற வாக்காளர்களின் நோக்கை அமெரிக்கா ஆதரிக்கிறது என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் குறிப்பிட்டுள்ளார். (து-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கரணவாய், டிசெ.19

இமையாணன் அ.த.க. பாடசாலை பழையமாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. சங்கத் தலைவர் சி.வசந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில், பாடசாலையின் அபிவிருத்திப் பணிகள் பற்றிக்கலந்துரையாடப்படவுள்ளதுடன், புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளதால், பாடசாலையின் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார்.

(த-ஜ-108)

## விசேட பொதுக் கூட்டம்

வலி.வடக்கு,டிசெ.19

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்துக்கு எதிராகப் பணிப்பாளர் சபை உறுப்பினரும், முன்னாள் தலைவரும் செய்த முறைப் பாட்டைத் தொடர்ந்து மீண்டும் விசேட பொதுக் கூட்டம் யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைவாக நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி சங்க மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாக சங்க நிர்வாகத்தினால் பொதுச் சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-ஜ-86)

## தேசிய பாடசாலைகளுக்கான வெட்டுப் புள்ளிகள் வெளியீடு

கொழும்பு, டிசெ.19

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய பாடசாலைகளில் 6ஆம் தரத்தில் அனுமதிப் பதற்காக வெட்டு புள்ளிகள் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் வடக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளின் வெட்டுப்புள்ளி விவரங்கள் இங்கு தரப்படுகின்றன.

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி -169 புள்ளிகள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - 160 புள்ளிகள், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - 156 புள்ளிகள், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை - 164 புள்ளிகள், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை - 155 புள்ளிகள், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - 164 புள்ளிகள் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி - 156 புள்ளிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்மொழிப் பாடசாலைகளில் கொழும்பு றோயல் கல்லூரிக்கான வெட்டுப்புள்ளியே அதிகமாக 178 புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ)

## மரண அறிவித்தல்

### திருமதி மோகனபுஷ்பம்(குஞ்சு) பெருமாள்பிள்ளை



மலர்வு 1953.10.05 உதிர்வு 2015.12.15

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு ஜம்பட்டா வீதி, கொச்சிக்கடையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மோகனபுஷ்பம் பெருமாள்பிள்ளை 15.12.2015 அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- தெய்வானைப் பிள்ளை ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற பெருமாள்பிள்ளையின் அன்பு மனைவியும் தட்சாயினி (UK), கிரிஜாயினி காலஞ்சென்ற புவிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வர்மாவின் (UK) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜயரத்ன மலர்ச்சாலையில் (பொரளை) இன்று (19.12.2015) சனிக்கிழமை காலை 8மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் ஞாயிறு 20.12.2015 முற்பகல் 10மணியளவில் இடம் பெற்று பூதவுடல் பொரளை கனத்தை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

129/38, ஜம்பட்டா வீதி,
கொச்சிக்கடை, கொழும்பு- 15
011 239 6227

(68030) (14,16)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமகன்,
குடும்பத்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் துரைசிங்கம்



பிறப்பு:- 20.02.1942
இறப்பு:- 18.12.2015

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் துரைசிங்கம் நேற்று (18.12.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைசிங்கத்தின் பாசமிகு மனைவியும், நகுலேஸ்வரன் (நகுலேஸ் ஹாட்வெயர், அனு ஹாட்வெயர் - பண்டத்தரிப்பு), காலஞ் சென்ற புவனேஸ்வரி மற்றும் கணேஸ்வரன் (கணேஸ் ஸ்ரோர்ஸ் - பண்டத்தரிப்பு), ஜெயவதனி, கேதீஸ்வரன் (கேதீஸ் ஸ்ரோர்ஸ் சத்தியக்காட்டு சந்தை, சுழிபுரம்), ஜெயலலிதா (சுவிஸ்), சிவசக்தி (பிரான்ஸ்), சிவகுமார் (சிவம் களஞ்சியம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தமயந்தி, காலஞ் சென்ற ஜெயக்குமார் மற்றும் சியாமளா, கருணானந்தன் (பான்சி கடை சத்தியகாடு சந்தை), பாலகௌரி, காண்டீபன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), தேவமனோகரி ஆகியோ ரின் பாசமிகு மாமியாரும், கிஷாந், அனுஷாந், பிரஷாந், கிரிஷாந்,சிந்துஜா, டினோஜனன், தர்சிகா,கஜானி, நிலானி, மதுசாயினி, சரணியா, கௌதமன், புவிதாஸ், கிதுஷன், சிறிவித்தியா, தினேஷ், திவ்வியன், திகிஷன், ஜெனுஷா, ஜெனுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.12.2015) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம்.

(68025)(11,15,18)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### விக்கினராஜா சபாநாதன்

(நீர்கொழும்பு ஸ்ரீ சுமங்களா ஸ்ரோர் உரிமையாளர்)



கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட விக்கினராஜா சபாநாதன் 17.12.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கரம்பனைச் சேர்ந்த நாகமுத்து விக்கினராஜா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற சரவணையைச் சேர்ந்த சிவபாத சேகரம்பிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் (ராணி) கணவரும் பிரான்ஸைச் சேர்ந்த மங்களவாணி (சித்திரா), அமுதினி ஆகியோரின் அருமைத் தந்தையும் கந்தவேளின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும் கவினன், சபீதா, சகிதா ஆகியோரின் பேரனும் தில்லையம்பலம் (கொழும்பு), கனகாம்பிகை (கனடா) ,காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் சச்சிதானந்தன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளுக்காக 20.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் Westren Funeral Directors இல. 109 கொப்பரா சந்தி(நீர்கொழும்பு பெரிய வைத்தியசாலை அருகில்) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4 மணியளவில் தகனக்கிரியைக்காக நீர்கொழும்பு பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No- 91, St mary Street,
நீர்கொழும்பு.
T.P: 076 8563570

(68035)(12.15.17.)

தகவல்:
குடும்பத்தினர்.

### முருகர் (கன்னர்) அப்புத்துரை



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக் கொண்டவரும் அளவெட்டியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முருகர் (கன்னர்) அப்புத்துரை 15.12.2015 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் (கன்னர்) - இலட்சுமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான வன்னிக்குட்டி - சின்னப் பிள்ளை தம்பதியரின் மருமக னும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், செல்லக்குட்டி, ராசாத்தி மற்றும் சின்னத்துரை,அப்பையா, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும், தெய்வராணி, செல்வராசா (லண்டன்),தவராசா, ஜெயராணி, சிவராசா (சுவிஸ்), கனகராசா (ஜேர்மனி),மகாராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிபாலன், சசிகலா (லண்டன்), சுதாஜினி, சபாரத்தினம், நளாயினி (சுவிஸ்), சுபாஜினி (ஜேர்மனி), சுகுணா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாபாலன்- நிர்மலா, அம்பிகைபாலன் - கோபிகா, சந்திரபாலன், ரகுபாலன், துஷிதா, ஜதுஷா, டினோஜன், டிலோஷன்,ஜெனனி, ரிஷானி, நிதுஷிகா, திதுஷிகா, அசோக்குமார், சங்கீதா, ராகினி, கீர்த்தனா, சிந்துஜா, டிலக்ஷன், சகானா, லதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.12.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible], கருகப்புலம்,
அளவெட்டி.
077 662 2078, 021 205 9628

(68059) (11,15,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## பாலன் யோகரட்ணம்

(றோயல் வைன்சொப் - மானிப்பாய்)

கனகசபை வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலன் யோகரட்ணம் நேற்று (18.12.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலன் தம்பதியினரின் அன்பு மகனும் சந்திராவின் அன்புக் கணவரும் சசிதரன், சுகந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

கனகசபை வீதி,
மானிப்பாய்.
077 7448390
(c/28002)
தகவல்:
குடும்பத்தினர்.

---

திருமதி

## தனபாக்கியம் சுந்தரம்பிள்ளை



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியம் சுந்தரம்பிள்ளை 16.12.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுந்தரம் பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தெய்வானைப் பிள்னைள மற்றும் இராசேந்திரம், மனோகரன் காலஞ்சென்ற வாமதேவன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் உதயகுமார் (பிரான்ஸ்), உதயசங்கர் (ஜேர்மனி), உதயராணி (டென்மார்க்), உதயசூரியன் (பிரான்ஸ்), உதயராஜ் (பிரான்ஸ்), உதயசிறி (டென்மார்க்), உதயகுமாரி(அமுதா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீரஞ்சினி (பிரான்ஸ்), விஜயதேவி (ஜேர்மனி), சிங்கராஜா (டென்மார்க்), ரம்யா (பிரான்ஸ்), கலைவாணி (பிரான்ஸ்), கல்பனா (டென்மார்க்), தயாரூபன் (பிரதி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விக்னேஸ் (பிரான்ஸ்), துரூபன் (ஜேர்மனி), கல்கி (ஜேர்மனி), சசிக்கா (டென்மார்க்), வினோத் (டென்மார்க்), சமந்தா (பிரான்ஸ்), அரவிந் (பிரான்ஸ்), அட்சயா (பிரான்ஸ்), டிசாந் (பிரான்ஸ்), டினேஸ் (பிரான்ஸ்), அங்கயன் (டென்மார்க்), ஆதீஸ் (டென்மார்க்), அபிலாஷ் (யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி), அபினாஷ் (லிற்றில் சுட்டீஸ் மொன்டசறி) ஆகியோரின்அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.292, பிரதான வீதி,
கொழும்புத் துறை,
யாழ்ப்பாணம்.
(68065)
தகவல்:
குடும்பத்தினர்.

---

## முன்னிரவில்...

பேரவைச் செயலகம் என்பவற்றின் மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதம் இடம்பெற்றது.

மறு நாள் புதன் கிழமை முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதமும், நேற்று முன்தினம் வியாழக் கிழமை விவசாய அமைச்சு - கல்வி அமைச்சு மீதான விவாதமும், நேற்று சுகாதார அமைச்சு - போக்குவரத்து, மீன்பிடி அமைச்சு மீதான விவாதமும் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வு இரவு 8.20 மணிக்கு நிறைவடைந்திருந்த நிலையில், நேற்றைய இறுதி நாள் அமர்வு அதனையும் தாண்டி இரவு 8.30 மணிக்கு முடிவடைந்தது. மேலும், மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நிறைவேற்றப்பட்ட வரவு - செலவுத் திட்டம் இரண்டிலும், விவாதத்தின் இறுதியில் வரவு - செலவுத் திட்டம் அங்கீகாரத்துக்காக நிதி அமைச்சரும் முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரனால் சமர்ப்பிக்கப்பட்டு வந்தது.

நேற்றைய தினம் முதல் தடவையாக, முதலமைச்சர் இன்றி இடம்பெற்றது. முதலமைச்சர் தனிப்பட்ட அலுவல் காரணமாகச் சென்றிருந்தமையினால் அவர் பங்கேற்கவில்லை என்று தெரிவித்த அவைத் தலைவர், இதன் காரணமாக பதில் நிதியமைச்சராக, கல்வி அமைச்சர் த.குருகுலராஜா செயற்படுவார் என்று தெரிவித்தார். இதற்கமைய த.குருகுலராஜா வரவு - செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார். வரவு - செலவுத் திட்டம் எதுவித எதிர்ப்பும் இன்றி இரவு 8.25 மணியளவில்ஏற்றுக்கொள்ளப் பட்டது. (த-5-ரி5)

## மீள் குடியேற்ற

உள்ள மீள்குடியேற்றத் தேவைகள் தொடர்பில் ஆராய்வதற்காக மாவட்ட மட்டத்திலான கூட்டங்களையும், மாகாண மட்டத்திலான கூட்டங்களையும் நடத்தி மாகாணத்தின் மீள்குடியேற்றத் தேவைகள் தொடர்பில் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணித்திருந்தார்.

இதற்கமைய வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் கூட்டங்கள் நடைபெற்று முடிந்துள்ளன.இதன்அடுத்த கட்டமாக, ஜனாதிபதிக்கு அறிக்கை கையளிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

போர் பாதிப்புக்கள், மீள் குடியேறியுள்ள மக்களுடைய தேவைகள் தொடர்பில் இந்தக் கூட்டங்களின்போது ஆராயப் பட்டுள்ளன. இதனடிப் படையில் 5 மாவட்டங்களிலும் மாவட்டச் செயலர்களிடமிருந்து மீள்குடியேற்றம் தொடர்பான தகவல்களும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனடிப்படையில் படையினர், பொலிஸார், கடற்படையினர், வைத்திருக்கும் காணிகள் மற்றும் மீள்குடியேறவேண்டிய மக்கள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மாகாணத்திற்கான மீள்குடியேற்ற கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது.. அந்த கொள்கை உருவாக்கும் பணிகள் இரண்டு வாரங்களில் முடிவுறவுள்ளது. அதன் பின்னர் ஜனாதிபதியுடன் சந்திப்பு இடம்பெறவுள்ளது. இதன்போது மீள் குடியேற்ற கொள்கை கையளிக்கப்படவுள்ளது. (த-5-ரி5)

---

# மரண அறிவித்தல்கள்

திருமதி **வள்ளிப்பிள்ளை (கனகம்மா) முருகேசு**

பருத்தித்துறை கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை முருகேசு நேற்று (18.12.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மணிவாசா"
கல்லூரி வீதி, பருத்தித்துறை.
(C/15849) (10.17)
தகவல்: குடும்பத்தினர்
தொ.இ: 077 1233133, 077 3155589.

---

## முத்துத்தம்பி தங்கரத்தினம்

(அப்புலிங்கம்)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தட்டா தெரு சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி தங்கரத்தினம் (அப்புலிங்கம்) நேற்று (18.12.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கெங்காதேவி, வீரலட்சுமி, இரத்னவேலு, குஞ்சு மற்றும் மனோகரன் (கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான திருக்கேதீஸ்வரன் (ராசன்), கதிர்காமநாதன் (இத்தினி) மற்றும் பத்மராணி, சத்தியராணி, தவராஜசிங்கம் (சின்னராசா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமார், சுகுமார், கமலராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் பேரப் பிள்ளைகளின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

73, கல்லூரி வீதி, தட்டாதெரு
சந்தி, யாழ்ப்பாணம்.
(68046)
தகவல்:
குடும்பத்தினர்.

---

## நாகேஸ்வர ஐயர் முத்துசாமிக்குருக்கள்



யாழ்ப்பாணம் கடைத்தெரு வேம்படி சித்திவிநாயகர் கோயில் முதல் மூத்த பிரதம குருவும் யாழ் வண்ணார் பண்ணை வாலம்பிகை சமேத வைத்தீஸ்வரர் கோயில் மகோற்சவ குருவாகவும் இருந்த நாகேஸ்வர ஐயர் முத்து சாமிக் குருக்கள் 15.12.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியம் அம்மாவின் கணவரும் விஜயகாந்தக் குருக்கள், ஹேமமாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அரவிந்தக்குருக்கள், கிரிஜாம்பாள் ஆகியோரின்மாமனாரும் பிரதீபன்சர்மா, சௌபாக்கியா, சுகன்யா, ஆராதனா, ஆர்த்திகன், அபிஜிதன், சற்குனேஸ்வரசர்மா, கனிஷ்டிகா ஆகியோரின் பேரனும் மிருத்வியின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.12.2015 புதன்கிழமை அராலியில் உள்ள அவரது பேரனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகள் எதிர்வரும் 24.12.2015 வியாழக்கிழமை காலை தசாஹம் 25.12.2015 வெள்ளிக்கிழமை இடபதானம், ஏகோதிட்டம், மாசியம் 26.12.2015 சனிக்கிழமை சபிண்டீகரணம் 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை கிருகளுக்யம், சமாராதனை போன்ற நிகழ்வுகள் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
(68066)
தகவல்:
வி.பிரதீபக்குருக்கள்
(பேரன்)
077 4 44 920

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

படைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தர்க்கம் புரிந்தனர்.

வடக்கு மாகாண சபையின் வரவு–செலவுத் திட்ட விவாதம் கடந்த 15 ஆம் திகதியிலிருந்து இடம்பெற்று வருகின்றது. கடந்த மூன்று தினங்களாக சபை அமர்வுகள் சுமுகமாக இடம்பெற்று வந்தது. ஒரு உறுப்பினர் உரையாற்றும் போது இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டு பேசுவது எதுவும் இடம்பெறவில்லை. இதனால் விவாதம் அமைதியாக இடம் பெற்றது.

நேற்று இரவு 7 மணி வரையில் விவாதம் சுமுகமாகவே இடம் பெற்றது. இதன் பின்னரே இந்தத் தர்க்கம் மூண்டது. ஆளுங்கட்சி உறுப்பினர் க.சிவாஜிலிங்கம், நாடாளுமன்றத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேசியமை தொடர்பில் பிரஸ்தாபித்தார். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் கருத்துத் தெரிவித்தார்.

இதனையடுத்தே கடும் சொற்போர் மூண்டது. இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர். இதன்போது, அவையிலிருந்த ஆளுங்கட்சி உறுப்பினர்களில் ஒரு தொகுதியினர், இந்த மோதலை அவைத் தலைவர் உடனடியாக கட்டுக்குள் கொண்டு வரவில்லை என்றால், சபையை விட்டு வெளியேறுவோம் என்று தெரிவித்தனர்.

இதனையடுத்து அவைத் தலைவர், குறித்த விடயங்கள் யாவும் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும் என்று தெரிவித்தார். இதனையடுத்து சபை சுமுகநிலைக்கு வந்தது.

(த-5-ரி5)

## இலங்கை...

ஜனநாயகம் தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்றில் பங்கேற்கவே, நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ இலங்கை வரவுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் வெளிவிவகாரச் சேவை இப்போது வலுவானதாக இருப்பதாகத் தெரிவித்துள்ள பிரதமர், அதனால், வெளிநாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள முடிந்திருப்பதாகவும் கூறினார்.

(த-வ)



### தவறிவிட்டது

சிவசுப்பிரமணியம் கவிதாஸ் ஆகிய எனது 843344089 V இலக்கமுடைய தே.அ. அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், A.T.M அட்டை அடங்கிய பேஸ் சிறுப்பிட்டிக்கும் - இருபாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

(c/15851) **078 2832 289**

### வாடகைக்கு

நல்லூர் பகுதியில் அரச பணிபுரியும் பெண்கள் இருவருக்கு சமையல்அறை வசதியுடன் கூடிய அறை வாடகைக்கு விடப்படும். முற்பணம் எதிர்பார்க்கப்படும்.

(68041) **071 4620 806**

உ

### காரைநகர்
### கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் தெய்விக கலையரங்கு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 2015.12.20 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5 மணி

நிகழ்வுகள்

திருவாசகம் ஓதல் :
புஷ்பாஞ்சலி :
சொற்பொழிவு : கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள்
விடயம் : "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை"
மிருதங்க இசை :
இசைக்கச்சேரி : இராககுரபி காரை பரமேஸ்வரி கணேசன் சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்
நாடகம் :
நடன அர்ப்பணம் : செல்வி சற்குணராசா மீரா (இலண்டன்)
சிறப்பு பட்டிமன்றம்
தலைப்பு : மாறிவரும்சமூகச் சூழலில் இளையதலைமுறை.

குறிப்பு:
2. [illegible] பி.ப 4.00 மணிக்கு ஆரம்பமாகும்.

பெற்றது அதிகமா? இழந்தது அதிகமா?
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்.

### பழைய மாணவர் சங்கம்
### புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை
### வருடாந்த பொதுக்கூட்டம் - 20.12.2015

எமது சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமானது 20.12.2015 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் திரு.ஏ.ஜே.ஜே.சுரேந்திரராஜ் அவர்கள் தலைமையில் கல்லூரியின் புனிதவளனார் விடுதிச்சாலையில் (இளவாலை) நடைபெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்
புனிதஹென்றியரசர் கல்லூரி இளவாலை.

(சி/15847)
(11,15,17,18)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 30 • 11 • 1943

சிவன் சேவடியில் 19 • 11 • 2015



அமரர்
வைத்திய கலாநிதி - வைத்திய பூபதி
**Dr.சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வரா**

கடந்த 19.11.2015 அன்று சிவனடிசேர்ந்த எங்கள்அன்புத்தெய்வம் அமரர் Dr.சுப்பிரமணியம் ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (19.12.2015) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதினால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவையொட்டி இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களிற்கும் பலவழிகளிலும் உதவிகள் வழங்கிய அனைவரிற்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக தயவு செய்து ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்,

இல.10, சின்னக்கிணற்றடி ஒழுங்கை,
கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
**0777 184259**

### வேலைவாய்ப்பு

யாழ்ப்பாண வை.எம்.சீ.ஏ நிறுவனத்திற்கு

- அன்றாட வேலைகள் செய்வதற்கு (Room Boy) (ஆண்)
- வரவேற்பாளர் (Receptionist) (ஆண்)

விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விண்ணப்பங்களை 26.12.2015 இற்கு முன்னதாக பொதுச்செயலாளர், வை.எம்.சீ.ஏ 109, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பொதுச்செயலாளர்

(c15846)
(14,15,18)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
சுவாமிநாதபிள்ளை இராசமனோகரன்

19.11.2015 ஆம் திகதி இறைபதமடைந்த அமரர் சுவாமிநாதபிள்ளை இராசமனோகரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஊழியர் நலன்புரி சங்கம்
தே.வி.அ.அ.சபை
யாழ்ப்பாணம்.



உ

Govt.Reg.No:571/2007

### திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளை

அனைவரும் சாப்பிட வாருங்கள்

சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலுக்கு தரிசனம் செய்யவரும் பக்தர்களுக்கு தினமும் மதியம் இலவச அன்னதானம்

மார்கழி ஆருத்ரா தரிசன திருவிழா சிறப்பு அன்னதானம் செய்திடுவீர்!

17.12.2015 அன்று கொடியேற்றம், 25.12.2015 தேர்த்திருவிழா, 26.12.2015 ஆருத்ரா தரிசனம்

மன்மத வருடம், மார்கழி மாதம் முதலாம் திகதி, 17.12.2015 வியாழன் முதல் 28.12.2015 வரை 15 தினங்கள் நடைபெறும் ஆருத்ரா தரிசன திருவிழாவுக்கு வரும் பக்தர்களுக்கு தினமும் மதியம் 1000 நபர்களுக்கு, வடை, பாயாசத்துடன் சிறப்பு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதற்கு தங்களால் முடிந்த அளவு தர்மம் செய்து பக்தர்களின் பசியை போக்கி, ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமந் நடராஜ மூர்த்தியின் அருளை பெற வேண்டுகின்றோம். இதற்கு முறையான இரசீது, 80G நகல், PAN Card நகல் & ஸ்ரீ நடராஜர் பிரசாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

1000 நபர்களுக்கு இந்திய ரூபா 50,000/- 100 நபர்களுக்கு இந்திய ரூபா 5,000/- 10 நபர்களுக்கு இந்திய ரூபா 500/-

பச்சடி, பொரியல், கூட்டு, சாதம், சாம்பார், ரசம், வடை, அப்பளம், சித்ரான்னம், பாயாசம், மோர், ஊறுகாய்

A/c Name: Thiruchitrambalam Annadhana Arakattalai
Bank: SBI Chidambaram Branch
Current A/C No: 30263863248
IFSC Code : SBIN 0000823
Website: Thiruchitrambalam.org
E-mail: santhanasubramani1969@yahoo.com
Twitter: navathandavam

E-mail: anandhancdm2015@gmail.com
உடன் தொடர்புக்கு:




சி.நவதாண்டவ தீக்ஷிதர்
22/10 கீழ் சன்னதி,
சிதம்பரம் - 608 001.
செல் : 93455 12976, 7639043896


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணி சுமாரான தொடக்கம்; மழையின் தாக்கம் இன்றும் இருக்கலாம்


நியூசிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதலாம் நாளில், முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அவ்வப்பொழுது இடம்பெற்ற மழையின் குறுக்கீடுகளையும் எதிர்கொண்டு நாள் முடிவில் 264-7 என்ற நிலையில் உள்ளது.



நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து, களத்தடுப்பைத் தெரிவு செய்ய, ஆரம்ப வீரர்களாக கருணாரத்னவுடன் மெண்டிஸ் களமிறங்கினார். 50 ஓட்டங்களை எட்டுவதுக்குள் ஆரம்ப வீரர்கள் இருவருமே பவிலியனுக்குத் திரும்பினர். ஜெயசுந்தர, சந்திமல்இணை மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டியது இலங்கை. 26 ஓட்டங்களில் ரண் அவுட் ஆனார் ஜெயசுந்தர. ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் அடித்து ஆடினார் சந்திமல். அடிக்கொரு தடவை பவுண்டரிகள் விளாசி அரைச் சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். ஆனால் 3 ஓட்டங்களால் அரைச் சதத்தைத் தவறவிட்டார். தற்பொழுது இலங்கை 121-4. மத்தியூஸ் - சிறிவர்தனஇணையால்இலங்கையின் இலக்குச் சரிவுகள் இல்லாமல் செய்யப்பட்டன. இணைப்பாட்டமாக 138 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 62 ஓட்டங்களுடன் இணைப்பாட்டத்தை உடைத்துச்சென்றார்சிறிவர்தன. விதானகே, கேரத்ஆகிய இருவராலும் 5 ஓட்டங்களைக்கூடப் பெற முடியவில்லை.

மழையின் தாக்கம் அவ்வப்போது இடம்பெற, நாள் முடிவில் இலங்கை 264 - 7 என்ற நிலையில் உள்ளது.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக போல்ட், சவுத்தி இருவரும் தலா இரு இலக்குகளையும் பிரேஸ்வெல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். மழையின் தாக்கம் இன்றும் தொடரலாம் என கமில்டன் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. மழையால் ஆட்டம் பாதிப்படைந்து சமநிலையில் முடிவடையுமானால், முதலாவது ஆட்டத்தை வெற்றி பெற்று 1:0 என முன்னிலையில் இருக்கும் நியூசிலாந்து தொடரைக் கைப்பற்றும். (ம)




## ஒலிம்பிக் தொடருக்கு முன்னதாக களமிறங்குகிறார் உசைன் போல்ட்

ஒலிம்பிக் தொடருக்கு முன்னதாக இங்கிலாந்தின் தடகளத் தொடரில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளார் மின்னல் வேகமனிதர் என்று அழைக்கப்படும் உசைன் போல்ட்.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த வருடம் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. ஒலிம்பிக்கில் 6 தடவைகள் தங்கப்பதக்கம் வென்ற போல்ட், ரியோ ஒலிம்பிக் தொடருக்கு முன்னதாக இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள தடகளத் தொடரில் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக போல்ட், "ரியோ ஒலிம்பிக்கிலும் தங்கம் வெல்வதுதான் எனது சிந்தனை. இதற்காகக் கடினமான பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன். ஒலிம்பிக்கிற்கு முன்னதாக இங்கிலாந்து தடகளத் தொடரில் கலந்துகொள்ள உள்ளமை மகிழ்ச்சி தருகிறது. இது ஒலிம்பிக்கில் எனது ஆயத்தத்துக்கு உதவியாக அமையும்." என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

### செல்சி கால்பந்தாட்ட அணியின் வீரர்கள் பெறும் ஊதியத்துக்கு உழைக்க வேண்டுமாம்

இங்கிலாந்தின் கால்பந்தாட்டக் கழகங்களில் அசைக்க முடியாத சக்தியாக இருந்த செல்சி அணி, சமீபகாலமாக அடிமேல் அடி வாங்கி வருகிறது. அந்த அணியின் தொடர்த் தோல்விகளை அடுத்து கழக வீரர்கள் தாம் வாங்கும் மிகப்பெரும் ஊதியத் தொகைக்கு நியாயமாக விளையாட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் கழகத்தின் மூத்த வீரரான சீஸ்க் பப்ரிகாஸ்.

இது தொடர்பாக பப்ரிகாஸ் தெரிவிக்கையில் - "செல்சி தனது வீரர்களுக்கு வழங்கும் ஊதியத் தொகை மிகவும் அதிகமானது. நாம் எமது நிர்வாகத்




திடம் இருந்து அதிகமாக ஊதியம் பெறுகிறோம். எனவே நாம் அதிகமாக விளையாட வேண்டும். எமக்கு வழங்கப்படும் ஊதியத்துக்கு நியாயமானவர்களாக நடந்து கொள்ள வேண்டும். கடின முயற்சியின் மூலம் மீண்டெழுந்து எஞ்சியுள்ள ஆட்டங்களில் சாதிக்க வேண்டும். செல்சி அணியை அதன் பழைய நிலைக்குக் கொண்டு செல்ல



## டோனியை எதிர்கொள்ள ரவீந்திர ஜடேயா அச்சம்

ஐ.பி.எல். தொடரில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட புனே அணிக்காக டோனியும், ராஜ்கோட் அணிக்காக ஜடேயாவும் ஒப்பந்தமாகியதை அடுத்து டோனியை எதிர்கொள்வது கடினம் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் சகலதுறை வீரரான ஜடேயா.

அடுத்த சீசனில் டோனியை நேருக்கு நேர் எதிர்கொள்ள இருப்பது குறித்து ரவீந்திர ஜடேயாவிடம் கேட்டபோது, "டோனிக்கு பந்து வீசுவது மிகப்பெரிய சவால். அதுவும் குறுகிய நேர கிரிக்கெட்டில் அவரைக் கட்டுப்படுத்துவது கடினம். ஆட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதில் வல்லவர் என்பதை டோனி நிரூபித்துள்ளார். ஆனால் அவருக்கு எதிராக எனது முழுத் திறமையையும் வெளிப்படுத்த முயற்சிப்பேன். அவருடன் நீண்டகாலம் ஒன்றாக விளையாடிய அனுபவம் ராஜ்கோட் அணியில் அசத்த உதவியாக அமையும்." என்றார். (ம)

## பெடரரின் ஓய்வு காலம் இப்போதைக்கு இல்லை

அடுத்த வருடமும் (ரியோ ஒலிம்பிக் தொடருக்குப் பின்னரும்) ஓய்வுபெறும் எண்ணமில்லை என்று தெரிவித்துள்ளார் சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள பெடரர்.

அடுத்த வருடம் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. 36 வயதான பெடரர், ஒலிம்பிக் தொடரில் தனிநபர் ஆட்டங்களிலும் கலப்பு இரட்டையர் ஆட்டங்களிலும் பங்கேற்கவுள்ளார். எனினும் ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் பங்கேற்பது குறித்து அவர் இதுவரை முடிவு செய்யவில்லை. ஒலிம்பிக் தொடருடன் பெடரர் ஓய்வுபெறுவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. தனது ஓய்வு தொடர்பாக பெடரர் தெரிவிக்கையில் - "எனக்கு வயதாகிவிட்டது என்



பதை நான் உணராமல் இல்லை. என்னைப் பொறுத்தவரை வயது என்பது சாதிப்பதற்குத் தடை அல்ல. அது ஓர் எண் கணக்கு. அடுத்த வருடம் முழுவதும் விளையாடத் திட்டமிட்டுள்ளேன். உடல்நிலை இடம்கொடுக்கும் பட்சத்தில் அடுத்த மூன்று ஆண்டுகள் வரை தொடர்வேன்." என்றார். (ம)

## சீர்கெட்டுக் கிடக்கும் தீவுகள்; டுவைன் பிராவோ அதிருப்தி

மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் நிர்வாகம் சீர்கெட்டுக் கிடப்பதாக அந்த அணியின் சகலதுறை வீரர் டுவைன் பிராவோ குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் வீரர்களுக்கும் இடையே மோதல்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. இதன் காரணமாகவே பிராவோ 2015 ஆம் ஆண்டின் உலகக் கிண்ணத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகளின் அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார். பிராவோ மட்டுமல்லாமல், பொலார்ட், சமி போன்ற வீரர்களும் ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களுக்கான அணிகளில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளனர். குறித்த விடயம் தொடர்பாக மனம் திறந்துள்ளார் பிராவோ.

அவர் தெரிவிக்கையில் - தீவுகளின் கிரிக்கெட் நிர்வாகம் கவலைக்குரியதாக உள்ளது. எமது நாட்டில் ஏராளமான சிறப்பான



வீரர்கள் உள்ளனர். ஆனால் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தனது தனிப்பட்ட நலனுக்காக வீரர்களைப் பயன்படுத்துகின்றது. இதுவே தீவுகளின் கிரிக்கெட் திறனை அழிவை நோக்கிக் கொண்டு செல்லக் காரணமாக அமைகிறது. பொலார்ட், சமி உள்ளிட்ட சகலதுறை வீரர்களை அணியில் இருந்து நீக்கியுள்ளனர். இவர்களால் இன்னும் 5 வருடங்கள் சிறப்பாகச் செயற்பட முடியும். அவ்வாறிருக்கையில் ஏன் இந்தப் புறக்கணிப்பு" - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதி, இருதயராஜா அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 19
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வளர்மதி, இருதயராஜா அணிகள் வெற்றி பெற்றுள்ளன.
உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதிக் கொண்டது. இதில் வளர்மதி அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.ஜக்கிய அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி மோதிக் கொண்டது. இதில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)

# கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், டிசெ. 19
கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட அணிக்கும், 19வயதுக்கு உட்பட்ட அணிக்குமான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக கிளிநொச்சி கால்பந்தாட்ட சங்கத்தினால் கிளிநொச்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் தொடர் நடத்தப்படவுள்ளது.
குறித்த தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் தங்களது பதிவுகளை கிளிநொச்சி கால்பந்தாட்டச் சங்கத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.
19வயதுக்கு உட்பட்ட அணியின் வீரர்கள் 1997ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். (ம-23)

# அல்மாதர் அணியை வீழ்த்தியது அம்மன்

யாழ்ப்பாணம், டிசெ. 19
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வவுனியா மாவட்ட ஆட்டம் ஒன்றில் அல்மாதர் அணியை வீழ்த்தியுள்ளது அம்மன் அணி.
இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ கிண்ணத்திற்கான வவுனியா மாவட்ட காற்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. அதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்மாதர் அணியை எதிர்த்து அம்மன் அணி மோதிக் கொண்டது. இதில் அம்மன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(23)



ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை முதல் நுவரெலியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றுவருகிறது. இதில் 51 தொடக் கம் 55 வயது வரையான பிரிவில் பெண்களுக்கான தட்டெறிதலில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த திருமதி மு.கலாவதி வெள்ளிப் பதக்கத்தையும் 25 தொடக்கம் 30 வயது வரையான பிரிவில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் புதுக் குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி எஸ். திருமகள் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர். (ம-422)

# கோலூன்றிப் பாய்தலில் வடக்குக்கு தங்கமும் வெண்கலமும் கிடைத்தன

யாழ்ப்பாணம், டிசெ. 19
41ஆவது தேசியமட்ட தடகளத் தொடரில் வடமாகாணத்துக்கு ஒரு தங்கப் பதக்கமும், ஒரு வெண்கலப் பதக்கமும் கிடைத்துள்ளது.
பியகம மகிந்த ராஜபக்ச சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றுவரும் இந்தத் தடகளத் தொடரில், நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய அனித்தா 3.25 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், காவேரி 2.85 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர். (ம-23)



காவேரி



அனித்தா

## இன்றைய மோதல்கள்

**றோயல் வி.கழகத் தொடர்**
யாழ்ப்பாணம், டிசெ. 19
ஊரெழுறோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்றுசனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் 5 ஸ்ரார் அணியை எதிர்த்து சென்.பீற்றர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து காந்திஜி அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணத் தொடர்**
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஏவ்.ஏ. கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத்தொடரில், வவுனியா மாவட்டத்துக்கான ஆட்டங்கள் வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் 786 அணியை எதிர்த்து சண் சைன் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்ஹிஜிரா அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதவுள்ளது.

**பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கத் தொடர்**
இலங்கைப் பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் 13வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.

**கலைமதி வி.கழகத் தொடர்**
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் முன்னெடுத்துவரும் (அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் தொடர்) கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

## யாழ். - புத்தளம் செவ்வாயன்று மோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 19
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிராந்தியங்களுக்கு இடையிலான 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று எதிர்வரும் செவ்வாய்கிழமை 22ஆம் திகதி காலை 9 மணிக்கு அரியாலையில் அமைந்துள்ள கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து புத்தளம் பிராந்திய அணி மோதவுள்ளது.
(ம-23)



ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை முதல் நுவரெலியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றுவருகிறது. இதில் யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் 55 தொடக்கம் 60 வயது வரையான பிரிவில் ஈட்டி எறிதல், தட்டெறிதல் போன்றவற்றில் தங்கப்பதக்கத்தையும் உயரம் பாய்தலில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளார். (ம-422)

## அல் இக்பாலை வீழ்த்தியது ஈகிள்ஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 19
எவ்.ஏ.கிண்ணத்துக்கான வவுனியா மாவட்ட தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் ஈகிள்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ.கிண்ணத்துக்கான தொடரின் வவுனியா மாவட்டத்தின் ஆட்டங்கள் வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் கடந்த புதன்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து அல்இக்பால் அணி மோதிக் கொண்டது. இதில் ஈகிள்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச ஆங்கில வகுப்பு

இடம்: ELAS Institute (யாழ். பல்கலை எதிரில்)
Time:- 9 am to 1 pm 20/12/2015 ஞாயிறு

நான்கு மணித்தியாலயத்தில் ஆங்கிலம்
பதிவுகளுக்கு முந்துங்கள்

Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
Contact No: 076 697 3040, 021 221 2410


## புனேயின் பயிற்சியாளராக பிளமிங்?

ஐ.பி.எல். தொடரில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட புனே அணியின் பயிற்சியாளராக ஸ்ரீபன் பிளமிங் நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளுக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டதன் பின்னர், பதில் அணிகளாக புனே, ராஜ்கோட் அணிகள் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டன. இதில் புனேயின் தலைவராக டோனி செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் ஸ்ரீபன் பிளமிங் புனேயின் பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)




NEW SCIENCE WORLD
Navalar Road - Brown Road Junction, Jaffna.

CHEMISTRY
வாயுக்கள்
A/L 2017 Batch
ஆரம்பம்: 19.12.2015 சனி
9.30 - 11.30 am
By.Mr.K.T. SHIVAKUMAR
(B.Sc, PGDE)
(c/15843)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி ஐயாத்துரை



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி ஐயாத்துரை நேற்று (18.12.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, வல்லிபுரம், சின்னையா, பரிபூரணம், பாக்கியம் மற்றும் கண்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பத்மாதேவி, மகாலிங்கம், சாரதாதேவி, யோகேஸ்வரி, றஞ்சினிதேவி, சுலோசனாதேவி ஆகியோரின் அன்புத் தாயும், மகேந்திரன், அமிர்தவல்லி, காலஞ்சென்ற பற்பநாதன், குணசிங்கம், குவேந்திரநாதன், மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியும், தர்மசீலன், சதீஸ்கலா, கஜேந்திரன், சதீஸ்குமார், பௌசிகா, லாவண்யா, அஜித், லக்ஷன், வக்ஸ்சலா, சுதாஸ்கலா, கௌசி, பௌஸ்லன், சுரேகா, சுதர்சன், சுஜிதா, சுஜந்தன், கியெந்தி, சுமன், ஷயந்தினி, நிரோசன், நிவாசன், கிரிசோபன், திலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விதுசன், அபிதா, வர்ணியா, கன்சிகா, தீபிகா, சஜீஸ், திவ்யன், தஜீவ், கரணி, தினுஜ், கயானா, மயூரதி, யுகேஷ், சானுஜா, சர்வதன், வர்னுஜா, சஜானா, வருண், வர்ஷா, மதுரசங்கீத், மதுரநாத், நிஷேன், நிஷ்மிகா, ஜிதேஷ், ஜஸ்விந்தன், நிருஷி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.170, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு. (J/15848) (10.17)

தகவல்: குடும்பத்தினர்.
077 224 7676

## மரண அறிவித்தல்

### கிருபராஜா மதுசூதனன்

(முன்னாள் பணியாளர் Lanka ECo Sri (Pvt) Ltd.)



சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருபராஜா மதுசூதனன் நேற்று (18.12. 2015) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் கிருபராஜா-பத்மராணி தம்பதியரின் அன்பு மூத்த மகனும், மதுராஜ் (முகாமை உதவியாளர், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம்- நிர்வாகம்) லக்ஷிகா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேல், இலட்சுமிப்பிள்ளை, செல்லத்துரை மற்றும் பவளமணி ஆகியோரின் அன்பு பேரனும், தேவராஜா (பிரான்ஸ்), தயாளன் (லண்டன்), காலஞ்சென்ற பத்மலோஜினி மற்றும் பத்ம ரஜனி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு பெறாமகனும், பகீரதன், சிறிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.12.2015 திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(68044) (10.17)


# NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

Navalar Road - Brown road Junction, Jaffna.
Telephone : 077 336 4055

A/L 2018 கணித, உயிரியல் பிரிவுகள்

ஆரம்பம்: 21.12.2015
திங்கள்
சுபநேரம் காலை
07.00மணி

தமிழ்மொழி மூலம்

பௌதிகவியல்
திரு. R. குமரன்
திரு. R. குகன்

இரசாயனவியல்
திரு. K.T. சிவகுமார்
திரு. டயஸ்

உயிரியல்
திரு. S. பொன்திவாகரன்
திரு.V. உமாசங்கர்

இணைந்த கணிதம்
திரு. S.S. செந்தில்றாஜ்

English Medium

Physics
Mr.R.Kumaran

Chemistry
Mr.Dias

Biology
Mr.V.Umashanger

Com.Maths
Mr.S.S.Senthilraj

A/L 2018 விஞ்ஞானப், பிரிவு மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் அன்றைய தினம் காலை 07.30 - 08.30 வரை இடம்பெறும். மாணவர்களின் நலன் கருதி அனைத்துப் பெற்றோர்களும் தவறாது கலந்துகொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.